புதிய சமுதாயம்

KDN 0131 / 78

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

23



PUTHIYA SAMUDHAYAM

50 சென்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2009 மாசி 13

கம்பம் 1 ∴ (25-2-1978) ∴ குடும்பம் 23

தொழிலாளர் கல்லூரி

தேசியப் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் மலேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸின் உதவியோடு ஏறத்தாழ ஒரு கோடி வெள்ளி செலவில் கோலக்கிள்ளானுக்கு அருகே பண்டமாரானில் நிர்மாணித்திருக்கும் தொழிலாளர் தொழில் நுட்பக் கல்லூரிக்கு, நாடெங்குமுள்ள தோட்டத் தொழிலாளர்கள் மாதம் 10 காசு வீதம் நிதி உதவி அளிக்க முன் வந்திருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கது. பத்துக்காசு என்பது கொடுக்கின்ற தொழிலாளர்களுக்கு அற்பமான தொகையாக இருந்தபோதிலும் மூன்று லட்சம் தோட்டத் தொழிலாளர்களும் ஒருமித்து வழங்க இருக்கின்ற இந்த நிதி உதவியின் மூலம் தொழிலாளர் கல்லூரிக்கு ஒவ்வோர் ஆண்டும் மூன்று அல்லது நான்கு லட்சம் வெள்ளி நன்கொடை சேருகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுபோல் மற்ற தொழிற் சங்கங்களும் பிற அமைப்புக்களும் தொழிலாளர் கல்லூரி நிதிக்கு சிறுதுளி பெருவெள்ளம் என்னும் அடிப்படையில் இத்தகைய நிதி உதவியைச் செய்ய முன் வருமென்று நம்புகிறோம்.

ஏற்கனவே தொழிற்சங்கங்களின் கூட்டு முயற்சியால் தொழிலாளர் வங்கி சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. அதைத் தொடர்ந்து தேசியப் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்துப் பொதுச் செயலாளர், மக்கள் தொண்டன் திரு. வி. டேவிட் அவர்களின் தூர நோக்கான சிந்தனையின் பலனாகப் பண்டமாரானில் இந்தத் தொழிலாளர் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வருகிறது. பொதுவாக தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வித்துறையில் பின்தங்கி இருப்பது வெளிப்படை. பள்ளிப் படிப்பை அரைகுறையாக நிறுத்துகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் தொழிலாளர் குடும்பங்களில் அதிகம். இவ்வாறு படிப்பைப் பாதியில் கைவிடுகிற குழந்தைகளின் எதிர்காலம் பயனுள்ளதாக அமைவதற்கு இந்தத் தொழிலாளர் கல்லூரி அரிய பயிற்சிக் கூடமாக அமையும். எல்லாவகையான தொழில் நுட்பப் பயிற்சிகளையும் வழங்கி மாணவர்களை அரசாங்கத்தின் தொழிற் பயிற்சித் தேர்வுகளுக்கு ஆயத்தப்படுத்துவது இக் கல்லூரியின் குறிக்கோளாகும். இக் கல்லூரி பூரணமாக இயங்குவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகும். இதற்கிடையே இப்போது எச். எஸ். சி. விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு அங்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கல்வித்துறையில் மிகவும் பிரம்மாண்டமான திட்டமான இத்தொழில் நுட்பக் கல்லூரிக்கு மலேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸின் தலைவர் டாக்டர் பி. பி. நாராயணனும் முனைப்பாக உதவிகளை நல்கி வருவது குறிப்பிடத்தக்கது. கல்வித்துறையில் ஆர்வம் கொண்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களும் இக்கல்லூரிக்கு உதவ முன் வந்திருக்கின்றன. ஒன்றரைக் கோடிக்கு மேல் நிதி தேவைப் படுவதால் கல்வித்துறையிலும், தொழிலாளர் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிலும் அக்கறை கொண்டுள்ள சகல அமைப்புக்களும் முக்கியமாகத் தொழிற்சங்கங்களும் இந்நிதிக்குத் தத்தம் சக்திக்கு ஏற்ப நன்கொடை வழங்கி இந்தக் கல்வித் திருப்பணி விரைவாகவும் செம்மையாகவும் நிறைவேறுவதற்கு உதவுவது அவசியமாகும்.

அட்டைப்படம்

அட்டையில் தஞ்சை கமலா - இந்திரா சகோதரிகளின் மாணவிகளில் மூவர் சலங்கை பூசையின்போது நடனமாடுகின்றனர்.

வண்ணப்படம்: மாயன்.

ம. இ. கா. கிளைத்தேர்தல்கள்

(தமிழ்மலர் நாளிதழில் 2-2-78 அன்று "முருகு எழுதுகிறார்" என்னும் தலைப்பில் ஆசிரியர் முருகு எழுதியது இந்தக் கட்டுரை)

அண்மையில் அலோர்ஸ்டாருக்குச் சென்றிருந்த போது அங்குள்ள இந்திய பிரமுகர் ஒருவர் இந்தியர்களுக்கு அரசியல் ஈடுபாடு இத்துணை அவசியமா என்னும் கேள்வியை எழுப்பி சற்று ஆற அமரச் சிந்திக்க வேண்டிய கருத்தையும் வெளியிட்டார்.

'அரசியலுக்காக மலேசிய இந்தியர்கள் செலவிடுகிற நேரம், உழைப்பு, பணம் கவனம் ஆகியவை வரவர அதிகமாகிக் கொண்டே வருகிறது. அந்த அளவுக்கு அரசியல் மூலம் சமூகத்திற்கு பலன் கிடைத்து வருகிறதா என்று பார்த்தால் பதில் ஏமாற்றமாகத்தான் அமைகிறது. இப்படி இருக்கும் போது அரசியல் ஈடுபாட்டை இந்த அளவுக்கு தீவிரமாக வைத்துக் கொள்ளாமல் சமூக முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் ஆக்க வேலைகளில் இந்திய சமூகம் ஈடுபட்டால் நமது எதிர்காலம் பிரகாசமாக இருக்குமென்று' அந்த பிரமுகர் என்னிடம் சொன்னார். அவருடைய கருத்தை என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை, அடியோடு நிராகரிக்கவும் இயலவில்லை, தங்கள்

கருத்து சிந்திக்க வேண்டிய ஒன்று என்று மட்டும் அப்போது சொல்லி முடித்துக் கொண்டேன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செந்தூல் மஇகா தேர்தல் நடவடிக்கைகளை கடந்த இரண்டு வாரமாக செய்தித்தாள்களிலும், துண்டறிக்கைகளிலும், செவிவழியாகவும் அறிந்த பிறகு அந்த அலோர்ஸ்டார் இந்தியப் பிரமுகர் சொன்ன கருத்தின் அழுத்தம் எனக்கு மேலும் புலப்பட்டது. இன்னும் தீவிரமாக அந்தக் கருத்தை சமூகம் எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் வந்திருப்பதாகவே கருதுகிறேன்.

செந்தூல் மஇகா கிளை ஏழு ஆண்டுகளாக முடங்கிக் கிடந்து இப்பொழுது புத்துயிர் பெற்றிருப்பது செந்தூல் வட்டார மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்ற நிலைமை என்பதில் ஐயமில்லை. அந்தக் கிளையின் தேர்தலில் போட்டியிட்ட மூன்று அணிகளில் டாக்டர் என்.சிவலிங்கம் அவர்களின் அணி வாகை சூடியிருக்கிறது. அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்வோம்.

மற்றொரு நிம்மதி அளிக்கும் அம்சம் செந்தூல் மஇகா தேர்தலில் கலாட்டா ஏதும் ஏற்பட்டு அடிதடி மூண்டு மஇகாவுக்கும், இந்திய சமூகத்துக்கும் அவப்பெயர் ஏதும் விளையாதது ஆகும். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற செந்தூல் தேர்தலில் நாற்காலிகள் பறந்து ஓர் இளைஞரின் மண்டை உடைப்பட்டு அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டிய கட்டாயம் நேரிட்டது. அப்படி அசம்பாவிதங்கள் நேராமல் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் தேர்தல் கூட்டம் நடைப்பெற்றிருப்பது ஆறுதல் அளிப்பதாகும். அதற்காக செந்தூல் கிளையின் 1000 உறுப்பினர்களுக்கும் சபாஷ் தெரிவிப்பது அவசியமாகும்.

செந்தூல் மஇகா கிளையின் தேர்தல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கும் காரணத்தினாலும், மஇகாவின் தோற்றமே செந்தூலில் நிகழ்ந்தது என்பதாலும், இந்த அளவு முக்கியத்துவம் பெற்றிருப்பதாக சொல்லப்படுகிறது. மூன்று பலமான அணிகள் போட்டியிடும் அளவுக்கு இந்திய சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு அங்கு தேர்தல் பிரசாரங்கள் ஒரு சிலமாதங்களாகவே நடைபெற்று வந்திருக்கின்றன. ப்த்திரிகைகளிலும் துண்டறிக்கைகளிலும் அணி அணியாகப் பெரிய பெரிய விளம்பரங்கள் தொடர்ந்தாற் போல் வந்து கொண்டிருந்தன. இந்தத் தேர்தலுக்கு போட்டியிட்டவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் செலவிட்டிருக்கும் நேரம், உழைப்பு பணம் ஆகியவற்றை கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு மஇகா கிளையின் தேர்தலுக்கு இந்த அளவு நேரத்தையும், உழைப்பையும் பணத்தையும், மூளையையும் செலவிடுவது அவசியந்தானா என்று கேட்கத் தோன்றுகிறது. மஇகா கிளைகளில் பதவிகளைப் பிடிப்பதற்குக் கடுமையான போட்டா போட்டி ஒரு சில ஆண்டுகளாகவே இருந்து வருவதை நாம் அறிவோம். மஇகா கிளையின் நிர்வாகிகளாக வருவதற்கு இத்தனை அணிகள், இத்தனை போட்டா போட்டிகள் இத்தனை உழைப்பு அவசியமா என்பதை சமூகத் தொண்டர்களும், பிரமுகர்களும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய ரீதியில் கூட மஇகா வின் முக்கிய கோரிக்கைகளுக்குப் பரிகாரம் காண்பதற்கு ஆண்டுக் கணக்கில் தவம் கிடக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும் போது, ஒரு மஇகா கிளை மூலம் பெரிய சாதனைகளை நிகழ்த்துவது எப்படி சாத்தியமாகும்? சமூகத்திற்கு தொண்டுசெய்யவேண்டும் என்று கருதுகிறவர்கள் மஇகா பதவிகளில் அமர்ந்து தான் அதனை செய்யவேண்டும் என்பது அவசியமில்லை. தொண்டு செய்யும் உண்மையான மனம் இருந்தால் அதற்கு எத்தனையோ அமைதியான வழிகள் இருக்கின்றன. செய்ய வேண்டிய தொண்டுகளும் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே அரசியல் பதவிப் போட்டிகளில் சமூகத்தின் சக்தியை அதிகம் வீணாக்காமல், உண்மையான சமூக உயர்வுப் பணிகளுக்கு நேரத்தையும், உழைப்பையும் மற்ற வசதிகளையும் பயன்படுத்துவது குறித்து நமது தொண்டர்கள் எதிர்காலத்தில் அதிகம் சிந்திப்பார்கள் என்று நம்புவோமாக!

இருமல்

இருமல் தொல்லை இருந்தால் மிளகைத் தூள் செய்து வைத்துக் கொண்டு ஒரு கரண்டி சாதத்தில் அதைப் போட்டு நெய்விட்டுப் பிசைந்து சாப்பிட்டால் இருமல் நின்று விடும்.

மூல நோய்

மூல நோய் உள்ளவர்கள் மூலத்தைப் போக்க, பழுத்த வாழைப் பழத்தோடு, சிறிது சீரகத்தைச் சேர்த்துப் பிசைந்து காலையில் சாப்பிட்டு வரவேண்டும். சாப்பிட்டு வந்தால் இரத்தம் விழுவது முதலில் நின்று விடும். அப்புறம் நோய் மெல்லக் குணமாகும்.

வயிற்றுவலி

சில பெண்களுக்கு மாதவிலக்குச் சமயத்தில் தாங்கமுடியாத வயிற்றுவலி ஏற்படும். இந்தப் பெண்கள் அந்தச் சமயம் சூடான வெந்நீரில் ஒரு ஸ்பூன் நெய்யைக் கலந்து குடிக்க வேண்டும். வயிற்றுவலி நின்று விடும்.

அட்டைப்படக்கட்டுரை

சதங்கையொலி

—சோ. பரஞ்சோதி

அண்மையில் தலைநகர் சுற்றுவட்டாரத்தில் விமரிசையாகப்பல பரதநாட்டிய சதங்கை பூஜைகளும், நடன அரங்கேற்றங்களும் நடைபெற்றன. எனினும் இதன் உள்ளார்த்தங்கள் என்ன என்பதையும் அதன் விபரங்களும் தெரியாதிருப்பது வியப்பில்லை.

நம் நாட்டில் சிறப்பாக வளர்ந்துவரும் பரதக்கலைபற்றி நமது வாசகர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காகத் தஞ்சை கமலா இந்திரா சகோதரிகள் நடனப்பள்ளியைச் சேர்ந்த நடன ஆசிரியை குமாரி இந்திரா கோவிந்தராசுவைச் சந்தித்தபோது பல நல்ல தகவல்கள் கிடைத்தன.

சாதாரணமாக ஒரு குழந்தை நடனம் பயில ஆரம்பிக்கும் பொழுது, சில வைதிக பூர்வமான சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலில் நல்ல நாள் பார்த்துப் பாடம் ஆரம்பிப்பது, குருபூஜை செய்து ஆசிரியையிடம் ஆசி பெறுவது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதில் எந்த மத, இனக் குழந்தைகளானாலும் இந்தச் சம்பிரதாய நிகழ்ச்சிக்குட்பட்ட பிறகே நாட்டிய பாடம் துவக்கப்படுகிறது.

முதலில் அடவுகள் சொல்லித் தரப்படுகின்றன. அடவுகளைச் சுமார் மூன்று மாதத்திற்குள் கற்றுக்கொள்ள முடியுமாம். அதன்பிறகு, அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம் தில்லானா, பிறகு பதங்கள் என்பன சில பாட முறைகளாகும். இவையனைத்தையும் கற்றுத்தேற நல்ல அறிவாற்றல் உள்ள குழந்தையாக இருந்தால் சுமார் மூன்று வருடங்களாகலாம். இதிலே ஆசிரியத் தகுதியைப் பெறச் சுமார் ஐந்தாண்டுகள் முதல் ஏழாண்டுகள் கூடப் பிடிக்கலாம்.

சதங்கை பூஜை என்பது மேற்சொன்ன நடனப் பயிற்சி முடியும் தறுவாயான மூன்றாவது ஆண்டில் அந்தக் குழந்தைக்குச் சம்பிரதாய அடிப்படையில் பூஜை நடத்தி, உற்றார் உறவினர்கள் முன்னிலையில் குருவானவர் ஆசி கூறிச் சதங்கை கட்டுவதாகும். இதன்வழி அந்தக் குழந்தையின் மேடைக் கூச்சத்தைத் தெளியவைப்பது போன்ற ஒரு முறை, முன் காலந்தொட்டே நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இதன் பிறகுதான் அரங்கேற்றம் எனும் பொதுநிகழ்ச்சி நடைபெறுகிறது. ஆக சதங்கை பூஜை நடைபெறுமல் ஒரு குழந்தை பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது என்பது ஒரு கட்டுப்பாடாக உள்ளது. இது ஓரளவு அரங்கேற்றத்துக்கு முன்பான ஒத்திகை என்றுகூடச் சொல்லலாம்.

பெரும்பாலும் கலை ஆர்வத்தால் உந்தப்பட்ட தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளும் நம் கலையை கற்றுத் தேரவேண்டும் என்கிற நோக்கில் நடன ஆசிரியரிடம் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பிக்கிறார்கள். இதில் அடங்கியுள்ள உள்நோக்கத்தை விரிவாக நோக்குமிடத்து ஆங்கில நாகரிக மோகத்தில் மூழ்கிவிட்டவர்கள் போல் தோன்றுகின்ற தமிழர்கள் பலரின் உள்ளார்ந்த மனநிலை தெளிவாகத் தெரிகிறது. வேலை நிமித்தம் பிறமொழி கற்கவேண்டிய சூழ்நிலையில் எங்கே நம்முடைய மொழி பண்பாடு, கலை, கலாச்சாரம், சமயம் நம்மை விட்டு மறைந்து விடுமோ என்கிற கவலை பரவலாக இருப்பது தெரிகிறது. இந்த அவல நிலை வராதிருக்கத் தங்களுடைய எதிர்காலச் சந்ததிகள் நம்முடைய பாரம்பரிய கலை கலாச்சாரத்தை ஓரளவேனும் உணர்ந்திருக்க வேண்டும் என்கிற நோக்கில் பலர் இந்தத் துறையில் தங்கள் பிள்ளைகளை ஈடுபடுத்துகிறார்கள்.

நடனம் கற்றுக் கொள்ள வருகின்ற பல தமிழ்ப்பிள்ளைகள் தமிழே ஒழுங்காகப் பேச முடியாமல் ஆங்கிலத்தில் உரையாடுகின்ற பரிதாப நிலை உள்ளதாகச் சொல்லும் குமாரி இந்திரா அவர்கள், நடனம் கற்கத் துவங்கி இரண்டு மூன்று மாதங்களில் தமிழில் சரளமாக உரையாடவும், சமய வழிபாடுகளைத் தெரிந்து கொள்ளவும், தமிழ் நாகரிகமுறைப்படி பொட்டிட்டு, பூச்சூடி, சுயமான தமிழ் மங்கை போல ஆடை அணியக் கற்றுக் கொள்கிறார்கள் என்கிறார். நடனக் கலையில் இந்தச் சிறு பெண்கள் அதிக ஆர்வமும் பிடிப்பும் கொள்வதாகவும் குமாரி இந்திரா சொல்கிறார்.

பரதகலையைப் பயில்வதற்கு நம் தமிழர்கள் மட்டுமல்லாது, யூரேசியர், பஞ்சாபியர், வெள்ளைக்காரர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் நமது கலையின் நுணுக்கத்தைத் தெரிந்து கொள்ளவே விரும்புகிறார்கள். பிற இந்திய வம்சாவளியினர் பெரும்பாலும் தமிழர்களுடைய கருத்துக்கு உட்பட்ட ஆர்வத்தையே காட்டுகிறார்கள். இதில் பலதரப்பட்ட வாழ்க்கைநிலையில் உள்ளவர்கள் மதம், இனம், ஏழை, பணக்காரர் என்கிற வேறுபாடின்றி ஆர்வம் காட்டுகிறார்கள். நம் நாட்டில் பரவலாக நடனப் பள்ளிகள் இல்லாதது ஒரு குறையாக உள்ளது இருப்பினும் கமலா இந்திரா நடனப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியைகள் ஜாலான் ஈப்போ, பிரிக்பீல்ட்ஸ், பெட்டாலிங் ஜெயா, காஜாங், சிரம்பான் போன்ற இடங்களுக்குச் சென்று பாடம் போதிக்கும் அளவுக்குப் பெற்றோர்களும், பிள்ளைகளும் ஆர்வமான உற்சாகம் காட்டுகிறார்கள்.

இந்தத் துறைக்கு இருக்கிற பெரும் குறை நல்ல நட்டுவாங்கம் தெரிந்தவர்கள் நம் நாட்டில் இல்லாததே. இக்குறையைப் போக்கத்தமிழகத்திலிருந்துநட்டுவாங்கம் தெரிந்தவர்களை இங்கு அழைத்து இங்குள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்க ஆவன செய்யலாம். அதற்கு நம்முடைய கலாச்சார அமைச்சும் இந்தியத் தூதரகமும் பெரிதும் ஒத்துழைக்க வேண்டும் என்பது நமது தாழ்மையான வேண்டுகோள்.

நம்முடைய இந்தப் பாரம்பரிய நடனக்கலை வளர்ந்தோங்குவதற்கு நல்ல சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. பொதுமக்கள் இதில் நல்ல ஆர்வம் காட்டத் தொடங்கிவிட்டார்கள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நுண்கலை ஆர்வலர்கள் நம்முடைய கலையின் நிலை ஓங்கப் பாடுபட வேண்டுமென்பது நமது அன்பான விருப்பம்.

ஒரு சாமியின் கதை



அ. ஆரோக்கியசாமி.

இது ஒரு சாமியின் கதை. சாமியின் கதை என்றால் வேறு எந்தச் சாமியின் கதையோ அல்ல; இது ஆரோக்கியசாமியின் கதை. உலகத்தில் லட்சக்கணக்கில் இருக்கும் ஆரோக்கிய சாமிகளில் இவர் எந்த ஆரோக்கியசாமி?

கோலாலம்பூரில் – கூட்டரசுப் பிரதேசத்தில் – ஜாலான் கூச்சிங்கில் -ஈப்போவுக்குச் செல்லும் வழியில் - தாமான் சிட்டியில் மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் கடை வைத்திருக்கிறாரே. அந்த ஆரோக்கிய சாமி.

கோலாலம்பூரிலேயே இவர் ஒருவர்தான் இந்தியர்கள் என்ற ரீதியில் மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் கடை வைத்திருக்கிறாரா? நான் விசாரித்த வரைக்கும் அப்படித்தான் தெரிகிறது. மோட்டார் வண்டிகள் பழுது பார்க்கும் கடைகளை நம்மவர்களில் சிலர் கோலாலம்பூரில் வைத்திருக்கிறார்கள் ஆனால் மோட்டார் சைக்கிள் கடை இத்துணை பெரிய அளவில் கோலாலம்பூர் எல்லைக்குள் வைத்திருக்கும் இந்தியர்களில் தங்களுக்குத் தெரிந்த வரையில் இந்த ஆரோக்கியசாமி ஒருவராகத்தான் இருப்பார் என்று பலர் கூறுகின்றனர்.

எனக்கு அதுகூடப் பெரிதாகப் படவில்லை. ஏனென்றால் நமக்குத் தெரியாமல் எங்கேனும் ஒரு மூலையில் இப்படிப்பட்ட மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் கடையை நம்மவர்கள் வைத்திருக்கலாம் அல்லவா? ஆனால் இத்துணை இளவயதில் பெரிய அளவில் இத் தொழிலை மேற்கொண்டிருக்கும் ஆரோக்கியசாமியின் அசாத்திய துணிச்சலை நினைத்தால்தான் எனக்கு வியப்பாக இருக்கிறது.

அவருக்கு வயது இருபத்தே மூன்றுதான். இருபத்து மூன்று வயது இளைஞர்கள் பலர் "திரியும்" லட்சணத்தைப் பார்த்துப்பார்த்துப் புண்பட்டுக் கிடக்கும் எனது மனத்துக்கு ஆரோக்கியசாமி என்னும் இந்த இளைஞரின் முயற்சி மருந்தாகத் தெரிந்தது.

நேரத்துக்கு ஓர் உடுப்பு, விதவிதமான தலைவாரல், நாளொன்றுக்கு ஒரு பாக்கெட் சிகரெட், வாரத்திற்கு மூன்று சினிமா, இதற்குரிய நேரம்போக மற்ற நேரங்களில் தன்னைப் போன்ற நண்பர்களுடன் அரட்டைப் பேச்சு- இப்படித் திசை மாறிய கப்பலென ஓடிக்கொண்டிருக்கும் பெரும்பாலான இளைஞரிடையே, காலை எட்டு மணி முதல் இரவு பதினோரு மணிவரைக்கும் ஓய்வில்லாமல் மாதம் முப்பது நாளும் உழைத்துக்கொண்டிருக்கும் ஓர் இளைஞரைக் கண்டால்- அவருடைய கதையைக் கேட்டால்- யாருக்குத்தான் மகிழ்ச்சி வராது.

ஆரோக்கியசாமி தனது கதையை அவரே கூறுகிறார் கேளுங்கள்:-

“எனக்கு அப்போது பதினைந்து வயது இருக்கும். புக்கிட் முஞ்சோங் தோட்டத்திலிருந்து ரவாங் நகரிலிருக்கும் இடைநிலைப் பள்ளியில் எல். சி. இ. படித்துக் கொண்டிருந்த நேரம்.

பள்ளிக்குப் போகும் வழியில் சீனர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் கடை ஒன்றிருக்கிறது. அந்தக் கடையைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை தோன்றும்.

என்னுடைய ஆசையை அப்பாவிடம் வெளியிட்டேன். அப்பா அந்தச் சீனரிடம் சென்று உதவி கேட்டார். என் தந்தை மோட்டார் சைக்கிள் வைத்திருந்ததால் அந்தக் கடைக் காரச் சீனரோடு பழக்கம்.

அந்தப் "பழக்கம்" மட்டும் சீனரிடம் எடுபடவில்லை.


"இந்தியாக்காரங்களுக்கெல்லாம் இந்த நுணுக்கமான வேலை ஒண்ணும் மண்டையில ஏறுது. அத்தோட பையன் சின்னவனு இருக்கான். காலையிலேயிருந்து ராத்திரிவரைக்கும் வேலை செய்யமாட்டான்" என்று அந்தச் சீனர் என் தந்தையின் வேண்டுகோளை நிராகரித்து விட்டார்.

சில நாட்கள் சென்றன. என் மனத்தில் அந்த ஆசை வெறியாக மாறியது. அப்பாவை நச்சரித்தேன். என்னை அந்தச் சீனர் கடையில் வேலைக்குச் சேர்த்து விட வேண்டுமென்றே அந்தக் கடையில் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கினார் அப்பா.

புதிய மோட்டார் சைக்கிள் வாங்கியதை ஒரு "சிபாரிசு கடிதமாக" வைத்து மீண்டும் சீனரிடம் அப்பா உதவி கேட்டார்.

சம்பளமில்லை!

அந்த மகராசன் சீனன் மனமிரங்கி என்னை அதன் பிறகு வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். முதல் ஆறு மாதத்திற்குச் சம்பளமும் இல்லை;



சாமி மோட்டோர் கடையின் ஊழியர்கள் வில்கோடியில் ஆரோக்கிய சாமியின் தந்தை திரு. அருளாந்து.

சாப்பாடும் இல்லை. தொழிலை மட்டும் கத்துக்கொடுத்தாங்க! அதற்கப்புறம் ஆறு மாதம் சாப்பாடுமட்டும் கொடுத்தாங்க. சம்பளம் இல்லை.

ஒரு வருடம் சென்றது. அதன்பிறகு மாதத்திற்குப் பத்து வெள்ளி சம்பளம். மூன்று வருடம் அதே சீனர் கடையில் வேலை செய்தேன். ஒரு மோட்டார் சைக்கிளைச் சுத்தமா கழற்றிப் பூட்டும் அளவுக்கு வேலை தெரிந்த எனக்கு அங்கே மூன்ருவது வருடத்தில் கிடைத்த சம்பளம் $40 தான்.

பத்தாங்காலியில் ராஜு என்பவர் மோட்டார் வண்டி பழுது பார்க்கும் கடை வைத்திருந்தார். அங்கு மோட்டார் சைக்கிளைப் பழுது பார்க்கவென்று என்னை அழைத்தார். சென்றேன். மாதம் $60 வழங்கப்பட்டது. அங்கே சுமார் ஒரு வருடம் இருந்தேன்.

அதன் பிறகு பெட்டாலிங் ஜெயா செக்ஷன் 14-இல் ஒரு சீனர் கடையில் இரண்டு வருடம் வேலை செய்தேன். $150 முதல் $180 வரை சம்பளம் வாங்கினேன்.

அதற்கப்புறம் சொந்தமாகவே தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பி இப்பொழுது இந்தக் கடையை வைத்திருக்கிறேன். தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் இருவரும் பயிற்சிபெறும் ஊழியர் இருவருமாக என்னையும் சேர்த்து இப்போது ஐவர் கடையில் இருக்கிறோம்.

இந்த எட்டு வருட அனுபவத்தில் எல்லா விதமான மோட்டார் சைக்கிள்களையும் என்னால் பழுது பார்க்க முடியும். அதுமட்டுமல்லாமல் புல் வெட்டும் மிசின், ஹோண்டா ஜெனரேட்டர், தண்ணீர் பம்செட்டு முதலியவற்றையும் என்னால் பழுது பார்க்க முடியும்.

ஏஜெண்டு

எதிர்காலத் திட்டம் என்னவென்று கேட்கிறீர்களா? இப்பொழுது. வாடகைக்கு இருக்கிற கட்டத்தைச் சொந்தக் கட்டடமாக ஆக்கணும்! எனது பெரிய விருப்பம் என்ன தெரியுங்களா? மற்றவர்கள் குறிப்பாக சீனர்கள் மோட்டார் சைக்கிள் ஏஜெண்டுகளாக இருக்கிற மாதிரி நானும் ஏஜெண்டா இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

அந்த ஆசை நிறைவேறுவது அவ்வளவு சுலபம் என்று தெரியவில்லை. இன்றுவரை அதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒன்றும் ஆகவில்லை.

ஒரு கம்பெனியில் பேங் உத்தரவாதம் கேட்டார்கள். அதற்கு ஏற்பாடு செய்துவிட்டுப் போய்ப் பார்த்தேன். தற்சமயம் எங்களுக்கு மோட்டார் சைக்கிள் சப்ளை செய்யப் போவதில்லை என்று சாக்குப் போக்குச் சொல்லிவிட்டார்கள்.

இன்னொரு நிறுவனத்தார் இப்போதைக்கு நாங்கள்



பாகிஸ்தானின் கராச்சி நகரத்து மருத்துவ மாணவிகள் நாற்பதுபேர் கடந்த மாதத்தில் ஒரு கல்லூரி பஸ்ஸை கடத்தினர். சுமார் 200 மைல்களுக்கப்பாலுள்ள கராச்சி பத்திரிகையாளர் சங்கத்துக்கு அந்த பஸ்ஸை கடந்திச் சென்ற அம்மாணவிகள் தங்களின் கல்லூரியில் போதிய அனுபவமிக்க பணியாளர்கள் இல்லையென்றும் தங்களின் விஞ்ஞானப் பரிசோதனைக் கூடங்களில் வசதிக்குறைவு அதிகமென்றும் பத்திரிகையாளர்களிடம் புகார் கூறினர். அவர்களின் குறைபாடுகள் தீர்க்கப்படுமென்று உறுதிமொழி கொடுக்கப்பட்டவுடன் அம்மாணவிகள் பஸ்ஸை விடுவித்தனர்.

மூன்றாண்டுகளுக்கு முன் பால்மாற்று அறுவைச் சிகிச்சையின் மூலம் பெண்ணாக மாறிய ரினி ரிச்சர்ட் என்ற 43 வயது டென்னிஸ் ஆட்டக்காரப் பெண்மணி டென்னிஸ் போட்டிகளில் தன்னோடு போட்டியிட மறுக்கும் பெண்கள் மீது வழக்குத் தொடுக்கப்போவதாகக் கூறியுள்ளார். மற்ற டென்னிஸ் ஆட்டக்காரப் பெண்மணிகளோ ரினி ரிச்சர்ட்டைத் தாங்கள் இன்னும் ஆண்மகனாகவே கருதுவதாகக் கூறுகின்றனர். பால் மாறினாலும் ரினி ரிச்சர்ட் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள, நியூயார்க் உயர்நீதி மனறம் எட்டு மாதங்களுக்கு முன் அனுமதி வழங்கியது.

ஏஜெண்டு கொடுப்பதில்லை என்று கூறிவிட்டார்கள்.

இப்படிப் பல இடங்களிலும் முயற்சி செய்தும் பலன் அளிக்காத ஒன்றாக இது இருக்கிறது.

இதற்கு ம.இ.கா. எனக்கு உதவி செய்யும் என்று நான் பெரிதும் நம்புகிறேன். அவர்களையும் நான் அணுகி இருக்கிறேன.

ஆண்டவன் அருளாலும் ம இ.கா. உதவியாலும் எனக்கு ஏஜெண்டு கிடைத்துவிட்டால் இந்தத் தொழில் எனக்கு மேலும் நிலையான தொழிலாக அமையும்.


உதவி செய்வேன்

இந்தத் தொழிலில் ஆர்வமுள்ள நம்முடைய இளைஞர்களுக்கு நான் என்ன உதவி செய்வேன் என்று கேட்கிறீர்களா?

ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு நிச்சயம் நான் இந்தத் தொழிலைக் கற்றுக்கொடுப்பேன். ஆனால் இதைக் கற்றுக் கொள்வதற்கு வெறும் ஆர்வம் மட்டும் இருந்து பயனில்லை. ஞாபகசக்தி கொஞ்சம் அதிகம் வேண்டும். மோட்டார் சைக்கிளின் எந்தப் பாகத்தையும் கழற்றும் பொழுது அதை எப்படிக் கழற்றினோம்? என்னென்ன பொருள்கள் எங்கெங்கு இருந்தன என்பதை எல்லாம் நினைவில் வைத்துக் கொண்டிருந்தால்தான் மீண்டும் பொருத்தும் பொழுது எளிதாக இருக்கும். சொந்த யோசனையும் இதற்கு அவசியம். பழைய மோட்டார் சைக்கிளில் புதிய பொருளைப்பொருத்தினாலும் சில வேளைகளில் இயல்பாக வேலை செய்யாது. அப்போது நமது சொந்த யோசனையைக்கொண்டு தான் செயல்பட வேண்டும்.

ஓர் ஆலோசனை

மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு எனது அனுபவத்திலிருந்து நான் கூறும் ஆலோசனை இதுதான்.



தொண்டர் திலகம் திரு. கே. வி. ராமனுதன் தம்பதிகளின் அன்பு மகள் சௌந்திரவள்ளிக்கும், சிலாங்கூர் ஷாஆலம் திரு. முருகேசு தம்பதிகளின் மகன் சுப்பிரமணியத்திற்கும் கடந்த 4-2-78 சனிக்கிழமை கோலாலம்பூர் ஸ்காட் ரோடு கலா மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தேசிய ஒற்றுமை வாரியத் துறையின் தலைவர் துன் வீ. தி. சம்பந்தன் உட்பட 2000க்கும் மேற்பட்ட பிரமுகர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் திருமணத்திற்கு வந்திருந்தனர். தமிழகத்திலிருந்து தவத்திரு சித்திரமுத்து அடிகளார். இந்தோனேஷியாவிலிருந்து திரு. நித்தியானந்தன் உட்பட பலர் வாழ்த்துத் தந்திகள் அனுப்பியிருந்தனர்.

பட விளக்கம்: தொண்டர் திலகம் ராமனுதன் தம்பதிகள், மணமகள் செய்யும் பாத பூஜையை ஏற்றுக்கொள்கின்றனர்.

ஜப்பான் மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் சி. சி. குறைவாகவும் சக்தி அதிகமாகவும் உள்ளவை. உதாரணமாக 70 சி.சி. உடைய ஜப்பான் வண்டி 50 மைல் வேகத்தில் ஓடும். ஆனால் சி. சி. அதிகமாக உள்ள மற்ற நாட்டு வண்டிகள் சி. சி.க்கு ஈடாக வேகமாக ஓடாது.

அதுதான் ஜப்பான் வண்டிகள் அடிக்கடி பழுதாவதற்கும், மற்றவை பழுதாகாதிருப்பதற்கும் உள்ள முக்கிய காரணம். ஜப்பான் வண்டிகளைப் பயன் படுத்துவோர் குறைவான - அளவான வேகத்தில் ஓடினால் வண்டி அடிக்கடி பழுதாவதைத் தவிர்க்கலாம்.

"இந்தியாக்காரங்களுக்கெல்லாம் இந்தத் தொழில் மூளையிலே ஏறாது!" என்னும் கூற்றைப் பொய்ப்பித்துவிட்ட ஆரோக்கியசாமியின் கதை நமது இளைஞர்களின் மனத்துக்கு ஆரோக்கியத்தை தந்து ஆரோக்கியசாமியைப்போல் இந்தத் துறையில் இல்லாவிட்டாலும் வாழ்க்கைக்கு முன்னேற்றம் தரும் மற்றெந்தத் துறையிலாவது அவர்களை ஈடுபடுத்தட்டும்.

—வணிகன்.



இவரது காரைப் பற்றி... இவர்...



எஸ். எஸ். வாசன் ஆனந்த விகடன் வாரப் பத்திரிகையை ஆரம்பித்திருந்த போது ஒரு பழைய, பெரிய காரை வாங்கினார். அந்தக் காரைப் பற்றி "கல்கி" நகைச்சுவையாக இப்படிக் கூறினார். "அந்தக் காரில் ஹார்ன் ஒன்றைத் தவிர மற்றவை எல்லாம் சப்தம் போடும்!"

வழிகாட்டுகிறார் வள்ளுவர்-12

இன்று நாம் எடுத்துக்கொள்ளும் குறள் இல்லறவியலில் பதினோராவது அதிகாரத்தின் கீழ் இடம் பெற்றிருக்கும் 109ஆவது குறளாகும்.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும் (109)

இந்தக் குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு: "முன்பு உதவி செய்தவர் பின்பு கொன்றாற்போன்ற துன்பத்தைச் செய்தாராலும் அவர் முன்பு செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்."

நன்றி உணர்வை வள்ளுவர் மிக அழுத்தமாக - மனிதனுக்கு வேண்டிய இன்றியமையாத பண்புகளில் ஒன்றாக வலியுறுத்துகிறார். ஒருவன் செய்த உதவியை மறப்பவனுக்கு உய்வே-கதிமோட்சமே - கிடையாது என்பது வள்ளுவரின் தீர்க்கமான நம்பிக்கையாகும். வள்ளுவரின் இந்தக் கருத்து நாம் வாழ்கிற இந்த நவநாகரிக உலகத்திற்குப் பொருந்தி வருமா என்னும் சந்தேகம் நம்மில் பலருக்கு எழுவதில் வியப்பில்லை.

மேனாட்டு நாகரிகப்படி நன்றி பாராட்டும் பண்பு பரவலாக எல்லா மக்களிடமும் மிளிர்வதைக் காண்கிறோம். பஸ்ஸில் நாம் செல்லும் போது அமர்ந்திருக்கும் ஒருவர் நமக்குத் தமது இடத்தைக் கொடுத்தால் உடனே அவருக்கு "நன்றி" கூறுகிறோம். ஒரு வீட்டிற்குச் செல்லும் போது அங்கு நாம் பருகுவதற்கு ஒரு கிளாஸ் தண்ணீர் கொடுத்தால் அந்த வீட்டுக்காரர்களுக்கு முகமலர்ச்சியோடு "மிக்க நன்றி" என்று வாய் மலர்கிறோம். இந்த நன்றி சொல்லும் பழக்கம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் குழந்தைகள் நொடிக்கு நூறுமுறை நன்றி சொல்லும் அளவுக்கு வளர்ந்து பெருகி நிற்கிறது. எந்தச் சிறு உதவிக்கும் உடனே நன்றி சொல்கின்ற இந்தப் பண்பு உயரிய நாகரிகமாகவும் கருதப்படுகிறது. ஆகவே வள்ளுவர் வலியுறுத்தும் நன்றி உணர்வு இக்காலத்திற்கு மிகவும் பொருந்துவதாகவே நமக்குத் தோன்றும்.

மிகுந்த வேறுபாடு

ஆனால் வள்ளுவர் சொல்லும் நன்றி உணர்வுக்கும் இன்றைய நாகரிகத்தில் உதட்டளவில், மேல்பூச்சாக மலிந்து கிடக்கும் நன்றியுரைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. வள்ளுவரின் குறளை ஆராய்ந்து பார்த்தால் அவர் வலியுறுத்துகிற நன்றிக்கடன் எத்துணைப் பொருள் பொதிந்தது, வலிமை மிக்கது என்பது நமக்கு நன்கு புலப்படும். உடனுக்குடன் நன்றி என்னும் ஒரு சொல்லை உதிர்த்துவிட்டு அவ்வப்போது கணக்கைத் தீர்த்துக்கொள்ளுவது போன்றவெளிப்பகட்டான நன்றி உணர்வை வள்ளுவர் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார். எந்த உதவிக்கும் அந்த இடத்திலேயே நன்றி சொல்லுகிறவர்கள் அந்த ஒரு சொல்லோடு தங்கள் நன்றிக்கடன் முடிந்து விட்டதாகவே கருதிக்கொள்கின்றனர். அதன் பிறகு தாம் பெற்ற உதவியைப் பற்றியோ, அந்த உதவியைத் தமக்குச் செய்தவரைப் பற்றியோ ஏதுமே சிந்திப்பதில்லை. இவ்வாறு நன்றி மறத்தலை வள்ளுவரின் அறநெஞ்சம் - அருள்நெஞ்சம் எப்படி ஏற்றுக்கொள்ளும்?

வள்ளுவர் சொல்கிற நன்றிக்கடன் பொறுப்புமிக்கது. அந்த நன்றிக்கடனைத் தம் உயிர் உள்ளளவும் மாந்தர் மறக்கக்கூடாது என்பதுதான் வள்ளுவரின் கட்டளையாகும். பிறர் செய்த உதவிகளை எப்பொழுதும் மறவாமல் இதயத்தில் நிலைநிறுத்திக் காக்க வேண்டுமென்பதே அவர் விருப்பமாகும். சின்ன உதவியையும் பெரிதாகப் போற்றி மனத்தில் இருத்தல் வேண்டும் என்பதும், தக்க தருணத்தில் செய்த உதவி சின்னதாக இருந்தாலும் அதனை உலகத்தைவிட பெரிய உதவியாகக் கருதவேண்டும் என்பதும், தம்முடைய துன்பத்தைப் போக்கியவரின் நேசத்தை ஏழு பிறப்புக்களிலும் மனத்தில் வைத்துப் போற்ற வேண்டும் என்பதும் வள்ளுவரின் கொள்கையாகும். ஆகவே நன்றி பாராட்டுவதற்கு வள்ளுவரை நாம் வழிகாட்டியாகக் கொள்ள நினைத்தால் அந்தப் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றுவது அத்துணை எளிதல்ல என்பது உண்மையே. அதற்காக வள்ளுவரின் இந்த அறிவுரைகள் கவைக்குதவாத கட்டளைகள் என்று நாம் ஒதுக்கிவிட முற்படக் கூடாது. முயன்று பார்த்தால் உண்மையாகச் சிந்தித்தால் வள்ளுவர் சொல்லுகிறபடி நன்றி உணர்வோடு நாம் வாழமுடியும்.


மகத்தான எல்லை

இந்தக் கட்டுரையில் நாம் எடுத்துக்கொண்டிருக்கும் குறள் நன்றி உணர்வுக்கு ஒரு மகத்தான எல்லையைக் காட்டுவதாகவே கொள்ள வேண்டும்.

"எப்போதோ ஒருமுறை உனக்கு ஒருவர் ஒரு சிறு நன்மையைச் செய்ததாக வைத்துக்கொள். நீ செல்கின்ற பாதையில் கிடந்த முள் உன்னைக் குத்திவிடாமல் அதனை அவர் கண்டெடுத்துத் தூர எறிந்ததாக வைத்துக்கொள். இது ஓர் அற்பமான உதவிதான். அதே ஆசாமி பிற்பாடு உனக்கு எத்தனையோ கொடுமைகளை ஒன்றன்பின் ஒன்றாகச்செய்திருக்கக்கூடும். அந்தக் கொடுமைகள் உன்னை உயிரோடு வைத்துக் கொல்வது போன்ற பாதகங்களாகவும் இருந்திருக்கக்கூடும். அப்படிப் பாதகம் செய்த அந்த ஆசாமியையும் அவர் முன்பு உனக்குச்

முருகு சுப்பிரமணியன்

அந்த ஒன்றை நினைத்துக்கொள்



செய்த ஓர் உதவிக்காக- முள்ளை வழியிலிருந்து தூக்கி எறிந்ததற்காக - நீ நன்றி உணர்வோடு நினைக்கவேண்டும். அந்த உதவியைப் பெரிதாகக் கருதிப் பிற்பாடு அவர் செய்த எண்ணற்ற கொடுமைகளையெல்லாம் மறந்துவிடவேண்டும்!"

வள்ளுவர் இந்தக் குறளில் கூறுகிற கட்டளையின் சாரம் இதுதான். இதனை நாம் சீரணிப்பது சற்றுச் சிரமமாகத்தான் இருக்கும். எனினும் பக்குவப்பட்ட மனத்தோடு இந்தக் குறளை அணுகினால் அதனால் ஏற்படக்கூடிய பெரும் பயனை நாம் உணர முடியும்; அடையவும் முடியும்.

மனிதன் இயல்பாக தன்னலம் நிறைந்தவன். அதனால்தான் குழந்தைகள் கூட கூடி விளையாடுவதில் காணும் இன்பத்தைவிட சண்டை அடித்துக்கொள்வதில் அதிகம் இன்பம் காண்கின்றன. பகைமையை வளர்த்துக்கொள்வதும் ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறுமைப்படுவதும் பிளவுகளை உற்பத்தி செய்து பிரிந்து வாழ்வதுமே மனித இயல்பாக அமைந்திருக்கின்றன. இந்தப் பகைமைப் போக்கு குழந்தைப் பருவத்திலிருந்து பெரியவர்களாகிப் பேரன் பேர்த்தி எடுத்தாலும் மனிதனை விடாமல் ஒட்டிக்கொண்டு வருவதாகவே தோன்றுகிறது. வள்ளுவர் போன்ற சான்றோர்கள் மனித குலத்தைச் சின்னபின்னப்படுத்தும் இந்தப் பகைமைப் போக்குக்கு மாற்றம் காண விரும்பியே நன்றி உணர்வு போன்ற உயரிய பண்புகளை மிகமிகத் தீவிரமாக வலியுறுத்தி இருக்கின்றனர்.

வள்ளுவரின் நோக்கம்

தீமை செய்தவரைத் தண்டிக்கின்ற வழி அவருக்கு நன்மை புரிவது என்பது போன்ற தீவிரமான கட்டளைகளை வள்ளுவர் விடுத்திருப்பதன் நோக்கம் இதுதான். மாந்தர்கள் பகைமையால் பிரிந்து ஒருவரை ஒருவர் எதிரியாகக் கருதிச் சண்டையிலும் சச்சரவிலும் காலத்தைப் போக்கிப் பாழ்பட்டுவிடக்கூடாது என்னும் நன்னோக்கமே இதற்குக் காரணம் ஆகும். எதிரிகளை உண்டாக்கிக் கொள்வது எளிது என்பதும் நண்பர்களை உண்டாக்கிக் கொள்வது அத்துணை எளிதல்ல என்பதும் நடைமுறையில் நாம் காணுகின்ற உண்மையாகும்.

எதிரிகளைக் குறைத்துக் கொள்ளுவதற்கும், இன்னும் சொல்லப்போனால் எதிரிகளே இல்லாமல் வாழ்வதற்கும் வழியொன்று இருக்குமானால் அந்த வழியை நிச்சயமாக நாம் இருகை நீட்ட வரவேற்போம். அத்தகைய பொன்னான மார்க்கத்தையே இந்தக் குறள் மூலம் நமக்கு வள்ளுவர் உணர்த்துகிறார். பகைவனையும் நண்பனாக்கிக்கொள்வதற்கு இதனைவிடச் சிறந்த வழி வேறு கிடையாது.

போர்க்களத்தில் எதிர்த்து நின்று ஆயுதமேந்திப் பகைவனை வீழ்த்திப் பெறுகிற வெற்றியைக் காட்டிலும், பகைவனை நமது இனிய பண்பு மூலம் வசப்படுத்திக் கொள்கிற இந்த வெற்றி மிக மிக மேன்மை வாய்ந்ததாகும். போர்க்களத்தில் நமது ஆயுதத்தால் தாக்குண்டு வீழ்ச்சி அடையும் பகைவன் அந்தத் தருணத்தில் தோல்வியைத் தழுவினாலும் அவன் மனத்துள்ளே வன்மம் கொதித்துக் கொண்டிருக்கும். எப்பொழுது சந்தர்ப்பம் வரும் திருப்பி அடிப்பதற்கு என்றுதான் அவன் உறுமிக் கொண்டிருப்பான். ஆகவே, போர்க்களத்தில் பெறுகிற வெற்றி நிலையானதென்று சொல்ல முடியாது. அதற்கு மாறாகப் பகைவனுக்கு அருளின்ற நன்னெஞ்சத்தோடு அவன் செய்த குற்றங்களையெல்லாம் மறந்து அவனை ஆரத் தழுவிக் கொண்டால் அதன் மூலம் எய்துகிற வெற்றி நிலையானது; அழியாதது.

பகைவர்களை முறியடிப்பதற்கு...

அதனால்தான் எப்போதோ செய்த ஓர் உதவியை மனத்தில் கொண்டு அதன்பிறகு செய்த கொடுமைகளையெல்லாம் மறந்து விடும்படி வள்ளுவர் அறிவுறுத்துகிறார். பகைவர்களை முறியடிப்பதற்கு இதனைவிடச் சிறந்த வழி கிடையாது. பகைவர்களை நமது காலடியில் சரணடையச் செய்வதற்கு இதனைவிடச் சிறந்த உபாயம் கிடையாது.

வள்ளுவர் நன்றி உணர்வைப் பற்றிச் சொல்வது யாது? "ஒருவர் செய்த உதவியை எப்போதும் மறவாதே! ஏழு பிறப்பு எடுத்தாலும் அதனை இதயத்தில் வைத்துப் போற்று. உதவி செய்த ஒருவர் பிற்பாடு கொலை வதைகளைச் செய்தாலும் அந்த வதைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் பழைய உதவியை நினைத்துக் கொள். முன்பு செய்த அந்த உதவியை நினைத்துக் கொண்டால் பிற்பாடு அவன் செய்கிற கொடுமைகளை எல்லாம் மறந்துவிட முடியும். தீமை செய்கிறவர்களுக்கும் நன்மையே செய். அதுதான் அவர்களுக்கு நீ கொடுக்கக்கூடிய நல்ல தண்டனை."

இந்தக் கருத்துக்களை எல்லாம் நமது நெஞ்சத்தில் நன்கு பதிய வைக்கத் திருக்குறளில் நன்றி உணர்வைப் பற்றிக் கூறுகிற செய்யுள்களைப் பலமுறை படிக்க வேண்டும். குறிப்பாக செய்நன்றியறிதலுக்குச் சிகரம் வைத்ததுபோல் அமைந்திருக்கும் இந்தச் சீரிய குறள் நமது மனத்தில் நன்கு பதியவேண்டும். பதிவதோடு நமது மனத்தைப் பக்குவப்படுத்தி நமது அன்றாட வாழ்க்கை முறையாகவும்- வாழ்க்கை நெறியாகவும் இந்தக் குறள் மிளிரவேண்டும். இத்தகைய உயரிய நன்றி உணர்வு மாந்தரின் உள்ளத்தில் கோலோச்சத் தொடங்கிவிட்டால் அருள் நெஞ்சம் பெருகி இருள் நெஞ்சங்கள் அற்றுப் போகின்ற நன்னாள் உருவாகும். அந்தக் குறிக்கோளோடு இந்தக் குறளை மீண்டும் மீண்டும் படிப்போம். வாழ்க்கையில் கடைப்பிடிப்போம்.

கொன்றன்ன இன்னா செயினும்
அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும் (109)



2-1=0

இரா.முத்தரசன்

னதைக் கேட்டதும் எனக்குக் காஞ்சனாவின் மேல் ஒரு கீழ்த் தரமான எண்ணம் ஏற்பட்டு விட்டது. அப்போதே போய் அவளைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்ற ஆவல் கொழுந்துவிட்டது.

காஞ்சனா என்னோடு ஒன்றாகப் படித்த தோழி. அவளுக்கு முன்னமேயே எனக்குத் திருமண மாகிவிட்டது. அவளுக்குத் திருமணம் நடக்கும்போது நான் ஒரு குழந்தைக்குத் தாயாகி இருந்தேன். அவள் திருமணம் முடிந்து கணவனுடன் சிரம்பான் சென்றுவிட்டாள். அடிக்கடி கோலாலம்பூருக்கு வருவாள். பக்கத்துத் தெருவில்தான் அவளுடைய அம்மாவின் வீடு இருப்பதால் நான் சென்று அவளைப் பார்த்துவிட்டுவர சிரமம் இருப்பதில்லை.

இன்றும் அப்படித்தான் வந்திருக்கிறாள் காஞ்சனா. ஆனால் ஒரு மாற்றம். கணவனோடு அல்ல; தனியாக...

காரணம்...

என் மாமியார் சொல்லித் தான் தெரிந்துகொண்டேன். காஞ்சனாவிற்கு கல்யாணம் ஆகி ஆறு வருடங்கள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. எத்தனையோ மருத்துவர்களிடம் பார்த்தாகி விட்டதாம். ஒன்றும் ஆகவில்லையாம். கணவனுக்கு பிள்ளை பெற்றுத்தரும் சக்தியில்லையாம். அதனால் அவளிடம் இருந்து காஞ்சனா பிரிந்து வந்து விட்டாளாம்!

"வா ராதா...!" அவளைப் பார்க்கச் சென்ற என்னைச் சலனமில்லாத முகத்தோடு வரவேற்றாள் காஞ்சனா!

மௌனமாக அவளோடு அறைக்குச் சென்றேன். என் பார்வை அவளிடமிருந்து அகலவில்லை. உள்ளே அமர்ந்ததும் மெல்லக் கேட்டாள், "என்ன ராதா, அப்படிப் பார்க்கறே?"

"நீ பழைய காஞ்சனாவானு பார்க்கறேன்! நான் கேள்விப் பட்டதெல்லாம் உண்மையா?"

"உண்மையை நீ கேள்விப் பட்டிருந்தா, நீ கேள்விப்பட்டது உண்மைதான்!"

"என் தோழி காஞ்சனாவா நீயினு எனக்குச் சந்தேகமா இருக்கு. ஒரு குழந்தையைப் பெற்றுத்தர முடியாத கணவன் என்கிற காரணத்தை வச்சி உன் கணவர்கிட்ட இருந்து பிரிஞ்சி வந்திருக்கியே. உன்னோட இல்லற வாழ்க்கையையே விட்டுட்டு வந்திருக்கியே! இதுதான் நீ கற்பிக்கிற நியாய தர்மமா; உன் கணவருக்காக எதை வேண்டுமானாலும் இழக்கத் தயார்னு எப்பவும் சொல்லிக்கிட்டு இருப்பியே!

"இப்ப பிள்ளைபாக்கியத்தைத் தரமுடியாத அவரோட வாழ்க்கை நடத்த முடியாம ஓடி வந்திட்டியே! குழந்தையில்லாம இல்லற வாழ்க்கை நடத்த முடியாதா?" –அடுக்கிக் கொண்டே போனேன் நான்.

"ராதா!" — காஞ்சனாவின் குரலில் முரட்டுத்தனம் தோய்ந்திருந்தது.

"நீ நினைக்கிறது தவறு. யாரோ உன்கிட்ட தவறான செய்தி சொல்லியிருக்காங்க! குழந்தை பெறத் தகுதியில்லாதவர் அவர் இல்லே! நான்தான்... நான்தான் அந்தப்பாவி!" -அவள் அழுதாள்.

"குழந்தை மேல கொள்ளை ஆசை வச்சிருக்கிற அவரு. ஒரு குழந்தையைப் பெற முடியாத என்னோட வாழ்றதைவிட உடல் கோளாறு இல்லாத; குழந்தையைப் பெறக்கூடிய இன்னொருத்தியோட வாழலாமில்லையா? அதை நான் அவரிடம் சொன்னேன். ஆனா அவரு மறுத்திட்டாரு. என்னோட வாழ்றதையே பெரிசா நினைக்கிற அவரோட பக்கத்தில நான் இருக்கிற வரைக்கும், அவருடைய மனசு மாறப்போறதில்லைங்கறதைநான் புரிஞ்சுகிட்டேன். அதனால நான் அவரை விட்டு விலகி வந்துட்டேன். நான் பக்கத்திலே இல்லாதபோதாவது அவரு மனசு மெல்ல மெல்ல மாறும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு! அந்த நம்பிக்கையோட அவர் மனம் மாறுநாளை எதிர்பார்த்துக்கிட்டு கடைசி வரைக்கும் அவருக்கு மனைவியா தனியாகவே நான் வாழ்ந்திடுவேன்!" கம்மிய குரலில் கூறி முடித்துவிட்டு கழுத்திலிருந்து தன் தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் அவள்.

நான் கல்லாய்ச் சமைந்து நின்றேன்!



கலைஞர் எழுதுகிறார்

"ரகுபதி ராகவன் ராஜாராம்" என்ற படத்தைத் தயாரித்து வழங்கிய உமா சித்ரா நிறுவனத்தினர் தற்சமயம் நெஞ்சுக்கு நீதி என்னும் புதுப் படத்தைத் தயாரித்து வருகிறார்கள். ஜெய்சங்கர், முத்துராமன், ஸ்ரீதேவி போன்றவர்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வரும் இப்படத்தின் கதை-வசனத்தை தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி எழுதுகிறார்.

பிரியா

பிரபல நாவலாசிரியர் "சுஜாதா" எழுதியுள்ள பிரியா எனும் கதை விரைவில் திரைப் படமாகவிருக்கிறது. அதில் சில காட்சிகள் மலேசியாவில் எடுக்கப்படவிருப்பதாகவும், மலேசியாவைச் சேர்ந்த ஒரு நடிகர் அப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவிருப்பதாகவும் பேச்சு அடிபடுகிறது.

வருவான்......

"அவன்தான் மனிதன்" படத்தில் குளுகுளு கலரில் பினங்கு காட்சிகள் இடம் பெற்றிருந்ததை ரசிகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இப்போது "வருவான் வடிவேலன்" என்ற வண்ணத் தமிழ்ப்படத்திற்காகக் கடந்த ஜனவரி 22,27ஆம் தேதிகளில் விஜயகுமாரும், படாபட் ஜெயலெட்சுமியும் நடித்த காதல் காட்சி ஒன்று பினங்கு கொடிமலை ரயிலில் படமாக்கப்பட்டுள்ளது. மேலும் பினங்கு ஃபெர்ரி, தண்ணீர்மலை முருகன் கோயில் மற்றும் கெந்திங் மலை ஓட்டலிலும் மேலும் சில காட்சிகளைப் படமாக்கியுள்ளார் அப்படத்தின் டைரக்டர் கே. சங்கர்.

நடிகை "ராங்நம்பர்" விஜயா தன் உடலைக் கட்டாக வைத்துக் கொள்ளவும் பருக்காமல் இருப்பதற்கும் மற்ற எந்த நடிகைகளும் கையாளாத ஒரு புதுமுறையைக் கையாளுகிறார். அது என்ன தெரியுமா? "ரோல்லர் ஸகேட்ஸ்" என்ற சக்கரக் காலணியை அணிந்து சறுக்கிவிளையாடும்ஆட்டத்தைத் தினமும் தவறாமல் இவர் செய்து வருகிறார்.

குமுதினி

மாத்ருபூமி என்ற படத்தின் மூலம் அறிமுகமான அந்தக் காலத்து நடிகை டி.வி. குமுதினி பல ஆண்டுகளுக்குப் பின்னர் அண்மையில் வெளிவந்துள்ள "நாம் பிறந்த மண்" என்ற புதுப்படத்தில் நடித்துள்ளார். அந்தக் காலத்தில் தியாகராஜ பாகவதர், பி. யூ. சின்னப்பா போன்றவர்களோடு இணைந்து நடித்துள்ள இவர் இப்போது தமிழகத்தில் ரேடியோ நாடகங்களில் நடித்துத் தன் வாழ்க்கை -கையை ஓட்டி வருகிறார்.




134 ஆவது...

எம். ஜி. ஆரின் நடிப்பில் வெளிவந்த முதல் படம் சதி லீலாவதி. 100ஆவது படம் ஒளிவிளக்கு. அண்மையில் தமிழகமெங்கும் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் அவரின் 134ஆவது படமாகும்.

தொகுப்பு:
ராஜாமகன்



இக்கோலத்திலும் இவர் புன்னகையை
மறக்கவில்லையே?
"தேவியின் திருமணம்" திரையில்
"புன்னகை அரசி" கே. ஆர். விஜயா



உண்மைகள்

சா.ஆ.அன்பானந்தன்

தனிமை சிலரை அறிஞராக்குகின்றது. சிலரை வெறியராக்குகின்றது. சிலரைப் படைப்பாளியாக்குகின்றது. சிலரைச் சோம்பேறியாக்குகின்றது. ஆனால் சோகத்தில் வீழ்ந்தவர்களையோ எண்ணப் போராட்டத்தில் தூள் தூளாக்கி விடுகின்றது.

"தண்ணி சுடுதா! கொண்டாங்க ஆற்றித்தர்ரேன்!" என்று கையை நீட்டினாள் கண்மணி.

"பரவாயில்லே! குடிச்சுடுறேன்" என்று சொல்லிய நான் ஊதி ஊதித் தேநீரைக் குடித்தேன். நான் குடிப்பதைப் பார்த்துக் கொண்டே நின்றாள் கண்மணி. எத்தனையோ சூடுகளைத் தாங்கிப் பழக்கப்பட்டு விட்ட எனக்கு இந்தச் சூடா பெரிது! ஆனாலும் "அத்தான்! கொண்டாங்க ஆற்றிக் கொண்டு வர்ரேன்!" என்று கையிலிருந்த தேநீர்க் கோப்பையை வாங்கிக் கொண்டாள் கண்மணி.

கோப்பையைக் கொடுத்த நான் கையை அழுந்தத் தேய்த்துக் கொண்டேன்... சற்றைக்கெல்லாம் சுட்ட இடம் மாறி விட்டது. ஆனால்...

"இந்தாங்க அத்தான்! ஆற்றிட்டேன்!" என்று சூடு பறந்த தேநீரை நன்றாக ஆற்றிக் குடிக்கும் பக்குவத்தில் திரும்பக் கொணர்ந்து கொடுத்தாள் கண்மணி. அப்போது சூடு மிதமாக இருந்தது. தேநீரை ஒரே இழுப்பாக இழுத்துவிட்டுக் கோப்பையை மேசை மீது வைத்தேன். கண்மணி கோப்பையை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

அண்ணாந்து பார்த்தேன். மின் விசிறி சுற்றிக் கொண்டிருந்தது. அது சுற்றுவதையே பார்த்துக் கொண்டிருந்தேன். விசிறி அலை அலையாகக் காற்றைத் திரட்டி என்மீது வீசிக்கொண்டிருந்தது. உடல் சூட்டை ஓரளவேனும் அது குறைத்துக்கொண்டிருந்தது... ஆனால் என் உள்ளத்துச் சூட்டை இந்த விசிறி ஆற்றி விடுமா?

உலை மூடியில் சார்ந்திருந்த நீராவி வெளிக்காற்றுப்பட்டால் நீராகி ஒழுகுவதைப்போல், என் உள்ளத்துச் சூட்டின் ஆவி கண் வழியே வெளிப்படும் போது அது கண்ணீராகிக் கசிந்தோடியது... சுட்ட தேநீரைக்கூட ஊதி ஊதியேனும் குடித்து விடுகிறேன. ஆனால் சுட்ட என் உள்ளத்தைப் பலவகையிலும் ஊதி ஊதித்தான் பார்க்கிறேன். அந்த மனம் மட்டும் ஆறமாட்டேன் என்கிறதே! ஏன்?

இதயம் என்கிற நுட்பத் திரட்சியில் இந்த மனம் என்பது எங்கே இருக்கிறது. அதன் உருவம் என்ன? அதனிடம் எப்படித் தொடர்பு கொள்வது... ஒன்றும் புரியவில்லை. உணர்வு ஒன்றினாலேயே தீண்ட முடிந்த அந்த மாயக்களத்தைத் தொட்டுத் துயரந் தீர்க்க என்றால் ஏன் முடியவில்லை?

தான் ரத்த பாசமா? நீ மறைந்தாலும் உன் தொடர்பு என்னை விட்டு நீங்காதா? என் உதிரத்திலும் உணர்விலும், நாளங்களிலும் உன் ஆட்சிதான் ஓங்கியிருக்கிறதா? ஆமாம்! அம்மா! உண்மைதான்! நீதானே நான்! நான்தானே நீ! பிறக்கும்போது உன் கொடியின் தொங்கலில் தானே நான் தொங்கிக் கொண்டிருந்தேன்! உன்னிடமிருந்து என்னைக் கத்தரித்துப் பிரித்தாலும் என்னில் சார்ந்துவிட்ட உன் உறவை எப்படித்தான் கத்தரிப்பது? அம்மா! அம்மா!"

பொங்கிய உலை, மூடியை விலக்கிக் கொண்டு வழிவது போல இமைகளை நீக்கிக் கொண்டு கண்ணீர் பெருகி வழிந்து கொண்டிருந்ததை நான் அறிந்தும் அதைத் துடைத்து விட விரும்பவில்லை. துடைத்தால் நின்றுவிடவா போகிறது? அணை உடைத்துப் பாயும் மடையல்லவா அது!

"அத்தான்! உங்களுக்கு நானா ஆறுதல் சொல்றது! அத்தைக்கு வயசாயிடுச்சு! பக்கவாதமோ தீர்க்க முடியாத நோயாயிடுச்சு! அதனாலே நாம்ப அவங்களக் காப்பாத்த முடியல! அதுக்காக விடாம கவலைப் பட்டு ஆகப்போறது என்ன? கவலைப்பட்டா திரும்பியா வந்துடுவாங்க!"

திரும்பிவந்த கண்மணி வழியும் கண்ணீரை முந்தானையால் துடைத்துவிட்டாள்! வீங்கிய முகத்தை அன்பாக வருடிக்கொடுத்தாள்! இதமாகத்தான் இருந்தது! அதே கரம் அம்மாவின் கரம்போல அன்பு செய்யும்போது அம்மாவை மறக்கவா முடிகிறது. அவளின் பிரிவைத் தாங்கிக்கொள்ளவா முடிகிறது!

நிமிர்ந்துகண்மணியின்முகத்தைப் பார்த்தேன்! "அழாதீங்க அத்தான்! ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்களே அழுதால் எப்படி?"

"கண்மணி! அழாமல் இருக்கத்தான் பார்க்கிறேன்! முடி

அம்மா எங்களுக்காகப் பட்டபாடுகளை நினைக்கநினைக்கத் துக்கம் தாங்கலே கண்மணி!"

"அத்தான்! கடந்துபோனத நினைச்சா கவலையாதான் இருக்கும். அதையெல்லாம் மறந்துடுங்க! கவலை பறந்திடும்."

"இம்! மறக்கிறதா! மனம்னு ஒண்ணு இருக்கிறதே மறக்காம இருக்கிறதுக்குத்தானே! அதுவும் தாயப் பத்திய நினைவுங்கள்லாம் மறக்கமுடியாத காவியங்களாச்சே கண்மணி! எப்படி மறக்கிறது! நானும்தான் பலபேருக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறேன்! பிறக்கிறவங்க இறக்கிறது சகஜம்னு, இருக்கும்போது கவலைப்படறது மடத்தனம்னு கண்டிச்சும் பேசித்தான் இருக்கேன்! ஆனு அதுவே என்னைத் தாக்கும்போது என்னுல கலங்காம இருக்க முடியலே! கவலைப் படாம இருக்கமுடியலே! என்ன செய்வேன்! ஒண்ணு தந்தையாவது இருக்கணும். இல்லாட்டி தாயாவது இருக்கணும். இரண்டும் இல்லாத பிள்ளைக்கு அனுதைன்னுதானே பேரு! அந்தப் பேரு எனக்கும் வந்துடுச்சே கண்மணி! நான் அழாம எப்படி இருப்பேன்! சொல்லு! சொல்லு!"

கண்மணியின் கைகளை இறுகப் பிடித்துக் குலுக்கிய குலுக்கலில் அவளே பயந்துவிட்டாள், எனக்கு என்னவோ ஏதோ என்று...

அவளின் அழகிய விழிகள் மிரண்டபோது என் மனம் துணுக்குற்றது. "எந்தப் பிறப்பும் அனுதையாகிவிடக்கூடாது என்றுதானே கணவன் மனைவி வாழ்க்கையே அமைந்திருக்கிறது." அதை உறுதிப்படுத்தும் வகையில் என்னை அப்படியே தன் நெஞ்சக்களத்தில் சேர்த்துக்கொண்டாள். மனைவியின் நெஞ்சில்தான் முகம்புதைத்தேன்! ஆனுல் அதுவும் மாதாவின் நெஞ்சாகத்தான் சுகம் தந்தது... அதனுல்தான் தாய்க்குப் பின் தாரம் என்றார்களோ!

குழந்தைபோல் புதைந்த என் தலையைக் கண்மணி அன்பாகக் கோதினுள். ஆதரவாக வருடிவிட்டாள்! எரியும் புண்ணில் குளிர்ந்த பூச்சுபோல் சற்று ஆறுதலாக இருந்தது எனக்கு!

அப்போது உலை கொதிப்பது கேட்டது. "அத்தான், உலை கொதிக்குது! இதோ பார்த்து விட்டு வந்துடறேன்!" அடுக்களைக்குள் புகுந்தாள் கண்மணி. எரியும் வேகத்தைக் குறைத்தாலோ, சற்று தண்ணீரை வார்த்தாலோ உலையின் கொதிப்பு அடங்கும். ஆனுல் என் மனக் கொதிப்பை எப்படித்தான் அடக்குவது?

"அம்மா!" என்றவாறு சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். இப்போது நான் மட்டும் தனிமையில் இருந்தேன். தலைக்குமேல் விசிறி சுற்றிக்



காரம் அனது ... ...
நடையைத் தாளம் தவறாமல் போட்டுக் கொண்டிருந்தது.

தனிமை சிலரை அறிஞராக்குகின்றது. சிலரை வெறியராக்குகின்றது. சிலரைப்படைப்பாளிபாக்குகின்றது. சிலரைச் சோம்பேறியாக்குகின்றது. ஆனால் சோகத்தில் வீழ்ந்தவர்களையோ அது எண்ணப் போராட்டத்தில் தாள்தூளாக்கி விடுகின்றது. பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக உள்ள மேடையில் புதிய நாடகமாக ஓடத் தொடங்கிவிடுகின்றன.

இருளைக்கக்கிவிட்டு மறையும் பொழுதைப்போல கரிய புகையைக் கக்கிவிட்டு லாரிகள் சென்று மறைந்தன. இருளைக் கக்கிய பொழுது, அடுத்த பன்னிரண்டு மணிக்குள் மீண்டும் ஒளியைத் திருப்பிக் கொண்டு வந்துவிடும். ஆனால் கரும்புகையைக் கக்கிவிட்டுச் சென்ற அந்த லாரிகள்...?

அப்பா போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்த அம்மா அப்படியே அசையாமல் நின்றிருந்தாள். ஈரம்பட்ட கித்தா மரத்தில் ஒழுகும் மழை நீரைப் போல அம்மாவின் கன்னங்களில் நீர் ஒழுகிக் கொண்டிருந்தது. நானும் தம்பியும் ஓடி அம்மாவின் கைலியைப் பிடித்துக் கொண்டோம். அக்கா தனமும், பாக்கியமும் ஓடி அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டனர்.

அப்படியே அசையாமலிருந்த அம்மா குனிந்து எங்களைப் பார்த்தாள்! அக்கா தனத்தையும், பாக்கியத்தையும் பார்த்தாள். அவளுக்குத் துக்கம் தாளவில்லை. அப்படியே குஞ்சுகளைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் தாய்க் கோழியைப்போல அம்மாவும் எங்களை இறுக்கி அணைத்துக் கொண்டாள். அந்த இறுக்கம் அம்மாவுக்குப் புதிய உறுதியைக் கொடுத்திருக்கும்.

"என் கண்ணுங்களா, உங்கள எப்படித்தான் காப்பாத்தப் போறேன். நல்லதங்காளாட்டம் உங்கள வச்சுக்கிட்டு என்ன பாடுபடப் போறேனோ தெரியலேயே!" என்று சொல்லி பெருசா இருக்கிற அம்மாவே அழும் போது சிறுசா இருக்கிற எங்களால் சும்மா இருக்கமுடியுமா என்ன?

"நாங்கள் மட்டுமா இப்படி? அதோ மருதாயி அத்தை, அதோ ஸ்டோருகாரரு பொஞ்சாதி பொன்னம்மா, அதோ பொஞ்சாதி அஞ்சலை, அதோ கெங்கன் கங்காணி மகன் முருகன், மைக்கேல்மாமா வோட ஊட்டுக்காரங்க மேரியம்மா என் கூடவே விளையாடுமே சின்னமுகு, சீனியம்மா, குப்பன், கன்னியப்பன், சின்னக்காளை, வரதம்மா, கன்னியப்பன், முனியாண்டி எல்லாரும் அப்படித்தான் அப்பாக்களையும் புருசனுங்களையும் அனுப்பிட்டு ஏங்கி நிக்கிறாங்க! தலைமேல கைய வச்சுக்கிட்டுக் குந்தி அழுறாங்க பாவம்! உலு கலிடோனியா தோட்டத்து அந்த பெரட்டுக் களம் எழவு விழுந்த வீடுபோல மாறிக்கிடந்தது... பெரட்டுக் களம்னு சும்மாவா சொன்னுங்க! சண்டையிலே, புருசன், புள்ளைய, அண்ணன், தம்பியப் பறிகொடுத்த மாதிரி நாங்கள் எல்லாம் ஏங்கணும், வீங்கணும், வேதனைகள தாங்க முடியாம அழணும்னு நினைச்சித்தான் அமைதிப் பெரட்டிப் போடும் களம்னு பேரு வச்சானுங்களோ என்னவோ" என் சின்ன மனத்தில் இப்படி எல்லாம் நினைப்புக்கள் நிழலாடின... எனக்குள்ளேயே ஆத்திரம், வெறுப்பு, ஆவேசம் மூண்டது. அம்மா அழ அழ என் மனம் விழித்துக் கொண்டது. ... ஓர் உணர்ச்சி.

"அம்மா, அழுவாதேம்மா! நான் இருக்கிறேன்! உனக்கு என்ன வேணுமோ அல்லாத்தையும் நான் செய்றேன்மா, அழுவாதேம்மா! அழுவாதே!" என்று என் பிஞ்சுக்கரத்தால் அம்மாவின் கண்களைத் துடைத்து விட்டேன்.

நான் சொன்னதைக் கேட்டதும் தம்பி வரதனும் "அம்மா! அழுவாதே! நானும் இருக்கிறேன்! ஆங்" என்று அவன் சொன்னபோது இப்பொழுது நினைத்தாலும் "தம்பி! தம்பி...!" தாய் மீது எங்களுக்கிருந்த பாசம் சொல்லித் தீருமா? எழுதி மாயுமா?

"அட ராசாக்களா! நீங்க இருக்கும்போது அம்மா ஏன் கவலைப்படறேன்! இது போதும்டா என் கண்ணுங்களா? என் ராசாத்திகளா!" என்று எங்களை வாரி எடுத்து அணைத்து முத்தமிட்டபோது வான்மும் உருகியது, மேகமும் பொழிந்தது !

(வளரும்)

முதல் ஆயுள் சந்தாதாரர்

மூன்றெழுத்துக்கு என்றுமே, எங்குமே ஒரு தனிமதிப்பு இருப்பது உண்டு.


தமிழ்- வ. உ.சி-ம. பொ.சி.- அண்ணா இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்! அந்த வரிசையிலே நம் நாட்டிலும் மூன்றெழுத்துப் பெரியவர்கள் இருக்கிறார்கள்.

அ. மு. சு. அவர்களில் ஒருவர்.

அ. மு. சு. பெரியசாமி என்னும் இத்தமிழ்ப் பெரியார் உழைப்பால் உயர்ந்தவர். பல நல்ல சேவைகள் புரிந்தவர். புரிந்தும் வருபவர். $ 300 கொடுத்து புதிய சமுதாயத்தின் முதல் ஆயுட்கால சந்தாதாரராக ஆகியிருக்கும் அ. மு. சு. அவர்கள் நமக்கு எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்:

"நமது புதிய சமுதாயத்திற்கு நான் முதலாவது ஆயுள் அங்கத்தினர் என்பதில் பெருமை கொள்கிறேன்."

ஏற்கனவே "மலைமகள்" என்னும் திங்கள் ஏட்டின் சிறப்பாசிரியராக இருந்து அதனைச் சிறப்புற நடத்திய அ. மு. சு. அவர்கள் புதிய சமுதாயம் இதழின் வளர்ச்சிக்கு மற்றும் பலருக்கு வழிகாட்டுகின்ற முறையில் கை கொடுக்க முன் வந்திருப்பது குறித்து பெரிதும் மகிழ்ச்சியடைவதோடு, அன்னாருக்கு எங்களின் உளங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



மார்ச்சு 10 வரை

15 நாள் பலன்

கும்பம் (ஜன 20 — பிப் 18)

அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட மாதிரி அடுத்தவர்களின் பேச்சைக் கேட்டு வீட்டிலுள்ளவர்களுடன் தகராறு பண்ணுதீர்கள். பணம் தாராளமாகப் புழங்கும் அதனால் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் தான் சிறப்பாக வாழ முடியும் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

மனைவி வழியில் பிரச்சனைகள் தோன்றக்கூடும். சமாளிப்பதற்கு ஆயத்தமாக இருங்கள்.

மீனம் (பிப் 9- மார்ச்சு 20)

மேலதிகாரிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரிடத்திலும் எச்சரிக்கையுடன் பழகுங்கள். தலைக்குமேல் பாம்பு கொத்துவதற்குச்சமயம் பார்த்திருக்க, அதுதெரியாமல் "ஹாயாக" இருப்பவனின் நிலைமை உங்களுடையது.

கொடுக்கல் வாங்கல் சுமாராக இருக்கும். வெளியூரிலிருந்து நல்ல சேதி வரும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும்.

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

பகைவர்கள் நண்பர்களாவார்கள். பெரியோர்களின் நட்பும், மேலதிகாரிகளின் பாராட்டும் கிட்டும். ரேஸ், லாட்டரி போன்றவற்றில் ஈடுபட்டுப் பணத்தை இழக்கும் பைத்தியங்களின் பட்டியலில் நீங்களும் ஒருவராகி விடாதீர்கள். ஏனெனில் உங்களிடமுள்ள ஒரு காசுகூட உங்களைப் பொறுத்த வரையில் நூறு வெள்ளிக்குச் சமம்.

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணுயிருக்கும் உங்களுக்குப் பொதுவாக எல்லா வகைகளிலும் "ஓகோ" என்று இல்லாவிட்டாலும் சுமாரான நன்மைகளே கிட்டும். யாரையும் வளைப்பதில் சாமர்த்தியசாலியான உங்களுக்குப் பெரியோர்களின் ஆதரவுகிட்டும் என்பதற்கு ஜோசியமா பார்க்க வேண்டும்.

மிதுனம் (மே 21 - ஜுன் 20)

நண்பர்களுக்கு உதவி செய்யும் அவசியம் ஏற்படும். தனக்கு மிஞ்சிதான் தர்மம் என்பதை இந்த விஷயத்தில் மறந்து விட வேண்டாம். உடலாரோக்கியம் பாதிக்கலாம். வாகன போட்டுவதில் கவனம் தேவை. குடும்பத்தில் பிள்ளை, மனைவி வகையருக்களில் மருத்துவச் செலவு ஏற்படக்கூடும். கூட்டுத் தொழிலில் தற்காலிகமான பிரச்சனைகள் தோன்றும். கடிதப் போக்குவரத்தில் நன்மை உண்டு.

கடகம் (ஜுன் 21- ஜுலை 20)

கூட்டுத்தொழில் வெற்றியளிக்காது. ஆடம்பரச் செலவுகள் அதிகமாகும். அதனால் கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். கவனமாக இருங்கள். உறவினர்களால் வீண் விவகாரங்கள் உண்டாகும். மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். அதன் விளைவாக செய்தொழிலில் மாற்றம் ஏற்படலாம். வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள நேரும்.

சிம்மம் (ஜுலை 21 - ஆக 12)

கொடுக்கல் வாங்கலில் சிறு சிறு சிக்கல் ஏற்படும். கேட்டது கிடைக்கவும் கொடுத்தது கிடைக்கவும் கொஞ்சம் சிரமம். பொறுமையோடு இருந்தால் நீங்கள் நினைத்தது நடக்கும். எதிலும் அவசரப்பட்டுக்காரியத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். தொலை தூரத்திலிருந்து வரும் சேதி நல்லதாக இருக்காது. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்களின் உதவிக்குப் பஞ்சமில்லை.

கன்னி (ஆக. 22 - செப். 22)

சில புதிய திட்டங்களின் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்புக்களை உருவாக்குவீர்கள். விடா முயற்சியுடன் அவற்றில் ஈடுபடுங்கள். வெற்றி உங்களுக்கே! நண்பர்களின் ஆலோசனை பலனளிக்கும். அதே வேளையில் உறவினர்களின் யோசனைகள் ஒன்றுக்கும் உதவாது போகலாம். எதையும் சீ தூக்கிப் பார்த்துச் செய்யுங்கள். ரேஸ், லாட்டரி போன்றவற்றில் குருட்டு அதிர்ஷ்டம் அடிக்கலாம்.

துலாம் (செப் 23-அக 22)

இது வரை இருந்து வந்த சிக்கல்களெல்லாம் இனி கொஞ்சம் சன்னஞ் சன்னமாக மறையும் வாய்ப்புண்டு. உடலாரோக்கியம் பாதிக்கலாம். செய்தொழிலில் மேன்மை உண்டாகும். நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்க முயலுங்கள். பெரியோர்களின் ஆதரவு எதிர்பார்த்ததுபோல் கிடைக்காது. தொழிலாளிகளுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், முதலாளிகளுக்குத் தொழிலாளர்களின் ஆதரவும் கிட்டும்.

விருச்சிகம் (அக் 23-நவ. 22)

நேருக்குநேர் புகழ்ந்துவிட்டும் பின்னால் தூற்றி மகிழும் நண்பர்களை வைத்துக் கொண்டிருக்கும் நீங்கள் நிம்மதியாக இருக்க முடியுமா? முதலில் அவர்களைக் களை எடுங்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பும் ஆதரவும்தான் உங்களுக்கு இப்போது பெரிய சொத்து. கடன் தொல்லை குறையும். செய்தொழிலில் சிக்கல் உருவாகலாம். முன்னெச்சரிக்கையுடன் இருங்கள்.

தனுசு (நவ 23 - டிச. 20)

சொத்து விவகாரங்களில் சிக்கல் தோன்றலாம். முடிவில் வெற்றி உங்களுக்கே. எதிலும் கையெழுத்திடுவதில் கவனம் தேவை. பொருளாதார ரீதியில் எதைச் செய்தாலும் கூட்டாகச் செய்வது பலனளிக்கும். கடினமாக உழைக்க வேண்டியிருப்பதால் உடலாரோக்கியம் பாதிக்கலாம் எதிர்பார்த்த உதவிகள் கிட்டாது.

மகரம் (டிச 21- ஜன.19)

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது மாதிரி பிரச்சனைகளின் முன்னே நீங்கள் விடப்பட்டிருக்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். நண்பர்கள் உங்களுக்குத் துணையாக இருப்பார்கள். பணத் தட்டுப்பாடு அதிகமாக இருக்கும். கடன் வாங்கும் விஷயத்தில் கொஞ்சம் நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். செலவைக் குறையுங்கள். உறவினர்களால் நன்மை உண்டு.

–தஞ்சை நகுலன்

உறவுப் பயணம்



ராமதாஸ் மனோகரன்

அன்று தேதி 29.12.77 வியாழக்கிழமை. அதிகாலையிலேயே எங்கள் ஆசிரியர் எழுந்துவிட்டார். நானும் டிரைவர் திரு. இராமசாமியும் அதன் பின்னர்தான் எழுந்தோம். மடமடவென காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சுடச்சுடக் காப்பி பலகாரங்களையும் ஒரு கை பார்த்துவிட்டுக் காலை 8.30 மணிக்கு நாங்கள் மூவரும் சுங்கைபட்டாணியிலிருந்து பட்டர்வொர்த் நோக்கிப் புறப்பட்டோம். அன்று மாலையில்தான் பினாங்கில் கலந்துரையாடல் நிகழ்ச்சி. அதற்கு முன்னால் என்னென்ன நிகழ்ச்சி நிரல்களை தமது மனத்திற்குள்ளேயே ஆசிரியர் போட்டு வைத்திருக்கிறாரோ?

"சார், இன்றைக்கு முதன் முதலில் நாம் எங்கே போகப் போகிறோம்?"–பொறுக்க முடியாமல் அவரிடமே கேட்டுவிட்டேன். அந்நேரம் வெற்றிலை பாக்குச் சுவையினை ரசனையோடு சுவைத்துக்கொண்டிருந்தார் ஆசிரியர். சில வினாடிகளுக்குப் பின்னர்தான் அவரிடமிருந்து பதில் வந்தது.

ஸ்டெயின்லெஸ் புரொடக்ட்ஸ் நிறுவன உரிமையாளர் திரு. ராம. பழனியப்பன் அவர்களைச் சந்திக்க வேண்டும். அதோடு பல நாட்டு மக்களும் பயன்படுத்த விரும்பும் லெட்சுமி எவர்சில்வர் பாத்திரங்கள் எப்படி உருவாகின்றன என்பதையும் நேரில் பார்க்க வேண்டும் இதுவே அன்றைய முதல் நிகழ்ச்சி என்பதை ஆசிரியரின் பதிலிலிருந்து புரிந்துகொண்டேன்.

பிறை தொழிற் பேட்டைப் பகுதியிலிருந்த லட்சுமி ஸ்டெயின்லெஸ் நிறுவனத்திற்கு முன்னால் எங்கள் கார் போய் நின்றது. "செக்கியூரிக் கோர்" அனுமதியுடன் நாங்கள் பணிமனைக்குள் சென்றோம். ஆசிரியரைக் கண்டதும் உள் அறையிலிருந்து எழுந்து வந்து மலர்ந்த முகத்துடன் கனிவுடன் வரவேற்றார் ஓர் இளைஞர். அவர் பெயர் திரு. ராஜமாணிக்கம். ராஜா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படுகிறார். அவர்தான் அந்நிறுவனத்தின் நிர்வாகியுமாவார். அவரைப் பார்த்ததும் எனக்கு வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

நீண்ட நாட்களாக எவர்சில்வர் எப்படி உருவாகிறது என்பதைப் பார்த்துவிட வேண்டுமென்ற துடிப்புடனிருந்த எனக்கு, நீண்ட நாட்களாகச் சந்திக்காமலிருந்த என் உறவினரையும் சந்திக்கும் வாய்ப்பும் அந்நேரம் கிட்டியது ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடித்து வீழ்த்தியது போல இருந்தது. அந்நிறுவன நிர்வாகியான திரு. ராஜா அவர்கள் எனக்குச் சிற்றப்பா உறவு முறையாகும். நீண்டநேரம் சுவாரசியமாக எங்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார் திரு. ராஜா. அவரின் மூலம் திரு. பழனியப்பன் அவர்கள் சிங்கப்பூர் சென்றிருக்கும் விவரமும் தெரிய வந்தது.

அடுத்து எங்களை லெட்சுமி எவர்சில்வர் பாத்திரங்கள் உருவாகும் தொழிற்கூடத்திற்குள் அழைத்துச் சென்று ஆரம்பத்திலிருந்து இறுதியில் உள்ளூருக்கும் வெளிநாட்டுக்கும் ஏற்றுமதியாகும் வரையிலுள்ள ஒவ்வொரு பகுதியையும் சுற்றிக் காண்பித்துச் சுவையான- விரிவான விளக்கங்களையும் தந்தார் திரு. ராஜா. ஒளிமயமான எதிர்காலம் ஸ்டெயின்லெஸ் பாத்திரங்களுக்கு இருக்கிறது என்பதைத் திரு. ராஜாவின் விளக்கவுரையிலிருந்து எங்களால் புரிந்துகொள்ள முடிந்தது.

விரிவான விளக்கவுரைக்குப் பின் திரு. ராஜா சுவையான தேநீரையும் பிஸ்கட்டுகளையும் வழங்கி, பின்னர்தான் எங்களை வழியனுப்பி வைத்தார்.

திரு. ராஜா அவர்கள் புதிய சமுதாயத்தின் முதல் ஆயுட்கால சந்தாதாரரான தமிழ்ப் பெரியார் திரு. அ. மு. சு. பெரியசாமிப் பிள்ளை அவர்களின் மருமகனாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலை மணி 10.30க்கு பிறையிலிருந்து பினாங்கு தீவிற்குச் செல்லும் ஃபெர்ரிக்காக கியூவில் எங்கள் காரும் போய் நின்றது. சுமார் கால் மணி நேரம் காத்திருந்த பிறகு ஃபெர்ரி ஒன்றின் கடைக்கண் பார்வை கிட்டி ஒரு வழியாக "பூலாவ் ராவா" என்னும் ஃபெர்ரியினுள் எங்கள் கார் அடைக்கலம் ஆனது. முதலில் காரை விட்டு ஆசிரியர் கீழே இறங்கினார். அதன் பின்னர் காருக்கு உள்ளே நாங்கள் இருப்போமா? கூண்டிலிருந்து விடுபட்ட பறவை போல நான் ஃபெர்ரியின் மேல்தளத்திற்குச் சென்றுவிட்டேன். மேலே நிறையப்பயணிகள் அமர்ந்திருந்தனர். அங்கிருந்த ஒரு வாலிபர் தனது 'கெசட்' பிளேயரைத் தட்டிவிட்டார். "கடலோரம் வாங்கிய காற்று குளிராக இருந்தது நேற்று." என்ற பாடல் அதில் ஒலித்தது. என்ன பொருத்தமான பாடல்?

அந்நேரம் சிலுசிலுவென கடற்காற்றும் வீசிக்கொண்டுதான் இருந்தது. சில நிமிடங்களில் எக்கச்சக்கமான சுமைகளைச் சுமந்துகொண்டு மெல்ல நகரத் தொடங்கியது அந்தப் ஃபெர்ரி. அதனுடைய சேவையை எண்ணிப் பார்த்தேன்...

"வேரிலே சேவை யாக்கி
விட்டநீர் தலைபால் நல்கும்
சீரிய இளநீர்ச் சேவை
தென்னையில் கண்டேன்;
மன்னன்
பாரியின் சேவை முல்லை
படர்ந்ததோர் தேரில்
கண்டேன்;
ஃபேரியின் சேவை தன்னைப்
பினாங்கு சேர் கடலில்
கண்டேன்"

எனும் கவிஞர் கரு. வேலுச்சாமியின் கவிதைதான் அந்நேரம் என் நினைவுக்கு வந்தது.

சுமார் 25 நிமிட நேரத்திற்குப் பின்னர் பினாங்கு வந்தடைந்தோம். முதலில் பிஷப் ஸ்திரீட்டிலுள்ள கவிஞர் சி. அன்பானந்தம் அவர்களின் கடைக்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்பது ஆசிரியர் அவர்களின் திட்டம். அதன்படியே முற்பகல் 11.15 மணிக்கு கவிஞர் அன்பானந்தம் அவர்களின் இருப்பிடத்

திற்கு போய்ச்சேர்ந்தோம். அவர் கவிஞருக்கே உரிய கனிவுடன் ஆசிரியரையும் எங்களையும் வரவேற்றார்.

கடையினுள் இருந்த மேஜை ஒன்றின் மேல் ரோஸ் கலரில் ஓர் அடுக்குத் துண்டுப் பிரசுரங்கள் இருந்ததைக் கண்டேன். மெல்ல அதிலிருந்து ஒன்றினை எடுத்துப் பார்த்தேன்!

"புதிய சமுதாயம் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியத்துடன கலந்துரையாடல்" என்ற வாசகம் பெரிய எழுத்தில் அதில் காணப்பட்டது. அதற்குக் கீழே தேவான்ஸ்ரீ பினாங்கிலுள்ள மாநாட்டு அறையினில் கலந்துரையாடல் நடைபெறவிருக்கும் முழு விவரங்கள் அச்சடிக்கப்பட்டிருந்தன.

கலந்துரையாடல் குறித்து மேலும் சில தகவல்களையும் எடுத்துக்கூறியதோடு திரு. ரெ. கார்த்திகேசு அவர்களும் பிற்பகல் 3 மணிக்குள்ளாக இங்கேயே வந்துவிடுவதாகத் தொலைபேசியில் கூறியிருப்பதாகவும் சொன்னார் கவிஞர் அன்பானந்தம்.

பகல் 12.30 மணிக்கு திரு. ஷெல்லி சுப்பையா அவர்களை அவரது பணிமனைக்குச் சென்று சந்தித்தோம். அன்று பகலில் சுவையான விருந்துக்கும் அவரே ஏற்பாடு செய்திருந்தார்.

பிற்பகல் 2.30 மணியளவில் மீண்டும் கவிஞர் அன்பானந்தம் அவர்களோடு கடைக்குத் திரும்பி வந்தோம். அங்கே திரு. ரெ. கார்த்திகேசு காத்துக்கொண்டிருந்தார். அவர் அமெரிக்காவில் பல்கலைக் கழகத்தில் படிக்கச் சென்றுவிட்டு மலேசியா திரும்பியதிலிருந்து ஆசிரியர் முருகு அவர்களைச் சந்தித்து நீண்ட நாட்களாதலால் நீண்ட நேரம் ஆசிரியருடன் பேசிக்கொண்டிருந்தார். பேச்சு எல்லாம் நம் தமிழ் எழுத்துலகத்தைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியதுமாகவே இருந்தது.

பிற்பகல் 3.30 மணியளவில் திரு. ரெ. கார்த்திகேசு புறப்பட ஆயத்தமானார். அன்று மாலை தேவான்ஸ்ரீ மண்டபத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடலுக்கு மேலும் சில ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருந்ததே அதற்குக் காரணமென்பதையும் நாங்கள் புரிந்துகொண்டோம். போகும் வழியில் திரு கார்த்திகேசு எங்களுக்கும் ஒரு "லிப்ட்" கொடுத்தார். நாங்கள் அருள் மாமணி என். டி. எஸ். ஆறுமுகம் பிள்ளை அவர்களின் பணிமனையில் இறங்கிக்கொண்டோம். அருள்மாமணியுடன் ஆசிரியர் சுவையாக உரையாடிக் கொண்டிருந்தார். சமயம், பக்தி இவற்றைப் பற்றியே அவர்களின் உரையாடல் அமைந்தது. திரு. என். டி. எஸ். அவர்கள் ஓர் இறை அருட் செல்வர்தான் என்பதைத் தமது சுவையான சமய விளக்கங்களின் மூலம் நிரூபித்துக் காட்டினார். அவரிடமிருந்து அன்புடன் விடை பெற்றுக் கொண்டு வழக்கறிஞரும் பினாங்கு ம. இ. கா. தலைவருமான திரு. தெ. சுப்பையா அவர்களை அவரது பணிமனையில் சந்தித்தார் ஆசிரியர். பத்திரிகைப் பிரச்சனையிலிருந்து சூடான அரசியல் பிரச்சனைகள் வரையில் ஆசிரியருடன் சுவாரசியமாக உரையாடினார் திரு. சுப்பையா அவர்கள்.

மாலை மணி 7.15க்கு தேவான்ஸ்ரீ பினாங்கிலுள்ள மாநாட்டு அறையினில் எழுத்தாளர்கள், வாசகர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியினைப் பினாங்கு விஞ்ஞான பல்கலைக்கழக விரிவுரையாளரும் சிறந்த எழுத்தாளருமான திரு. ரெ. கார்த்திகேசு அவர்களோடு சேர்ந்து கவிஞர் சி. அன்பானந்தம் அவர்களும் திரு. இரா. நாராயணன் அவர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் திரு. கார்த்திகேசு வரவேற்புரை ஆற்றினார். அவர்தம் உரையில் ஆசிரியர் முருகு அவர்களின் தமிழ்ச் சேவைகளை எடுத்துக்கூறினார். தொடர்ந்து பேசுகையில் "பத்திரிகை என்பதை ஒரு கூரான கத்தியைப்போலப் பயன்படுத்த வேண்டும் அதே நேரம் அதனை மிகக் கவனமாக-சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பயன்படும் விதத்தில் பயன்படுத்த வேண்டும்" என்றும் கூறினார்.

அவரை அடுத்து நண்பர் எம்.ஏ. இளஞ்செல்வன் புதிய சமுதாயத்தின் இலட்சியப் பயணத்தின் குறிக்கோள்களை எடுத்துரைத்தார்.

"பிள்ளைத்தமிழ்" கவிதைக்கு அனைத்துலகப் பரிசுபெற்ற



கவிஞர் சி. அன்பானந்தம் (இடம்) அவர்களுக்குப் பரிசு வழங்கி மகிழ்கிறார் திரு. எம். ஏ. இளஞ்செல்வன். இருவருக்குமிடையில் பினாங்கு அறிவியல் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. ரெ. கார்த்திகேசு.

கவிஞர் சி. அன்பானந்தம் அவர்களுக்கும் இந்நிகழ்ச்சியிலேயே தமது நினைவுப்பரிசு ஒன்றினை வழங்கி மகிழ்ந்தார் நண்பர் இளஞ்செல்வன். அதன் பின்னர் ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றினார். அவர் நம் நாட்டு எழுத்துலக வளர்ச்சி குறித்து ரசமான இலக்கியஉரை ஆற்றினார்.

"பத்திரிகை உலகமென்பது மிகச் சிரமமான உலகம். 32 ஆண்டுகளுக்கு முன்பு நான் பத்திரிகை உலகில் அடியெடுத்து வைத்தேன். யார் பிடித்துத் தள்ளினாலும் இறுதிவரை பத்திரிகையோடு இணைந்து வாழவே நான் விரும்புகிறேன்!" என்றும் குறிப்பிட்டார். அதன்பின்னர் கலந்துரையாடல் நிகழ்வுற்றது.

அதில் திருவாளர்கள் ரெ. கார்த்திகேசு, கவிஞர் வே. ஏசையா, எழுத்தாளர் "திருகிம்", கவிஞர் ப. சி. சண்முகம், கவிஞர் வீ.கே. சுப்பிரமணியம், செந்தமிழ்க் கலா நிலையம் முனியாண்டி, ஐக்கிய சங்கம் அப்துல் கனி, இரா. அண்ணாத்துரை, அந்தோணி முத்து போன்ற நம் நாட்டு எழுத்தாளர்களோடு தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த எழுத்தாளரும் சிறந்த ஓவியருமான திரு. ஆரூர் ஜலால் அவர்களும் மணிமணியான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக் கூறினர்.

அவர்களின் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் ஆசிரியர் தகுந்த முறையில் விளக்கம் அளித்தார்.

இறுதியாக இரவு மணி 9.15க்கு திரு. ரெ. கார்த்திகேசு அவர்களின் நன்றியுரையுடன் இனிதே கலந்துரையாடல் முடிவுற்றது.

அன்றிரவு சுவையான விருந்தினை ரெ. கார்த்திகேசு தம்பதிகள் அவர்களது இல்லத்தில் எங்களுக்கு வழங்கினார்கள்.

மறுநாள் அலோர்ஸ்டாரில் சந்திப்புக் கூட்டம் இருந்தாலும், காலையில் பினாங்கில் சில முக்கியப் பிரமுகர்களைச் சந்திக்க வேண்டியிருந்ததாலும் கார்த்திகேசு தம்பதிகளுக்கு நன்றியுடன் கூடிய இரவு வணக்கம் கூறி விடைபெற்றோம்.

30-12-77 வெள்ளிக்கிழமை பினாங்கில் பிற்பகல் 3 மணியளவில் கவிஞர் சி. அன்பானந்தம் அவர்களிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு ஃபெர்ரி வந்தடைந்தோம். எங்களுடன் அலோர்ஸ்டார் கவிஞர் ரெ. இராமசாமி அவர்களும் இணைந்து கொண்டார். புலாவ் லுமுட் எனும் ஃபெர்ரியின் மூலம்அக்கரையிலிருந்துஇக்கரை வந்து சேர்ந்தோம். பிறையில் "கஸ்டம்ஸ்" பரிசோதனை நீக்கப்பட்டு விட்டிருந்ததால் விடுவிடுவெனக் கார்களும், பயணிகளும் சுதந்திரமாக வெளிவந்து விட முடிந்தது.

நேராகச் சுங்கைப்பட்டாணி வந்து நண்பர் எம். ஏ. இளஞ்செல்வன் அவர்களை அழைத்துக் கொண்டு அலோர்ஸ்டார் நோக்கி விரைந்தது எங்கள் கார். கோலாலம்பூரிலிருந்து அலோர்ஸ்டார் போகும் நெடுஞ்சாலையில் குரூண் எனும் சிற்றூர் இருக்கிறது. மையப் பகுதியில் இருந்தாலும் குரூண் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த மாதிரியே எந்த வளர்ச்சியுமின்றி "அம்போ"வென்று இருப்பது வியப்புக்கும் வேதனைக்கும் உரிய ஒன்றாகும். பாவம் எந்த முனிவர் இட்ட சாபமோ? இருந்தாலும் குரூணில் செழிப்பான சோளக் கதிர்களும், டொரியான், ரம்புத்தான், நிலக்கடலை போன்றவையும் மிகவும் மலிவாகக் கிடைப்பதாக அறிந்தோம்.

மாலை 5-30 மணியளவில் அலோர்ஸ்டாரிலுள்ள திரு. கோ. சுப்பிரமணியம் இல்லத்திற்கு வந்து சேர்ந்தோம்.

மாலை 7-30 மணிக்கு தேநீர் விருந்துக்குப் பின்னர் அலோர்ஸ்டார் சந்திப்புக் கூட்டம் கெடா இந்தியர் சங்க மண்டபத்தில் ஆரம்பமானது.

50 ஆண்டுகளாக இருந்து வரும் இந்த கெடா இந்தியர் சங்கத்திற்கு இன்று திரு. எஸ். என். கே அழகு சுந்தரம் தலைவராக இருக்கிறார். ஆரம்பத்தில் திரு அழகு சுந்தரம் தலைமையுரை ஆற்றினார். அவருடைய கருத்துக்கள் ஆழமாகவும் அழகாகவும் இருந்தன. "அரசியலை அதிகம் நம்பக்கூடாது. இன்றைய அரசியல் கட்சிகளில் பிளவுகளும் உட்பூசல்களும் அதிகமாகக் காணப்படுவதாலேயே நம் இந்திய சமுதாயத்திலும் பிளவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. நம்மிடையே இருக்கும் அரசியல் ஆர்வத்தைக் குறைத்துக் கொண்டு சமுதாய சேவை மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு பணிபுரியவும் வேண்டும்" என்று தமது கருத்தைக் கூறினார் திரு. அழகு சுந்தரம்.

அதன் பின்னர் நண்பர் இளஞ்செல்வனும், நானும் சிறப்புரை ஆற்றினோம். இறுதியாக ஆசிரியர் சமுதாய-இலக்கிய வளர்ச்சி குறித்துச் சிறப்புரை ஆற்றினார். அதனை அடுத்துக் கலந்துரையாடல் நடைபெற்றது.



பினாங்கு தேவான்ஸ்ரீ மண்டபத்தில் நடந்த புதிய சமுதாயம் அறிமுகக் ...த்தின்போது பிடித்த படம்.

திருவாளர்கள் வர்மா, கோ. சுப்பிரமணியம், சேக் அலாவூதின், கவிஞர் ரெ. இராம சாமி, ஜித்ரா மொஹிதின் மஸ்தான், வெங்கடாசலம், சுந்தரராஜ் ஆகியோர் நல்ல பல கருத்துக்களை எடுத்துக்கூறினர் கள். இரவு சுமார் 9.20க்கு திரு. அழகு சுந்தரம் அவர்களின் நன்றியுரையுடன் கலந்துரை யாடல் முடிவுற்றது.

திரு வர்மா அவர்கள் சுங்கைப் பட்டாணிக்கு 28-12-77இல் வந்திருந்தபோது ஆசிரியர் முருகு அவர்களுடன் கலந்து பேசி திடீரென இந்த அலோர்ஸ்டார் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார்.

கெடா இந்தியர் சங்க கலாச்சாரப் பகுதித் தலைவர் திரு. பி. சிக்கந்தரும், செயலா ளர் திரு. கோ. சுப்பிரமணிய மும், வர்மா அவர்களுடன் சேர்ந்து கூட்டத்தைக்கச்சிதமாக ஏற்ப டு செய்திருந்தது குறிப் பிடத்தக்கது.

அவசர அவசரமாக ஏற் பாடு செய்யப்பட்ட கூட்டமாக இருந்தாலும் கட்டுக்கோப்பாக- அமைதியாக நடைபெற்றது எல்லோருக்குமே மகிழ்ச்சியளித் தது. கூட்டம் முடிந்ததும் பல வாசகர்கள் அவர்களே முன் வந்து புதிய சமுதாயத்தின் சந்தாதாரர்களாகப் பதிந்து கொண்டார்கள்.

அன்றிரவு அலோர்ஸ்டாரில் உணவகம் ஒன்றில் திரு. அழகு சுந்தரமும் அவர்தம் குழுவின ரும் எங்களுக்கு விருந்தளித் தார்கள்.

இரவு 10-30 மணிக்கு எல்லோருக்கும் இரவு வணக்கம் கூறி அலோர்ஸ்டாரிலிருந்து புறப்பட்டு சுங்கைப்பட்டாணி வந்து சேர்ந்தோம். இதுநாள் வரையில் எங்களுடனேயே வந்து எங்களுக்குப் பல உதவிகளையும் புரிந்த நண்பர் எம். ஏ. இளஞ்செல்வனுக்கு நன்றிகூறி பிரியாவிடை பெற் றுக் கொண்டோம்.

மறுநாள் 31-12-77 — ஆண் டின் கடைசி நாள். ஒருவார காலமாக வட மலாயா பகுதி களில் உறவுப் பயணம் மேற் கொண்டிருந்த எங்களுக்கு ஒவ்வொரு பகுதியிலும் கிடைத்த அனுபவங்கள் நீங்காத நினைவாக நெஞ்சில் நிலைத்து நின்றன. 1977-ஆம் ஆண்டுக்கு விடை கொடுத்துப்புத்தாண்டை வரவேற்கும் பூரிப்புடன் அன்று காலை சுங்கைப்பட்டாணியி லிருந்து தலைநகர் நோக்கிப் புறப்பட்டோம்!

ஓவியம்

ஓவியம் வாங்குபவர்: என் னய்யா! வெற்றுக் காகி தத்தை ஓவியம்னு சொல்றே!

ஓவியர்: இந்த ஓவியத்தில் ஒரு பசு புல் மேயுது சார்!

வாங்குபவர்: எங்கய்யா புல் லைக் காணோம்?


ஓவியர்: புல்லை பசு மேஞ்ச் டிச்சி சார்!

வாங்குபவர்: அப்ப பசு என்னாச்சு?

ஓவியர்: அட, என்ன சார் நீங்க! விளங்காஆளா இருங் கிங்க! புல் இல்லாத இடத் திலே பசு தங்குமா? புல் லைத் தேடிப் போயிருக்கு!

வாங்குபவர்: !!!

—திருமங்கை தேவநாதன்
அண்ட்லி தோட்டம், பேரா.


மனி பஸ் குடை சாய்வதை தவிர்க்க முடியாத காரணத்தால் இது போன்று மினி பஸ்களைத் தயாரித்தால் என்ன?
"டிரைவர் வேலைக்கு இன்டர்வியூவுக்குப் போனியே என்னாச்சு?"
"ஒரு வாரம் மினி பஸ் ஓட்டியிருக்கேன்னேன், போயிட்டு வான்னுட்டாங்க!"
81
BUS STOP
இது மினி பஸ்சுங்க, நீங்க பெரிய பஸ்சுல ஏறுங்க
"பஸ்ஸில எங்க
காணோம்?"
"அடிக்கடி பிரேக் போடுறதனாலே போயிடுச்சி!"


மினி பஸ்ல ஏறிடாதே போலீஸ் அடிக்கடி மினி பஸ்ஸ சோதிக்கிறுங்க
ஏன் இந்த ஆம்பிளங்க இப்படி அடிச்சு பிடிச்சு ஏறுறுங்க!
அழகான பொண்ணு கண்டக்டரா இருக்கு
92



டாக்டரம்மாவின் பதில்கள்

கே: என் உதடுகள் அடிக்கடி கரகரப்பாக ஆகிவிடுகின்றன. இதற்கு ஒரு மருந்து சொல்லுங்கள்.

ப: பனிக்காலத்திலும் வாய் உலர்ந்தாலும் உதடுகள் இப்படி ஆவது உண்டு.

உதடுகளில் தேங்காய் எண்ணெய் அல்லது பசுவெண்ணெய் தடவிக் கொள்ளவும். சரியாகி விடும்.

கே: ஒருநாள் கொண்டை ஊசியால் காது குடைந்தேன். அது முதல் என் காது வலிக்கிறது. இதற்கு என்ன காரணம்? ஒரு மருந்து சொல்லுங்கள்.

ப: தீக்குச்சி, கொண்டை ஊசி போன்றவற்றால் காது குடைவது மிகவும் கெடுதி. காது குடைவதும் பல் குத்துவதும் கெட்ட பழக்கம். இதனால் காதுக்கும் பல்லுக்கும் கேடு ஏற்படும். காதுக்குள் செவிப்பறை என்ற மென்மையான தோல் இருக்கிறது. அதில் குச்சி பட்டால்புண்ணாகிவிடும். செவிப்பறை கிழிந்தால் காது கேட்காது. செவிப்பறை சேதமடைந்தால் காது மந்தம் ஆகும். செவிப்பறை புண்ணானால் காது வலிக்கும். ஆகவே இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்தப் பொருளைக் கொண்டும் காது குடையாதீர்கள்.

காதில்சீழ்வடிந்தாலும், வடிவது தடைப்பட்டாலும் காது வலி வரக்கூடும். அடிக்கடி சளி பிடித்தாலும் காது வலிக்கும். ஆகவே காது ஏன் வலிக்கிறது என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளவும். இனியும் தாமதிக்காமல் உடனடியாக ஒரு வைத்தியரின் நேரடி உதவியை நாடுவது நல்லது.

கே: எனக்கு அடிக்கடி வாய்ப்புண் வருகிறது. இதனைக் குணப்படுத்த ஒரு மருந்து சொல்லுங்கள்?

ப: குடல் சுத்தமாக இருந்தால் வாய்ப்புண் வராது. ஆகவே சாப்பாட்டில் கீரை, காய்கறி, பழங்கள், பால், மோர் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். தினசரி ஒரு கீரை வகையாவது சாப்பிடுவது மிகவும் நல்ல பழக்கம்.

வாய்ப்புண்ணுக்கு அகத்திக்கீரை மிகவும் நல்லது. கீரையைப் பொரியல் செய்து சாப்பிடவும். அல்லது அகத்திக்கீரை, வெங்காயம், உப்பு போட்டுத் தண்ணீர் ஊற்றி அவித்துச் சாற்றை வடித்துக் குடிக்கவும்.

சுவரொட்டி என்று சொல்லப்படும் மண்ணீரல் வாங்கி நறுக்கி, உப்பு வைத்து, சுட்டுத் தின்றால் ஒரே வேளையில் வாய்ப்

சோறு பிரட்டல்

சகோதரிகளே, விலைவாசி ஏறிவிட்ட இக்காலத்தில் நாம் அடிக்கடி சமையலுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறோம். ஒரே மாதிரியான சமையலையே செய்து சாப்பிட்டாலும் நமக்குச் சலிப்புத் தட்டுகிறது அல்லவா! ஆகவே நான் இங்கு எழுதியிருக்கும் சமையல் குறிப்பு உங்களுக்குப் புதுமையாகவும், அதே வேளையில் சிக்கனமாகவும் இருக்கும் என்று நினைக்கிறேன்.

தேவையான ··மான்கள்:

2 குவளை அரிசி, 4 தயின் ஊடான், 2 முட்டை, 8 பயிற்றங்காய், 6 சிறிய வெங்காயம், 2 வெங்காயத்தாள், தேவையான அளவு, தேங்காய் எண்ணெய், உப்பு, கிச்சாப், கொச்சாய்த்தாள், 2 சிவப்பு மிளகாய்.

கணேசன் பேபி,
புக்கிட் புசார், கூலாய்.

செய்யும் முறை:

அரிசியை வேக வைத்துக் கொள்ளவும். ஊடானையும் சுத்தம் செய்து கொள்ளவும். முட்டையையும் உப்பையும் சேர்த்து அடித்துப் பொறித்து 1/4 அளவில் சிறிது சிறிதாக வெட்டி வைத்துக் கொள்ளவும். வெங்காயம், மிளகாய், கொச்சாய்த்தாள், வெங்காயத்தாள், பயிற்றங்காய் ஆகியவற்றை நறுக்கி வெங்காயத்தையும் வதக்கிக் கொள்ளவும். வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி ஊடானை அதில் போட்டுப் பயிற்றங்காய், மிளகாய் ஆகியவற்றையும் போட்டு வதக்கவும். 2 கரண்டி தண்ணீர் விட்டு 5 நிமிடம் சென்றதும் அதில், வடித்த சோற்றைப் போட்டு கிச்சாப் ஊற்றி கிளறவும். இறக்குமுன் வதக்கிய வெங்காயம், வெட்டிய கொச்சாய்த்தாள், பொறித்த முட்டை ஆகியவற்றைப் போட்டுக்கிளற வேண்டும். இதை எவ்வித பேங்கறியும் இல்லாமலேயே சாப்பிடலாம்.

மணற்கேணி

வை. ஆறுமுகம்

தியாகராஜன், கோலாலம்பூர்

நான் இவ்வாண்டு எம். சி. இ.. மலேசிய மொழிப் பாடத்தைத் தனிப்பாடமாக எடுக்க விரும்புகிறேன். எங்கே, எப்படி நான் பதிந்து கொள்ள வேண்டும்?

Jabatan Pelajaran, Jalan Swettenham, Kuala Lumpur என்னும் முகவரிக்கு எழுதுங்கள். நுழைவுத்தாளும் (borang masuk) மற்ற விவரங்களும் உங்களுக்குக் கிடைக்கும். நேரிலும் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

ந. பாலகிருஷ்ணன், சுங்கை சோ தோட்டம், ரவாங்

"Sanah lari rebah bang-un di atas permatang yang telah tebal dengan rumput-rumput itu"- இவ்வாக்கியத்தின் தமிழாக்கம் என்ன?

Shahnon Ahmad எழுதிய Ranjau Sepanjang Jalan என்னும் நாவலில் வரும் Lahuma-Jeha தம்பதியரின் மூத்த மகள் Sanah. Lahuma இறந்து போகிறான்; Jeha மன நோய்க்கு ஆளாகிறாள். உடன் பிறந்தவர்களையும், அவர்களின் ஒரே நம்பிக்கையான நெற்பயிரையும் காக்கவேண்டிய பொறுப்புக்கு Sanah உள்ளாகிறாள்.

ஒரு நாள் திடீரென்று பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து நெற்பயிரை முற்றுகை இடுகின்றன. கிராமமே அல்லோல கல்லோலப்படுகிறது. Sanah பதறிப் போகிறாள்; வயலுக்கு ஓடுகிறாள்.

நீங்கள் குறிப்பிட்டிருக்கும் வாக்கியம் Sanah-வின் பதற்றத்தையும் விரைவையும் காட்டுகிறது. "புல்லடர்ந்த வரப்புகளில் சானு விழுந்தும் எழுந்தும் ஓடினாள்" என்று தமிழிலும் Sanah ran, falling and picking herself up again, over the ridge growing thick with weeds என்று ஆங்கிலத்திலும் சொல்லலாம்.

Lumpang என்னும் சொல் ஒன்றுக்கும் மேற்பட்ட பொருட்களைக் கொண்டிருக்கிறதா?

காலி, திறந்தவெளி, பீரங்கியின் வாய் இப்படிப் பல பொருள் கொண்ட சொல் இது. Lumpang Udara என்றால் காற்றில்லாத வெற்றிடம் (air-pocket). மேலும் இது பீரங்கிக்கு Penjodoh Bilangan ஆகவும் பயன்படும். (Tiga lumpang meriam).

து. பாஸ்கரன், ஜோகூர்பாரு

சிலர் bolih, olih என்று எழுதுகிறார்களே. இப்படி எழுதலாமா?

சொல்லின் முதல் Sukukata-வில் o எனும் எழுத்து இருக்ுமாயின் அதைத் தொடர்ந்து வரும் e, o எனும் எழுத்துகளை i, u என்று மாற்றக்கூடாது. எனவே boleh, oleh, toreh solek, gosok, boros, bomoh, mogok என்றுதான் எழுத வேண்டும்; இந்த விதிக்குள் அடங்கும் பிற சொற்களையும் இவ்வாறே கொள்ள வேண்டும்.

(குறிப்பிட்ட நூலைப் பற்றியோ, குறிப்பிட்ட நூலிலிருந்தோ கேள்வி கேட்பவர்கள், நூலின் பெயரைக் குறிப்பிடுதல் நல்லது).

தங்கள் மகனைச் சிறந்த பேச்சாளனாக்க அவனது பெற்றோர்கள் அவனைத் தத்துவமேதை சாக்ரட்டீசிடம் அனுப்பி வைத்தனர். சில நாட்களுக்குப்பின் சாக்ரட்டீஸ் அவனைப் பேச்சாளனாக்க வழக்கமாகக் கேட்கும் தொகையைவிட அளவுக்கதிகமான தொகையைக் கேட்டார். ஏன் என்று கேட்டதற்கு "இவனுக்குப் பேசவும் கற்றுத்தர வேண்டும். அதே சமயம் கண்டதையும் உளறாமல் இருக்கவும் கற்றுத்தர வேண்டும். அது இரட்டிப்பு வேலையல்லவா? அதனால் தான்?" என்றார்.

—"ஆர்வி சரோ" ஜெயா, சுங்கை

தமிழ் இசை வேறு, கருநாடக இசைவேறு எனச்சிலர் கருதுகின்றனர். அது தவறு. இரண்டும் வேறுபட்டவை அல்ல. ஒன்றே! வடக்கில் உள்ள பல நாட்டில் கடல் இல்லை. அதனால் கடற்கரையும் இல்லை. தமிழகமோ மூன்று பக்கங்களிலும் கடலையும் கடற்கரைகளையும்கொண்டது. சோழ மண்டலக் கடற்கரை, பாண்டி மண்டலக் கடற்கரை, சேரமண்டலக் கடற்கரை என்ற பெயர்கள் இன்றும்கூட மக்கள் துறையிலும் ஆட்சித்துறையிலும் காணப்படுவதே இதற்குப் போதிய சான்றாகும். இதனால் தமிழகத்தைத் "கரை நாடு" என்றும் தமிழிசையைக் "கரை நாட்டு இசை" என்றும் வடக்கேயுள்ளவர் குறிப்பிட்டனர். அதையே பலரும் "கர்நாட்டிசை" என்று திரித்துக் கூறலாயினர்.

"தமிழின் சிறப்பு" எனும் நூலில் இருந்து... ஆர். செல்வராஜன் மலாக்கா.

பெண்கள் அரளிப் பூவைத் தலையில் சூடிவந்தால் பேன், பொடுகு, அரிப்பு போன்றவை ஏற்படா. அரளிப் பூவும் அதன் இலையும் விஷத் தன்மை வாய்ந்தவை என்பதையும் மறந்து விடக் கூடாது.

திருமதி பாப்பாத்தி தென்னரசு, கோலாலம்பூர்.

...ிகள்:

குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.

ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது.

பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.

8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.

9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.

10. இறுதிநாள் 10-3-1978.

11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.
P. O. Box. 2066

தமிழறிவுப் போட்டி - 12 பரிசு $190

■	1			2	■
3		■	4		5
	■	■		சு	
■	6			■	ம
7			■	■	
8			■	9	

முடிவு நாள் 10-3-78

பெயர். ______

அடையாள அட்டை எண். ______

முகவரி ______

______

______

கையொப்பம்.

இடமிருந்து வலம்:-

1. உருண்டையானது.
3. இதை விரும்பாத தமிழ்ப் பெண் திருமணத்தின்போது பயன் படுத்தித்தான் ஆக வேண்டும்.
4. இந்தப் பெயரை முதலடியாய்க் கொண்டு, இரண்டு தமிழ்க் கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள்.
6. ஒரு வாத்தியம்.
7. இது கூட சமயங்களில் சகுனம் சொல்லுமே!
8. மர்ம நாவல் படிக்கும்போது இந்த உணர்வு ஏற்படும்!
9. ஆயுதம்.

மேலிருந்து கீழ்:-

1. ஒரு வகை நோய்
2. தலைகீழாகப் பார்த்தால் புராணங்களில் வரும் அசுரர்களின் பெயரோடு அநேகமாக இந்தப் பெயர் இணைந்திருக்கும்.
3. இது இல்லாத அரசனா?
4. பரத நாட்டியங்களில ரசிக்கக்கூடிய ஓர் அம்சம்.
5. செல்வத்துக்குரிய கடவுள்.
6. திருமால் இதுவரை எடுக்காத அவதாரம்.
7. கணவன்.

தமிழறிவுப் போட்டி -11 முடிவு

1 வா	ன	ம்	■	2 ஆ	மை
து	■	■	■	ஞ்	■
மை	■	■	3 கே	ச	ம்
■	4 வெ	■	■	நே	■
5 கொ	டி	■	6 தி	ய	நி
சு	■	7 சே	ர	ர்	■

தமிழறிவுப் போட்டி 11-க்கு 4,928 கூப்பன்கள் வந்தன. அவற்றுள் எந்தக் கூப்பனுமே சரியான விடையைக் கொண்டிருக்கவில்லை. ஒரே ஒரு கூப்பன் மட்டுமே ஒரு பிழையைக் கொண்டிருந்தது. ஆகவே அந்தக் கூப்பன் பரிசுத் தொகை $10ஐப் பெறுகிறது. எஞ்சிய தொகையான $90 தமிழறிவுப் போட்டி 12இன் பரிசுத்தொகையோடு சேர்க்கப்படுகிறது. ஆகவே, மறந்துவிடாதீர்கள்!

தமிழறிவுப் போட்டி 12இன் மொத்தப் பரிசுத் தொகை $190 ஆகும்.

$10 பரிசுபெறும் கூப்பனை அனுப்பியவர்:

வ. நடராஜன்,
64-D, ஜாலான் லோ,
கோலகங்சார்,
பேரா.



எல்.முத்து

பல(ம்)வீனம்

அந்த ஒரு விநாடியில், அவளால், தான் வீழ்த்தப்பட்டு விட்டதை எண்ணி அவன் தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

குமுதா அந்த வார்த்தைகளை அழுத்திக் கூறவில்லை என்றாலும், முகத்தில் ஒரு கேவலக் குறி மின்வெட்டாய் ஓடி மறைவதைப் போல், அலட்சியப் புன்னகையோடு கூறிய விதம், தன்னை அவள் அற்பத்தனமாக மதிப்பிட்டு விட்டாளோ என்றே அவனை எண்ணத் தூண்டியது.

அதை அவள் ஒரு வெறுப்பாகவோ, கடுகடுப்பாகவோ, ஆத்திரமாகவோ சொல்லவில்லை. காற்றில் குழைந்து, மெல்லியதாய் மிதந்து வந்ததைப் போல்தான் அவள் குரல் இலேசாக வெளிப்பட்டது.

"சீ... உங்களுக்கு இப்படி ஒரு அல்பப் புத்தியா?" என்று முகத்தில் காறித் துப்பியோ, "இதெல்லாம் உங்களுக்கு நியாயமா?" என்று நேருக்குநேர் வாய்கிழியக் கத்தியோ தன் ஆத்திரங்களை வெளிப்படுத்தி இருந்தால் கூட தேவலாம் போலிருந்தது மதனனுக்கு.

பல முறை அது மாதிரி அனுபவங்கள் ஏற்பட்டு, அதற்கு அவனும் அவளுக்குப் பொருத்தமான பதிலைத் தந்து திருப்தி அடைந்திருக்கிறான் சில சமயம் குடும்பப் பிரச்சினைகளில், அவர்களிடையே எழுந்து விடும் வாதங்கள் விகாரமாகி, சூடு பறக்கும் வேளைகளில், குமுதா எதை எதையெல்லாமோ சுருக்கிப் பிடித்து மனத்தில் இறுக்கிக் கொண்டு "சீ... நீங்களும் ஒரு மனுசனா?" என்று தன் மன எதிர்ப்புக்களை வெளிப்படுத்திய அந்த நேரங்களில் அவன் தன் கட்டுப்பாடிழந்து அவளை நான்கு அறைவிட்டோ, கைகளில் கிடைத்தவற்றை எடுத்து அவள் மீது வீசி எறிந்தோ, தன் ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறான்.

விரல்களில் முகத்தை அழுத்திப் புதைத்துக்கொண்டு அடிக்கொரு முறை புருவங்களை நெறித்து, கண்களை மூடிமூடித் திறந்து "தூ" என்று தன்னுள்ளேயே காறித் துப்பி "என்ன வெட்கக் கேடானது" என்று முணுமுணுத்துத் தலையை ஆட்டியவாறு தரையையே வெறித்துப் பார்த்தான்.

சலனமே தெரியாத, மௌனம் தேங்கிக் கனத்த குமுதாவின் முகத்தில், ஓசை இல்லாமல் வெடித்துச் சிதறிய அந்த உணர்ச்சிக் கொப்புளங்களைப் பொருள் பிரித்துப் பார்க்க. அவளை மீண்டும் தன் நினைவுக்குக் கொண்டு வந்தான்.

சற்றுமுன்....ஏதோ தமாஷ் செய்வதைப் போல்...., உள் மனம்"ஓ"வென்று கதறி அழ..., ஆனாலும் உதட்டில் புன்னகையைத் தவழவிட்டு..., சர்வ சாதாரணத்தோடு..., "நீங்களும் மோகனாவும் அப்படித்தான் நடந்துக்கிறீங்களோ?" என்று தன்னையே திமிறிக்கொண்டு வந்த எதையெதையோ லாவகமாகச் சமனப்படுத்தி வியப்பு மேலிடக் கேட்ட அவளது பாவனை.

அதன் பின் அமைதியாக ஓர் அலட்சியத் தோரணையில் அவனைக் கூர்ந்து, கண் சிமிட்டாமல் பார்த்த அந்தப் பார்வை...

அவனை அப்படிக் கேட்டு விட்டோமே என்ற வருத்தத்தில் தோய்ந்து விட்டவளைப் போல் "நான் ஒரு பேச்சுக்கு அப்படிக் கேட்டேன்" என்று சமாதானம் கூறி, அவன் பதிலுக்குக்கூட காத்திராமல் ஒன்றுமே நடக்காததைப் போல் சமையலறையில் போய் நுழைந்து கொண்ட அவளது அலட்சியப் போக்கு...

அதையெல்லாம் மதனனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவளுடைய வார்த்தைகளை வெறுமையாக எடுத்துக் கொள்ளவோ, "ஒரு பேச்சுக்குத்தான்" என்று அவள் அதனை இலேசுபடுத்தியதையோ அவனால் ஏற்று ஜீரணிக்க முடியவே இல்லை. தன்னை அவள் புள்ளிவிவரமாக அளந்து பார்த்துப் பேசிவிட்டதாகவே அவனுள் ஓர் அழுத்தமான உறுத்தல் பரவிக் கொண்டிருந்தது

"நான் பத்து வருஷங்களாகப் போட்டு வந்த வேஷத்தைப் பொட்டென்று கலைத்து நிர்வாணமாக்கி விட்டாளே?

இனி அவள் மனதில் எப்படி நான் உயர்ந்து நிற்க முடியும்? ஓ... என்னை பத்தி அவள் என்னென்ன நினைத்திருப்பாள்? முழுமையாகவே என் வேஷம் கலைந்து விட்டதோ? ம்... நானும் அவளை அப்படிக் கேட்டிருக்கவோ, அவமானப்படுத்தி இருக்கவோ கூடாது."

மதனனின் மனம் நிமிர்ந்து நிற்க முயன்று சரிந்துசரிந்து விழுந்தது. அவன் குமுதாவைப் பற்றிக் கணித்ததும் அப்படித்தான் சரிந்து போய் விட்டதோ...?

வினோதனைப் பார்த்ததும் குமுதாவின் முகத்தில் ஒரு மலர்ச்சி குப்பென்று சிதறி மலர்வதும், சோர்வைக் கூட காட்டிக் கொள்ளாமல் அவனுக்கு ஓடி ஓடிப் பரிமாறுவதும், தான் சாப்பாட்டை முடித்து விட்டு எழுந்து விட்டாலும், அவன் சாப்பிட்டு முடியும் வரை அவன் அருகிலேயே நின்று பரிமாறிக் காத்திருப்பதும், தானும் வினோதனும் பேசிக்கொண்டிருக்கையில் அவளும் வந்து கலந்து கொள்வதும், சுவாரசியமாக ஏதும் வாதங்கள் எழுந்து விடும் போது, அவள் அவன் சார்பில் பேசுவதும், மதனனின் நெஞ்சில் ஒரு குமட்டலை உருவாக்கியது. அதை அவன் தன் பலவீனங்களுக்குப் பற்றுக் கோலாக்கி அவளை மதிப்பீடு செய்துவிட்டதை இப்போது நினைத்துப் பார்த்தான்.

"ஆதாரத்தோடு அவளை வீழ்த்தி, அவளது மனத்தளத்தின் அசிங்கங்களைத் திறந்து காட்டி விடப் போகிறேன்" என்ற ஆண்மைக்கே உரிய ஒரு திமிரில் தான் மதனன் குமுதாவை அப்படிக் கேட்டான்.

அதைக் கேட்பதற்கு முன்பாகவே, அவன் வினோதனைப் பற்றியும் பலமுறை யோசித்துத் தனக்குள்ள இயற்கையான பலவீனத்தில் "அவனும் அப்படி இருக்கலாம்" என்று திடமாக்கிக் கொண்ட பிறகே அவளிடம் துணிந்து கேட்டுவிட்டான். அவனைப் பொறுத்தவரையில் அந்த நேரத்தில் அவனுக்கும் வினோதனுக்குமிடையே நிலவிய நட்பில் ஒரு தற்காலிக மூடு திரையையே போர்த்தியிருந்தான்.

வினோதனும் மதனனும் நெருங்கிய நண்பர்களாகப் பிணைக்கப்பட்ட நாள் தொட்டு, இந்த இரண்டு வருடங்களாத்தான் வினோதன் வைத்துக் கொண்டான். மதனனே வினோதனைத் தினமும் கட்டாயப்படுத்தி அழைத்து வருவான்.

வினோதனின் நட்பு ஏற்பட்ட பிறகே, அவன் தினமும் மதிய உணவுக்கு, அலுவலகத்திலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள தன் வீட்டுக்கு வர ஆரம்பித்தான். அதற்கு முன்பு எப்போதோ சில நாட்கள் நினைத்துக் கொண்டால் மட்டும், அரைமனத்தோடு கொளுத்தும் அந்த நண்பகல் வெயிலில் சைக்கிளை மிதித்துக் கொண்டு வீட்டுக்கு வருவான்.

அந்த வேகாத வெயிலில் இரண்டு மைல் தூரம் வந்து, அவசர அவசரமாக அரையும் குறையுமாகச் சாப்பிட்டுவிட்டுச் சிறிது நேரம் உட்கார்ந்து கண்ணயர்ந்து களைப்பாறக்கூட முடியாமல் சாப்பிட்ட வேகத்தோடு சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டால் அலுவலகத்தை அடையவும் மணி இரண்டாகி வேலையைத் தொடங்கவும் நேரம் சரியாக இருக்கும். அதனால் சைக்கிளில் வருவது அவனுக்கு ரொம்பவும் சங்கடமாகித் தினமும் வீட்டுக்குச் சாப்பிட வரும் நிலை எப்போதாவது ஒரு நாள் என்றாகியது.

ஆனால் வினோதனின் நட்பில் இறுக்கம் ஏற்பட்டதிலிருந்து



அவனது மோட்டார் சைக்கிளிலேயே தினமும் இருவரும் வந்து சாப்பிட்டுச் செல்வது வழக்கமாகிப் போனது.

விநோதனின் இருப்பிடம் அலுவலகத்திலிருந்து பதினான்கு மைல் தொலைவிலிருப்பதால் "கண்டீனில்" மதிய உணவை முடித்துக் கொள்வதை மதனன் முற்றாகத் தடுத்துவிட்டாலும், சில நாட்களில் "தினமும் நான் ஓசியிலே சாப்பிடறதா?" என்று விநோதன் வீட்டிற்கு வர மறுக்கும்போது, "நீ எங்க குடும்பத்தில ஒருத்தன் மாதிரி; இதிலென்ன ஓசி கீசின்னுகிட்டு" என்று ரொம்பவும் விநோதனை வற்புறுத்தி அழைத்துவந்து விடுவான்.

அப்படி வந்தவன், தன் உரிமைக்குரியதில் உரசிப் பார்ப்பதைப்போலவும் அந்த உரிமையும் அவனுக்கு உரியதாகி வருவதைப் போலவும் மதனனுக்கு நெஞ்சில் ஓர் எறும்புக்கடி ஊர்ந்துகொண்டே வந்தது. விநோதன் ஹாலில் இருந்தால் அவனும் ஹாலில் இருப்பான். அவன் சாப்பாட்டறையில் போய் அமர்ந்தால் இவனும் அங்குப் போய் அமர்வான்.

விநோதனுக்கு ஒரு தனிமையான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விடாமல், வீட்டை விட்டு வெளியேறும் வரையில் ஒருவித மனப்போராட்டத்தோடு அவனையே சுற்றிக் கொண்டிருப்பான் மதனன்.

விநோதனை வீட்டுக்கு அழைத்துவரும் ஒவ்வொரு முறையும் "அதை" எல்லாம் பார்க்கையில், எதனையோ ரோஷம் இல்லாமல் இழந்து வருவதாக எண்ணிக்கொண்டு "நாளையில இருந்து இவனைக் கூட்டி வரவே கூடாது" என்று அந்தரங்கமாக இறுகிக் கொள்ளும் அவன் மனம். மறுநாள் "லாஞ்ச் ஹவரில்" விநோதனைப் பார்த்தவுடன் "ஆதாரமில்லாத அசூசை" என்று தளர்ந்து உடைப்பெடுத்துக்கொள்ளும்.

அப்படித் தற்காலிகமாக இறுகி இறுகி, பின் தளர்ந்து போய்க்கொண்டிருந்த மதனனின் மனம் இன்றுதான், சற்று முன், குமுதாவின் கேள்வியால் ரொம்பவும் கனத்துக்கொண்டு அவள் முகத்துக்கு நேராகவே, பாளம் பாளமாக வெடித்துப் பிளந்தது.

அவன் மனதை இரண்டா

அந்த வெடிப்புக்குத்தான் குமுதா சர்வசாதாரணமாக "நீங்களும் மோகனும் அப்படித்தான் நடந்துக்கிறீங்களோ" என்று உதடுகள் கூட அதிகம் அசையாமல் கேட்டாள்.

மணி இரண்டாக இன்னும் இருபதுநிமிடங்களே இருந்தன. அவனுக்கு அலுவலக நேரம் நெருங்கி வருவதை உணர்த்துவதைப்போல், அவள் வழக்கம்போல் ஒரு டம்ளரில் குளிர் பானத்தைக் கொண்டு வந்து மேசையில் வைத்துவிட்டு, காலுறைகளை உதறி அவனருகில் கொண்டு வைத்தாள்.

அவளை நிமிர்ந்து பார்க்க முயன்றவன், அவள் விழிகள் தன்னைப் பாய்ச்சி நிற்பதைக் கண்டு, ஏதோ சுவரில் மாட்டப்பட்டிருக்கும் படத்தைப் பார்க்கும் பாவனையில், அவளைச் சாடையாகப் பார்த்துவிட்டு மீண்டும் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"என்னை மன்னிச்சிடு குமுதா"-குரலை தாழ்த்திக் கூறியவன், "முடியவே முடியாது" என்று அவள் பெரிய ஆர்ப்பாட்டமே செய்யப்போகிறாள் என்றே எதிர்பார்த்தான்.

"ஆபிசுக்கு மணியாவுது; இன்னைக்கு சைக்கிள்ள வந்திருக்கீங்க இல்லியா? ம்... புறப்படுங்க" என்று எதுவும் நடந்ததில் தான் பாதிக்கப்படாததைப்போல் பேசினாள்.

அவள் முன்னால் அவன் ஒரு கணம் கூனிக் குறுகிப் போனான்.

"குமுதா, உண்மைய உங்கிட்ட சொல்லிடுறேன். உன்னை அப்படிக் கேட்டது இது முதல் தடவையில்ல. உன்னைப்பத்தி என் மனசுக்குள்ளேயே எத்தனையோ தடவை அப்படி நெனைச்சிருக்கேன். அந்த நீசத்தனத்த போக்க எவ்வளவோ முயற்சி செஞ்சுப் பார்த்துட்டேன். முடியவே முடியல" அவமானம் தாங்காமல் பொங்கிக் கொண்டு வந்த விசும்பலைக் கட்டுப்படுத்திக்கொண்டு பேசினான்.

இன்னும்கூட அவள் முகத்தில் எந்தச் சலனமும் தென்படவில்லை. அவன் தொடர்ந்து எதையோ சொல்லப்போகிறான் என்பதைத் தெரிந்துகொண்டு, அவனையே கூர்ந்து பார்த்தாள்.

"குமுதா! அப்படி நீ என்ன

பாட்டுக்கு கூட்டி வரலையானு நீ கேட்டதற்கு நான் அப்படிப் பதில் சொன்னதற்காக ரொம்பவும் வருத்தப்படுறேன்"

அவள் உதட்டில் மட்டும் ஒரு நெகிழ்வு.

"நான் கேட்டதை வெச்சி, மோகனு வீட்டுக்கு நான் அடிக்கடி போறத தவறு எடை போட்டுடாத- அப்புறம் உனக்கும் எனக்கும் வித்தியாசமே இல்லாம போயிடும்"

"உங்களப்பற்றி எனக்குத் தெரியாதா?" அவள் அவன் தலைமுடியைக் கோதி, முகத்தை நிமிர்த்திக் கேட்டபோது தன் அற்பத்தனங்களுக்குத் தன்னையே மனதுக்குள் கடிந்து கொண்டான்.

"குமுதா, இன்னையோட நான் சைக்கிள்ள வர்றது கடைசி. நாளையில இருந்து கட்டாயம் விநோதனைக் கூட்டிக்கிட்டு அவன் மோட்டார் சைக்கிளிலே வந்துடுவேன்"

மறுபக்கம் அந்தரங்கமாக அவன் மனம் இன்னொன்றையும் உறுதிப்படுத்திக் கொண்டது.

"இன்னைக்கு கேட்டுவிட்டதைப்போல "உன் காதலன் வரலேனு ஏக்கமோ?, அவனைப் பார்க்காம ஒரு நாளுகூட இருக்க முடியாதோ"னு வாய் திறந்து நேருக்கு நேர் கேக்கவே மாட்டேன். ஆனா மனசுக்குள்ள அப்படிக் கேட்காம என்னால இருக்கவே முடியாது. அது என்னோட பலவீனம்"

ஏதோ ஓர் உணர்ச்சி அழுத்தத்தில் அவனுக்கு நெற்றியிலும், கழுத்திலுமாக வியர்வை கசிந்து கொண்டு வந்தது.

அவள் "டவலை" எடுத்து அதனை ஒத்திஒத்தி எடுத்தாள். அவன் அவளைப் பார்த்தான்.

குமுதா முகத்தில் எந்தச் சலனமும் இல்லாமல் "பத்திரமா போயிட்டு வாங்கோ" என்று ஓர் அசமந்தப் புன்னகையோடு அவனை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தாள்.

இப்போது மழைக்குப் பிந்திய வான வெளிச்சமாக அவன் போகிறான். நாளைக்கு விநோதனோடு வீட்டுக்கு வந்தவுடன மழைக்குச் சற்றே முந்திய கருமேகமாய் மாறிவிடுவான்.

அவனுடைய மனம் கருமேகமாகும் போதெல்லாம் குமுதா காற்றாக மாறி அதைக்

கூடு கட்டும் குருவிகள்

"நீங்க யோசிக்கிறதுலே அர்த்தமேயில்லிங்க; இன்னும் ரெண்டே ரெண்டு லாட்டுதான் மிச்சம் இருக்கு" சிறிது நிறுத்தி வாயில் ஊறிய எச்சிலை அல்லூரில் "விசுக்"கென்று துப்பிவிட்டு மீண்டும் தொடர்ந்தார் கந்தசாமி.

"இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுட்டீங்கன்னா இனி நீங்க நினைக்கிற மாதிரி வீடு கட்டுறதுக்குத் தோதா ஒரு எடம் உங்களுக்குக் கிடைக்குமுனு கனவுலகூட நினைக்காதீங்க. நீங்க நம்பளுக்கு வேண்டியவங்கன்றதாலே இவ்வளவும் சொல்றேன்" கந்தசாமி கண்ணையாவின் முகத்தை அலசினார்.

புரோக்கர் கந்தசாமியை அறியாதவர்கள் அந்த வட்டாரத்திலேயே யாரும் இல்லை எனலாம். ஆடு வாங்கி விற்பது முதல் தோட்டம் துண்டு போட்டு விற்பதுவரை அவருக்கு அத்துபடி. ஊரில் பலர் அவரைப்பற்றிப் பல மாதிரி பேசிக்கொண்டிருந்தாலும் அவர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவது கிடையாது. அவர் பிசினஸ் நல்ல முறையில்தான் ஓடிக்கொண்டிருந்தது.

புரோக்கர் கந்தசாமியிடம், தான் பேசிக்கொண்டிருந்த அந்தப் பத்து நிமிட நேரத்தில் கண்ணையா ஓரளவு அவருடைய பேச்சில் மயங்கித்தான் போயிருந்தார். புரோக்கர் கூறிய அந்த இடத்தை அவருக்கு நன்கு தெரியும். "டவுனுக்கு, மார்க்கெட்டுக்கு, ஸ்கூலுக்கு எல்லாமே அந்த இடம் அருகில் இருந்தது. அந்த இடத்தில் வீடு கட்டினால் மிக நல்லாத்தான் இருக்கும்" அவர் மனம் அந்த இடத்தை வலம் வந்து கொண்டிருந்தது.

இருந்தாலும் புரோக்கர் மூலம் லாட்டு வாங்கும் விஷயத்தில் கொஞ்சம் யோசிக்க வேண்டும் என்பதையும் அவர் உள் மனம் சுட்டிக் காட்டிக்கொண்டே இருந்தது. புரோக்கர்களிடம் மாட்டிக் கொண்டு விழி பிதுங்கிக் கொண்டிருக்கும் பலரின் கதைகளையும் அவர் தெரிந்துவைத்திருந்தார்.

"நீங்க சொல்றது எனக்கு விளங்குதுங்க. ஆனாலும் நம்ப வீட்டிலேயும் ஒரு வார்த்தை கேட்டுட்டு பதில் சொல்றேங்க" கண்ணையா பட்டும் படாமலும் கூறினார்.

"நல்லா கேளுங்க. ஆனா, நீங்க சரின்னு சொன்னா வீட்டுலே வேண்டாம்னு சொல்லிடப் போறாங்க. நீங்க காலம் தாழ்த்தினீங்க பின்னாலே எம்மேலே வருத்தப்பட்டு பிரயோசனம் இல்ல. இப்பவே ரெண்டு மூணு பேரு லாட்டு இருக்குங்களான்னு எங்கிட்ட கேட்டுக்கிட்டே இருக்காங்க" இதெல்லாம் தனக்குச் சகஜம் என்ற தோரணையில் விடை பெற்றார் புரோக்கர் கந்தசாமி.

சில மாதங்களாகவே சொந்த வீடு ஒன்று கட்ட வேண்டுமென்கிற எண்ணம் கண்ணையாவுக்கு ஏற்பட்டுவிட்டது. விவரம் தெரிந்த குழந்தைகளை வைத்துக்கொண்டு எஸ்டேட் வீட்டில் அஞ்சி அஞ்சி வாழவேண்டியிருக்கிறதை நினைத்தாலே அவருக்குக் கசப்பாக இருந்தது. போதாதற்கு அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களின் தொல்லை வேறு.

மேலும் எத்தனை நாளைக்குத்தான் எஸ்டேட் வீட்டை நம்பி வாழ்க்கை நடத்துவது? திடீரென்று தோட்டம் துண்டாடப்பட்டுவிட்டால் வயதடைந்தவுடன் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டால் ...அல்லது ஐம்பைத்தைந்து வயதடைந்தவுடன் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டால் ...அல்லது தனக்கே ஒன்று நடந்துவிட்டால் தன் குடும்பத்தின் கதி? இதையெல்லாம் நினைக்க நினைக்க அவரது மனம் கனத்தது.

அவர் மட்டும் என்றிருந்தாலாவது எப்படியாவது போகட்டும் என்று இருந்துவிட்டிருப்பார். அவரை நம்பிப் பெரியதும் சிறியதுமாக ஐந்து வேறல்லவா இருக்கின்றன. போதாக்குறைக்கு அடிக்கடி நோய்வாய்ப்படும் மனைவி வேறு.

ஆரம்பத்தில் ஆசை என்னவோ சிறு செடியாகத்தான் இருந்தது. அந்த நிகழ்ச்சி மட்டும் எஸ்டேட்டில் நடைபெறாமலிருந்தால் ஒருவேளை இன்னும் அது வளராமலே இருந்திருக்கலாம். ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்னால் நடந்த அந்தக் கொடூர நிகழ்ச்சியால் இப்போது அது கப்பும் கிளையுமாக... ஆலமரமாக வேரூன்றி நின்றது.

கறுப்பண்ணன் குடும்பத்துக்கு ஏற்பட்ட நிலை தன் குடும்பத்துக்கு ஏற்படக்கூடாது என்று அன்றே முடிவெடுத்துவிட்டார் கண்ணையா. தனக்கென ஒரு வீடு வேண்டும் என்ற எண்ணம் அப்போதே அவரது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

புரோக்கர் கந்தசாமி கூறிவிட்டுப் போனதை மீண்டும் மீண்டும் மனத்திரையில் ஓடவிட்டார் கண்ணையா.

"இரண்டு லாட்டுகளை வாங்கினால் ஒரு லாட்டில் வீடு கட்டிக் கொண்டு இன்னொரு லாட்டில் கோழிகள் வளர்க்கலாம்..." மனம் கற்பனை வானில் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது.

வ. முனியன்

லாட்டுகளின் விலையும் அப்படி ஒன்றும் அதிகமில்லை. லாட்டு ஒன்றின் விலை இரண்டாயிரத்து ஐநூறு வெள்ளிதான். இரண்டுக்கும் மொத்தம் ஐயாயிரம் வெள்ளி வரும்; மேலும் ஒரு ஐந்து, ஆறுயிரம் வெள்ளியில் நல்ல பலகை வீடு ஒன்று கட்டிவிட முடியும்

பணத்தை நினைத்தபோதுதான் அவருக்கு ஏதோ செய்வதுபோல் தோன்றியது. அவரிடம் அப்போது பத்தாயிரம் தேருது. "தண்ணி" போடாமல் வயிற்றையும் வாயையும் கட்டி அவரும் அவர் மனைவியும் சம்பாதித்ததில் செலவு போக ஏதோ ஐயாயிரத்துச் சொச்சம் போஸ்டாபீஸில் இருந்தது. பதினைந்து வருட காலம் ரப்பர் மரம் சீவியதில் அதற்குமேல் அவர்களால் அதிகமாகச் சேர்த்து வைக்க முடியவில்லை.

இருக்கிற பணத்துக்கு நிலம் வாங்கிவிட்டால் வீடு கட்டுவதற்கு அவரிடம் பணம் இருக்காது. யாரிடமாவது கடன் வாங்கிக் கட்டினுல்தான் உண்டு. ஆனுல் அவரை நம்பி யார் ஐயாயிரம் ஆறுயிரம் வெள்ளி கடன் கொடுப்பார்கள்? மேலும் குடித்தும் சூதாடியும் அனுவசியச் செலவு செய்தும், அன்றுடங் காய்ச்சிகளாகவும் வாழ்பவர்கள்தான் எஸ்டேட்டில் அதிகம். கடன் கொடுத்து வாங்கும் அளவுக்குப் புணம் படைத்தவர்கள்... மஸ்தான் பாபுவைத் தவிர்த்து யாருமில்லை. ஆனுல் அவரிடம் கடன் வாங்கியவர்கள் கடனைக் கொடுத்து முடித்ததாக அவர் கேட்டதில்லை. முதலைவிட வட்டி அவரிடம் அதிகமாக்க் கட்ட வேண்டி வரும். எஸ்டேட் அறிந்த விசயம் இது.



வீடுகட்ட வேண்டுமென்னும் அவரது ஆசை நிராசையாக வேண்டியதுதானு?

கண்ணையா யோசித்தார்.

அவருக்குக் காலம் என்ன. இப்பொழுது இருப்பது போலவா இருந்துவிடும்? நல்ல காலம் நிச்சயம் பிறக்கத்தான் செய்யும். இப்போது லாட்டை வாங்கிப் போட்டுவிட்டால் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் நல்ல காலம் பிறக்கும்போது வீடு கட்டி விடலாம். அப்படியே கட்ட முடியாவிட்டாலும் நிலத்தைப் பிறகு வேறு யாருக்கும் நல்ல விலைக்கு விற்றுவிடலாம். அவருக்கு நஷ்டப்படாது. ஆனுல் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டால் நிச்சயமாக இந்த மாதிரி ஓர் இடம் அவருக்கு வீடு கட்டப் பிறகு கிடைக்காது.

கண்ணையா ஒரு முடிவு எடுத்தார். மறுநாள் முன்பணம் கட்டிவிட்டு மீதியை கிராண்டு மாற்றிக் கொடுக்கும்போது கட்டிவிட வேண்டியதுதான்.

"என்னங்க... புரோக்கரு. கந்தசாமி வந்திட்டுப் போனதிலேருந்து ஏதோ யோசனையாவே இருக்கிறீங்க" கண்ணை மூடி மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த கண்ணையாவின் அருகில் வந்து வாங்கின்மேல் அமர்ந்தாள் அவர் மனைவி.

எதையும் அவநம்பிக்கையோடு நோக்குபவள் அவள். அவளிடம் கூறலாமா வேண்டாமா என்று கண்ணையா யோசித்தார்.

அவளிடம் கூருமல் ஒன்றை அதுவும் நிலம் வாங்குவதைச் செய்ய அவர் மனம் விரும்பவில்லை. பணத்தில் அவளுக்கும் பங்குண்டே! நடந்ததையும் தன் முடிவையும் கூறுகிருர்.

"ஐயய்ய... என்னங்க இது? இருந்திருந்து தரகரு கந்தசாமிய நம்பி லாட்டு வாங்கப் போறதா சொல்றீங்க. அவரு ரொம்ப பித்தலாட்டக்காரருன்னு எஸ்டேட்டிலே எல்லாரும் பேசிக்கிருங்க..." அவர் மனைவி அங்கலாய்த்தாள்.

கண்ணையாவுக்கும் அதெல்லாம் தெரிந்துதானிருந்தது. இருந்தாலும் ஒரு மனிதன் எப்பொழுதுமே ஏமாற்றுபவனுக இருப்பான் என்பதில் நம்பிக்கை அவருக்கில்லை. அதனுல்தான் கந்தசாமியின்பேச்சை நம்பினுர். வெள்ளை உள்ளம்!

-யை நம்பினீங்க... அப்புறம் கையில இருக்கிறதையெல்லாம் அந்த ஆளுகிட்ட கொட்டி அழுதிட்டு நடுத்தெருவிலே நிக்க வேண்டியதுதான். நான் சொல்றத சொல்லிட்டேன். எதுக்கும் விசயம் தெரிந்த ரெண்டுமூணு பேருகிட்ட கேட்டுட்டு அப்புறமா முடிவு எடுங்க" உள்ளே சென்றுவிடுகிருள் அவர் மனைவி.

"எப்பவும் இவளுக்கு சந்தேகம்தான்" என்று கண்ணையாவின் வாய் முணுமுணுத்தாலும் அவளுடைய பேச்சை அப்படியே புறக்கணித்துவிடவும் அவரால் முடியவில்லை.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இப்படித்தான் லாட்டு வாங்கும்படி கேட்டுத் தோட்ட மக்களை அணுகினுர் கந்தசாமி. கண்ணையாவையும் விடவில்லை அவர். மனத்தில் ஆசையிருந்தும் போதுமான பணம் இல்லாததால் வேண்டாமெனக் கூறிவிட்டார் அப்போது ஆனுல் எஸ்டேட்டிலிருந்த சிலர் ஒன்று இரண்டு எனப்பல லாட்டுக்களை வாங்கிப் போட்டனர். ஆனுல் இன்றுவரையிலும் லாட்டுக்கள் பிரித்துக்கொடுக்கப்படவில்லை. பணம் கொடுத்தவர்கள் கேட்டபோதெல்லாம் "இன்னைக்கி, நாளைக்கி" என்று காலத்தை ஓட்டிய கந்தசாமி ஒருநாள் தனக்கும் அதற்கும் சம்பந்தம் முடிந்துபோய் விட்டதென்றும் லாயரைப் போய்ப் பார்த்து அவர்களால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துகொள்ளலாம் என்றும் முடிவாகக் கூறிவிட்டார்.

டாலே நடுநடுங்குபவர்களுக்கு லாயரைப் பார்க்கத் தைரியம் வருமா? தங்களால் எவ்வளவு கேவலமாகத் திட்ட முடியுமோ அவ்வளவு கேவலமாகத் திட்டித் தீர்த்தார்கள்; சபித்தார்கள். ஆனுல் அவர்களுடைய சாபம் கந்தசாமியை எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. அவர் முன்னைவிட நன்ருகத்தானிருந்தார்.

இது மட்டுமல்ல. சுங்கை லாலாங்கில் புரோக்கர் கந்தசாமியின் மூலமாக நிலம் வாங்கியவர்களுக்கும் நாமம் போடப்பட்டது என்றும் காற்றுவாக்கில் அவர் கேள்விப்பட்டுத்தான் இருந்தார்.

புரோக்கரிடம் பேசிக்கொண்டிருந்த அந்தப் பத்து நிமிட நேரத்தில் கண்ணையா இதையெல்லாம் அதிகம் சீர்தூக்கிப் பார்க்காவிட்டாலும் "முதல்லே இப்படித்தான் லாட்டு போட்டுங்க, ஆனு அது இது வரையிலும்..." என்று ஒரு கோடி காட்டினுர்.

"நீங்க யாரோ எனக்கு வேண்டாதவங்கள்ளாம் கட்டிவிட்ட கதையைக் கேட்டு என் மேலே சந்தேகப்படறீங்க போல இருக்கு. உங்களுக்கு சந்தேகம்னு இத நீங்க வாங்க வேணும். ஆனு பின்னால வருத்தப்படாதீங்க..." என்று கந்தசாமி போட்ட போட்டைக் கேட்டு மேற்கொண்டு எதுவும் கேட்கத் தோன்ருமல் உட்கார்ந்துவிட்டார் கண்ணையா.

"உங்களுக்காக ஒண்ணு சொல்றேன் கேளுங்க" கண்ணையாவின் மௌனத்தைக் கண்டு

கறந்த பால்

திரு. உடையப்பா தேவரின் "ஹரிச்சந்திரா" நாடகத்தில் கேட்டு, மலாக்கா திரு. சங்கர் "கறந்த பாலின் கனிந்த நட்பு" என்ற தலைப்பில் எழுதிய கருத்தை ரசித்தேன். அதற்கு ஏற்ற பழம்பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது; அதைக் கீழே தந்துள்ளேன்.

பாலுநீர் தீயணுக பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நாலுநெறி
உற்ருேர் இடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே.
மற்ருேர் புகல மதித்து!

—நமஸ்காரம் பழநியப்பன், கோலாலம்பூர்.

கா. என் மேலே நம்பிக்கை இல்லேனு வாத்தியாரு கோபாலும் கிராணி ஐயாவும் என்னிடம் நிலம் வாங்கியிருப்பாங்களா?"

அதற்கு மேல் கண்ணையாவின் மனத்திலிருந்த சந்தேகங்களெல்லாம் தாக்குப் பிடிக்க முடியாமல் ஓடி ஒளிந்து கொண்டன. நாலுந் தெரிந்த அவர்கள் கண்ணை மூடிக் கொண்டு நிலம் வாங்குவார்களா?

இதையெல்லாம் வைத்துத் தான் நிலம் வாங்க முடிவெடுத்தார் கண்ணையா.

"ஏங்க... இன்னும் என்னமோ மோட்டு வளையையே பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்கிறீங்க" வீட்டினுள்ளிருந்து வந்த அவர் மனைவி அவரிடம் காப்பிக் குவளையை நீட்டினாள்.

"ஒண்ணுமில்ல.. புரோக்கர் கந்தசாமியைப் பத்தித்தான் யோசிச்சிக்கிட்டிருந்தேன். நம்ப கோபால் வாத்தியாரும் கிராணி ஐயாவும்கூட நிலம் வாங்கியிருக்கிறதா அவரு சொன்னாரு. கந்தசாமி ஏமாத்திப்புடுவாருன்னு நினைச்சா அவுங்க நிலம் வாங்கியிருப்பாங்களா?"

"இந்த புரோக்கரு சொல்றத மட்டும் வச்சி ஒரு முடிவு கட்டிடாதீங்க... ஏன்னா இந்தக் காலத்துல நல்லா படிச்சவங்க கூட இந்த புரோக்கருங்க பேச்சைக் கேட்டு ஏமாந்துடறுங்க. எதுக்கும் நீங்க வாத்தியார் சாரைப் பார்த்து ஒரு வார்த்தை கேட்டுடுங்களேன்" புரோக்கரிடம் அவளுக்கு இன்னும் நம்பிக்கை பிறக்கவில்லை என்பது தெரிந்தது.

கண்ணையா, ஆசிரியர் கோபாலைத் தேடிச் சென்றபோது அவர் வீட்டில்தான் இருந்தார்.

குழந்தைகள் படிப்பு சம்பந்தமாகக் கூட தேடி வராத கண்ணையாவைக் கண்டதும் ஆசிரியரின் முகம் கேள்விக் குறியைக் காட்டியது.

"ஒண்ணுமில்லேங்க... சும்மா தான் உங்களைப் பார்த்திட்டுப் போகலாமின்னு" கண்ணையாவின் நெளிவும் சுளிவும் ஆசிரியருக்கு ஏதோ உணர்த்துவது போன்றிருந்தது. இருப்பினும் அவரே சொல்லட்டும் என்பது போல் மௌனமாக உட்கார்ந்திருந்தார் ஆசிரியர்.

"வந்துங்க... புரோக்கர் கந்தசாமிங்க... லாட்டுங்க" என்று இழுத்து நிறுத்தி ஒரு வழியாக விஷயத்தைக் கூறி முடித்தார் கந்தசாமி.

"புரோக்கர் கந்தசாமி சொன்னதிலே ஓரளவு உண்மையிருக்குங்க. நானும் அவரு மூலமா நிலம் வாங்கலாமின்னு ஆசைப்பட்டது உண்மைதான், ஆனா, இப்ப முடிவை மாத்திக்கிட்டேங்க" நிறுத்திவிட்டு கண்ணையாவைப் பார்த்தார் ஆசிரியர்.

கண்ணையாவின் மன ஓட்டத்தை அவரின் முகத்திலிருந்து ஆசிரியரால் கணிக்க முடியவில்லை.

"இந்த லாட்டு வாங்குற விசயத்திலே நாம கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணுங்க" ஆசிரியர் கோபால் மீண்டும் தொடர்ந்தார். "இல்லேனா நாம பின்னலே வருத்தப்படும்படியா போயிட்டாலும் போயிடும்"

"இந்த நிலத்தப் பத்தி புரோக்கர் சொன்னவுடனே நானு செண்டு நாளைக்கி முந்திலேண்டு ஆபீஸிலே போயி விசாரிச்சேன். அவுங்க அந்த நிலம் பயிர் செய்யறதுக்காக உள்ள இடமின்னும், அந்த இடத்திலே வீடு கட்ட முடியாதுன்னும் கூறினாங்க. அப்படியே வீடு கட்டுனமின்னா அதைப் பத்தி அரசாங்கத்துக்கு எழுதி அதை வீடு கட்டறதுக்கு வேண்டிய நிலமா மாத்தனுமாம். ஆனா, அது ஒண்ணும் அவ்வளவு சுலபமா முடியாதுங்களாம். சில சமயத்திலே ஒண்ணு ரெண்டு வருசத்திலே அனுமதி கெடைச்சாலும் கெடைக்கலாமாம். அனுமதியே கெடைக்காம போனாலும் போகலாமாம்!"

"உங்களுக்கு தெரியுமில்ல அந்த சுங்கை லாலாங் நிலம். அதுல இன்னும் வீடு கட்ட முடியாம இருக்கிறதுக்கு அரசாங்கம் அனுமதி கொடுக்காததுதானாம். இன்னும் எத்தனை வருசம் ஆனாலும் அரசாங்கம் அதுக்கு அனுமதி கொடுக்காதுன்னும் அங்கு உள்ள ஆபிசரு சொன்னாரு. அதனால நான் திரும்பி வந்தவுடனே புரோக்கர் கந்தசாமி சொன்ன லாட்டை வேண்டாமினு சொல்லிப்பிட்டேன்" முடித்துவிட்டு கண்ணையாவின் முகத்தை நோக்கினார் ஆசிரியர் கோபால்.

கண்ணையா மௌனமானார். சொந்த நிலத்தில் வீடு கட்ட வேண்டுமென்னும் தன் ஆசை

அவள்

கவி 'தாசு'

குன்றுகள் நிறைந்த பாங்கர்
குளுதளு கருவார் சோலை
மன்றிற்பல் மலர்கள் கொட்ட
மகிழுடன் முசுக்க ளாங்கண்
கண்டெனக் காதல் மேவும்
கனிவுறு விளையாட் டெல்லாம்
நன்றெனச் செய்யும் வேளை
நலமுடன் நான்சென் றேனே!

ஓங்கிய மலையி னின்றே
ஒலியெழ அருவி பாய்ந்து
வாங்கியே ஓட ஆங்கே
வளர்ந்திடும் இயற்கை கண்டு
"ஈங்குநம் உள்ளம் கொண்ட
எழிலுடைத் தலைவி வந்தால்
பாங்குநீ ரடிக் காட்சி
பார்த்துமே மகிழ லாமே!"

என்றுயான் நினைத்த போதில்
என்மனக் கண்ணுள் சீர்சால்
அன்புறு கவிதைப் பெண்ணாள்
அணியழ குடனே வந்து
"நன்புடன் வந்தாய் கொல்லோ?
நானும்வந் திட்டேன்" என்று
பண்புறு கவிதை வெள்ளம்
பாய்ச்சிவிட் டேகி னாளே!

மாகப் போயிடும் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

புரோக்கர் கந்தசாமியை நினைத்தார். "என்ன அழகா மனுசன் பேசினுர். அப்பவே வீடு கட்டி முடிச்சிடலாம்கிற மாதியில்ல பேசினுரு. நல்ல வேளை உடனடியா பணத்தைக் கொடுக்கல. அவ மட்டும் சொல்லலனு என்ன நடந்திருக்குமோ?" மனதிற்குள் தன் மனைவிக்கு நன்றி கூறிக்கொண்டார்.

கண்ணையாவின் அப்போதைய நிலையைக் கண்டு ஆசிரியர் கோபாலுக்கு அவர் மேல் பச்சாதாபமே தோன்றியது. "உங்க மனசுல ஓடற எண்ணத்தை நான் ஓரளவுக்கு புரிஞ்சிக்கிடறேன். ஆனு ஒண்ணு! நாம நிலம் வாங்கித்தான் வீடு கட்டணுமின்னு இல்ல. பட்டணத்தில கூட வீடு கட்டி விக்கிறுங்க. நீங்க விரும்பினு அங்க கூட ஒரு "டெரஸ்" வீட்டை வாங்கலாம். முன்பணமா ஒரு மூவாயிரம் வெள்ளி கட்டினு போதும். பிறகு மாதா மாதம் நூறு வெள்ளி போல கட்டிக்கிட்டு வந்தா ஒரு பதினைஞ்சி வருசத்துலே வீடு நமக்குச் சொந்தமாகிவிடும். அந்த நூறு வெள்ளியைக்கூட நீங்களே கட்டணுமினறது கூட இல்ல. வீட்டை சேவாவுக்கு விட்டா அதிலிருந்து கிடைக்கிற பணத்தை வச்சே கட்டிடலாம். போதும் போதாதுக்கு நாம கொஞ்சம் போட்டா போதும்.

நானும் அங்கேதான் வீடு ஒண்ணு வாங்க முடிவு செஞ்சிட்டேன். நாளைக்கு அதுக்காக பட்டணத்துக்குப் போலாமின்னும் இருக்கேன்".

கண்ணையா யோசித்தார். பட்டணத்தில் வீடு வாங்க அவருக்கு அவ்வளவு விருப்பமில்லை. கோழிகள் வளர்க்கவும் காய்கறி பயிர் செய்யவும் பட்டணத்து வீடுகளில் அதிகநிலமிருக்காது என்பது அவருக்குத் தெரியும். ஆனுல் இப்படியே யோசித்துக்கொண்டேயிருந்தால் அவருடைய வீடு வாங்கும் ஆசை நிறைவேறாது போலவும் தோன்றியது.

அன்று இரவு அவருக்குத் தூக்கம் வர வெகுநேரம் பிடித்தது.

மறுநாள் வேலை முடிந்து வந்த கண்ணையா சாப்பிட்டு விட்டு ஆசிரியரைக் காண அவர் இல்லம் நோக்கி நடந்தார்.

கலையுலக வினாவிடை

பரிதா மணாளன்

சி. ஜெயராமன், மிடில்டன் தோட்டம், ரொம்பின்

கே: சுஜாதா ஏன் இவ்வளவு சீக்கிரம் திருமணம் செய்துகொண்டார்?

ப: உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாததால்தான்!

எஸ். வெங்கடாசலம், புக்கிட் சீடிம் தோட்டம், சிலாங்கூர்

கே: பத்மஸ்ரீ விருதுபெற்ற தமிழ் நடிகர், நடிகையர் யார்?

ப: நாகையா, சிவாஜி கேணசன், பி. பானுமதி.

முருகையா, பாரிட்புந்தார்

கே: "பொன்னுசை கொண்டோர்க்கு உள்ளமில்லை-நல்ல உள்ளமில்லை" என்ற பாடல் ஒலித்த படம் எது?

ப: முரடன் முத்து.

கே: சிவாஜி கணேசன் நடித்த எந்தப் படமாவது பொன்விழாவை எட்டியுள்ளதா?

ப: எதுவுமில்லை.

கே: சிவாஜி கணேசன் யாரால் திரையுலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டார்.

ப: கிருஷ்ணன்-பஞ்சு இயக்குநர்களால்.

ஏ. பி. பெருமாள், பந்திங்

கே: நடிகர் ஜெய்சங்கர் நடித்த முதல் படம் எது?

ப: இரவும் பகலும்.

கோமா. சத்தியசீலன், தாப்பா ரோட்

கே: ரஜனிகாந்தின் நல்ல நடிப்பைப் பெற்று ஓடும் படம் எது? அவரின் நடிப்பு எப்படி?

ப: ரஜனிகாந்தின் நடிப்பு இப்போது எல்லோராலும் பாராட்டப்படுகிறது. எல்லாப் படங்களிலும் தன் நடிப்பை அவர் சிறப்பாகச் செய்கிறுர். ரஜனிகாந்த் நடித்த "16 வயதினிலே" இப்போது தமிழகத்தில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

வி. இராமசாமி, கோலாலம்பூர்

கே: "முத்தம் கொடுப்பது தமிழ்ப் பண்பாடு அல்ல. முத்தம் தரும் படங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவேன்" என்று எம். ஜி. ஆர். கூறியுள்ளாரே, இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: "தமிழ்நாட்டில் எந்த ஆணும் பெண்ணும் நடுத்தெருவில் ஆடிப் பாடிக் காதல் செய்வது இல்லை. கட்டிப் புரளுவது இல்லை. மூக்கோடு மூக்கு, கன்னத்தோடு கன்னம் உரசிக் கொள்வது இல்லை. ஆனுல் படங்களில் இந்தக் காட்சிகள் இடம்பெறுகின்றன. சினிமா என்பது வெறும் நடிப்பு. நடிப்புக்காக முத்தம் கொடுப்பதில் தவறு இல்லை என்றே நான் நினைக்கிறேன்" என்று முத்தம் கொடுத்த கமலஹாசனே கூறியிருக்கிறுர். இதைப்பற்றி நாம் என்ன சொல்ல இருக்கிறது?

முருகுவைக் கேளுங்கள்

ச. சுப்பிரமணியம், பாடாங் ஜாவா, கிள்ளான்

கே: சத்திய யுகம் எப்போது தோன்றும்?

ப: அரிச்சந்திரர்கள் கண்ணுக்குப் புலப் படாத அளவு சிறுபான்மையாக இருக்கின்ற இந்த உலகத்தில் சத்திய யுகம் அத்தனை எளிதாக உதயமாகுமென்று எதிர்பார்க்க முடியாது.

மு. நாராயணசாமி நாயுடு,
புக்கிட் பிராந்தோங் தோட்டம், சிலாங்கூர்

கே: முறைப்படி சாந்தி முகூர்த்தம், மணமகள் இல்லத்தில் வைப்பதா? அல்லது மணமகள் இல்லத்தில் வைப்பது நல்லதா?

ப: சாந்தி முகூர்த்தம் மணமகன் இல்லத்தில் நடப்பதுதான் முறையாகும்.

எம். எஸ். ராஜகுமாரன், சுங்கை ரிஞ்சிங் தோட்டம், சிலாங்கூர்

கே: அண்ணா, நான் வேலை செய்யும் கடையில் தமிழ்ப்பையன்கள் நான்கு பேரும், நான்கு சீனப்பெண்களும் வேலை செய்கிறார்கள். இது கோலாலம்பூரில் உள்ளது. தினமும் இரண்டு மூன்று இந்திய பிச்சைக்காரர்கள் வருகிறார்கள். கையில் காசு இருந்தால் போடுவோம். சில நேரங் களில் சில்லரை இல்லை என்று சொன்னாலும் கூட போக மறுக்கிறார்கள் இன்னும், ஐந்து காசு போட்டால் முறைத்துப் பார்க்கிறார்கள். இவர்களை என்ன செய்யலாம். இவர்களால் கடையில் வேலை செய்வதற்கே அவமானமாக இருக்கிறது.

ப: பிச்சைக்காரர்களுக்குக் காசு போடுவது பிச்சையெடுக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத் தும் காரியமாகும். இனி மேல் அந்தப் பிச்சைக்காரர்கள் வந்தால் காசு ஏதும் போடாதீர்கள். காத்திருந்து பார்த்துவிட்டு அவர்கள் பேசாமல் போய் விடுவார்கள்.

கே: அண்ணா, எல்லாப் பத்திரிகைகளுக்கும் எழுதிவிட்டேன். ஆனால் ஒன்றில் கூட என் பெயர் வந்ததில்லை. இதிலாவது என் பெயர் வந்தால் சந்தோஷம் அடைவேன். எனது எண் ணம் நிறைவேறுமா?

ப: உங்கள் எண்ணம் நிறைவேறிவிட்டது. மகிழ்ச்சி தானே!

ஆ. சங்கப்பிள்ளை, மாடோஸ் தோட்டம், உலுதிராம்

கே: தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளில் நாம் பெறும் புறக்கணிப்பிற்கு சரியான பரிகா ரம் என்ன?

ப: நம் தலைவர்கள் இதற்கு விடை காண முடியாமல்தான் தவித்துக் கொண்டிருக்கிறார் கள். தகவலமைச்சு இந்தியர்களை மேலும் சோதிக்காமல் நல்ல முடிவுகளை விரைவில் எடுக்க வேண்டும் என்பதே நமது விண் ணப்பமாகும்.

கே: புதிய சமுதாயத்தில் இடம் பெற்ற "மலேசிய மொழியில் தேர்வு பெற..." கட்டுரைத் தொட ரைப்போல் மீண்டும் ஒரு மலேசிய மொழி கட்டுரை "ரிமூவ்" வகுப்பில் பயிலும் நமது மாணவர்களுக்கெனப் படைத்தால் என்ன?

ப: தங்கள் யோசனையைக் கருத்தில்கொள்ளு கின்றோம். "மணற்கேணி" என்னும் கேள்வி பதில் பகுதியை ரிமூவ் வகுப்பு மாணவர் களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கே: சிங்கைக் கவிஞர் கா. பெருமாளுடன் உங் களுக்குப் பழக்கமுண்டா? அவரைப் பற்றி...

ப: நாடறிந்த நல்ல மலேசியக் கவிஞரான திரு. கா. பெருமாள் அவர்களைப் பற்றி அதிகம் அறிமுகம் செய்யத் தேவையில்லை.

என். கெங்கநாதன், டோவன்பி தோட்டம், சுங்கை சிப்புட்

கே: மணமான பெண்கள் நெற்றியில் குங்கு மத்தை மேலும், திருநீற்றைக் கீழும் வைப்பது சரியா? அல்லது திருநீற்றை மேலும் குங்குமத்தைக் கீழும் வைப்பது சரியா? இந்தக் கேள்விக்குச் சரியான பதிலைத் தந்தால் எங்களுடைய சந்தே கம் நீங்கும்.



ப: திருநீற்றை மேலும் குங்குமத்தை அதன் அடியிலும் வைப்பதே சரி.

கே: நீங்கள் இதுவரை எங்களது பகுதிக்கு வந்துள்ளீர்களா? எங்களது பகுதியில் "புதிய சமுதாயம்" விளக்க உரைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தால் நீங்கள் இங்கு வருவீர்களா?

ப: தங்கள் தோட்டத்துக்கு நான் வந்த தில்லை. புதிய சமுதாயம் விளக்க உரைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். வரு கிறோம்.

செல்வராஜு குமரன், புக்கிட் ராஜா செம்பனை ஆலை, கிள்ளான்

கே: உழைப்பிற்கு இன்சுவை கூட்டுவது எது?

ப: ஊதியம்.

கே: மனிதன் இறப்பது நிச்சயம். இருக்கும் போது அவன் என்ன சாதிக்க துடிக்கிறான்?

ப: துடிப்பும், பரபரப்பும் மனித வாழ்க் கையில் இருப்பதைப் புரிந்து கொள்ள முடி கிறது. ஆனால் மனிதன் எதனைச் சாதிக்கக் கருதுகிறான். எதனை நோக்கிச் செல்லுகிறான் என்பது தான் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கிறது.

கே: பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பூட்டோ மீண்டும் ஆட்சிக்கு வருவாரா?

ப: இன்றைய உலக அரசியலில் எதுவும் நடக்கலாம்.

கே: சார், சில இளைஞர்கள் சினிமாப்படம் பார்த்து வீட்டுக்கு வந்தவுடன் சினிமாவில் வரும் காதல் டுயட்டை வீட்டில் போட்டுப் பார்க்கின்றார்களே?

ப: இதில் உங்களுக்கென்ன கஷ்டம்? சின்னஞ் சிறுசுகளின் காதல் கீதம் பிடிக்காவிட்டால் உங்கள் காதுகளைப் பொத்திக்கொள்ளுங்கள்.

எம். சாமிக்கண்ணு,
டென்னிஸ் டவுன் தோட்டம், பேரா

கே: இந்த வயதில்தான் ஒரு பெண்ணைக் காதலிக்கவேண்டும் என ஒரு புதிய சட்டம் கொண்டு வந்தால்?

ப: மினி பஸ்களை சட்டப்படி ஓடச் செய்வதை விட அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவது இன்னும் கடினமாகும்.

கே: நானின்றி நீ இல்லை. நீயின்றி நான் இல்லை என்று கூறும் ஆண்கள் பணத்தை மட்டும் மனைவிக்குத் தெரியாமல் ஒளித்து வைப்பதேன்?

ப: பணமின்றி இருவரும் இல்லையென்பதை மனைவிக்கு உணர்த்துவதற்காக இருக்கலாம்.

பி. தமிழ்ச்செல்வி வீரமணி,
புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: இன்றைய இளைஞர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது என்ன?



ப: சக்கையாக வாழாமல் சத்துள்ள மனிதர்களாக உங்களை உருவாக்கிக்கொள்ளுங்கள்.

எஸ். விஜய் விஜிதாஸ், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: இன்பத்தை நாடும் உள்ளம் ஏன் துன்பத்தைச் சந்திக்க மறுக்கிறது?

ப: கற்கண்டைத் தின்னும் குழந்தை வேப்பெண்ணெய்யைக் குடிக்க முரண்டு பண்ணுவது போன்றதே இதுவும்.

கே: முத்தி நெறி என்பது என்ன?

ப: மோட்சம் அடைகிற மார்க்கம்.

கே: என் நண்பர் ஒருவர் எப்போதும் "நீ படித்தவன், நான் படிக்காதவன்" என்று தாழ்வு மனப்பான்மையுடன் நடந்துகொள்கிறார். அவருக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

ப: "படிக்காவிட்டாலும் பரவாயில்லை" என்னும் தலைப்பில் வள்ளுவர் வழிகாட்டுகிறார் தொடரில் ஒரு கட்டுரை புதிய சமுதாயம் 14-வது இதழில் வெளிவந்திருக்கிறது. அந்தக் கட்டுரையை உங்கள் நண்பருக்குப் படித்துக் காட்டுங்கள்.

ஊதாப்பூ ராமச்சந்திரன்,
பத்தாங்காலி தோட்டம், பத்தாங்காலி

கே: முருகு சார், தமிழ்வாணன் இறந்தது எப்படி? மாரடைப்பினாலா? அல்லது கொலையா?

ப: அதிகமாகக் கற்பனை செய்யாதீர்கள்! மாரடைப்பே தமிழ்வாணன் மறைவுக்குக் காரணம்.

மனோகரன் வே. வேலு, பண்டமாரான், கிள்ளான்

கே: சார், நான் ஒரு கட்டுரையைப் படைத்துத் தங்களுக்கு அனுப்பவுள்ளேன். தலைப்பு, "வெளிக் கொணர வேண்டிய பிரச்சனைகள்." இதில் நம் சமுதாயம் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சனைகள் யாவையென்றும், அவற்றை ம.இ.கா. எப்படித் தீர்க்க முடியுமென்றும் வடித்துள்ளேன். பத்திரிகைத் துறைக்கு இது தான் எனது முதல் எழுத்தோவியம், ஏற்றுக் கொள்வீர்களா?

ப: உங்கள் கட்டுரையைப் பார்த்த பிறகு தான் நாங்கள் எந்த முடிவையும் செய்ய இயலும்.

ரிச்சர்ட் சவரி, தாவாவ், சாபா

கே: இன்னும் 2000 வருடங்களுக்குப் பிறகு இவ்வுலகம் எப்படி இருக்கும்?

ப: எது சந்திர மண்டலம், எது பூமண்டலம், எது செவ்வாய் மண்டலம் என்று அடையாளம் காண முடியாதபடி உலகம் சுருங்கியும் நெருங்கியும் குழம்பிக் கிடக்கும்.

தமிழ்ப்பாணன், தங்கா

கே: மேடைப் பேச்சளவில் மக்களுக்குத் தொண்டு செய்யும் எத்தர்கள் என்று ஒழிவர்?

ப: மேடைப் பேச்சில் நமது மக்களுக்கு இருக்கின்ற மயக்கம் தீரும்போது.

எம். ஜி. ஜேம்சிவா, புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: ஒரு தாய் இறக்கப் போகிற சமயத்தில் "கடவுளே, என் தாயைக் காப்பாற்றமாட்டாயா" என்று அந்தத் தாயின் ஒரே மகன் கேட்டால் கடவுள் வந்துகாப்பாற்றி விடுவாரா?

ப: மனப்பூர்வமான பிரார்த்தனைகள் இறைவனால் ஏற்கப்படுவதாகவே சொல்லப்படுகின்றன.

கோ. வாசுதேவன், சுவா கிரேனசிங் பொ, ரந்தாவ்

கே: இப்பகுதியில் வெளிவரும் கேள்விகளில் நல்ல கேள்விகளைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கினால் என்ன?



ப: புதிய சமுதாயத்தின் 25-ஆவது இதழிலிருந்து அதாவது இரண்டாவது ஆண்டின் தொடக்கத்திலிருந்து தங்கள் ஆலோசனைப்படி ஒவ்வோர் இதழிலும் சிறந்த கேள்விக்கு ஐந்து வெள்ளி பரிசளிக்கப்படும்.

வீ. ஆர். மணி, புருக்லேண்ட்ஸ் தோட்டம், பந்திங்

கே: இன்றைய இளைஞர்களில் சிலர் தங்களுடைய பொழுதைக் கள்ளுக்கடைகளிலும், சூதாட்டத்திலும் கழித்து வருகிறார்கள். இவர்களையெல்லாம் நல்ல வழிக்குக் கொண்டு வருவது எப்படி?



ப: ஓய்வில்லாத உருப்படியான வேலைகளில் அவர்களை அமர்த்த வேண்டும்.

ஏ. மணியம், தெலுக் பியா தோட்டம், கோலசிலாங்கூர்

கே: இப்பொழுது நமது நாட்டில் உள்ள பெரும்பாலான நீதிமன்றங்களில் எந்த மொழியில் வழக்கை நடத்துகின்றார்கள்?

ப: ஆங்கிலத்திலும் மலேசிய மொழியிலும்!

வி. கிருஷ்ணன், ஆயர் பனஸ், ஸ்தாப்பாக்

கே: அறிவுரைகளைக் கூறும் பெரியவர்கள் கீழ்த்தரமான செயல்களில்ஈடுபட்டுப்பிடிபட்டால்...?

ப: மானம் கப்பலேறும். பெரியவர்கள் சின்னவர்களாகி விடுவர்.

எஸ். ஏ. மாடசாமி, பண்பு தோட்டம், ஜொகூர்

கே: இன்று தலை நிமிர்ந்து நிற்கும் உலகத் தலைவர் யார்?

ப: தலைகுனியாத உலகத் தலைவர் யாரும் இப்போது இல்லை!

கே: ம. இ. கா. ஸ்தாபகர் ஜான் திவிக்கு ஏன் இன்னும் சிலை எழுப்பவில்லை?

ப: இந்தக் கேள்வியை ம. இ. கா. மத்திய செயற்குழு கவனத்தில் கொள்ளும் என்று நம்புகிறேன்.

எம். நாகராணி, பத்து குரோங், பேரா

கே: நான் பலமுறை வானொலி நாடகம் எழுதி தோல்வி கண்டுவிட்டேன். அதனால் நான் எழுதுவதை வீட்டில் உள்ளவர்கள் தடை செய்கிறார்கள். நான் என்ன செய்வது?

ப: தடைகளை உடைத்துக் கொண்டு உங்கள் எழுத்து வெள்ளம் பீறிட்டுப் பாய்ந்தால் தான் நீங்கள் வெற்றிகாண முடியும். வீட்டில் எல்லாரும் தூங்கிய பிறகு ரகசியமாக உங்கள் நாடகங்களைத் தீட்டுங்கள்.

கே: சிறுகதை எப்படி எழுதுவது?

ப: பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் வெளிவந்துள்ள சிறுகதைகளை நீங்கள் படித்துக் கொண்டே வந்தால் சிறுகதை எப்படி எழுதுவது என்பது உங்களுக்குத் தானே புரிந்துவிடும்!

வீ. குப்புசாமி, அதார்ட்டன் தோட்டம், நெகிரி செம்பிலான்

கே: 1978-ஆம் ஆண்டில் மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுமா?

ப: இது தேர்தல் ஆண்டு. ஆகவே, நிச்சயமாக முன்னேற்றம் ஏற்படும்.

எம். ஜி. மதன் ராஜ், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: அடுத்தவர்களைக் கிண்டல் செய்வதனால் ஏற்படும் விளைவுகள் எப்படி இருக்கும்?

ப: கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறிவதால் நேரக்கூடிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடலாம்.

கே: சித்திரவதையை விடக் கொடுமையானது எது?

ப: சுடுசொல்!

அ. இளங்தேவன், சிரிகாடிங், பத்துபகாட்

கே: இடம் மாறினால் மனம் மாறுமா?

ப: உறுதியான மனம் மாறாது.

கிருஷ்ணன், செலாமா தோட்டம், கெடா

கே: பரீட்சையில் தோல்வியுற்றதால் வீட்டை விட்டு ஓடும் மாணவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: உலகம் புரியாத கோழைகள். பரீட்சையில் தோல்வியுற்ற பலர் வாழ்க்கையில் வெற்றி கண்டிருப்பதை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

கே: மனிதர்களைப் படைப்பதும் இறைவன்; அழிப்பதும் இறைவன். இது ஏன்?

ப: பூமியின் பாரத்தை அளவோடு வைத்துக்கொண்டிருக்க வேண்டிய பொறுப்பும் இறைவனுக்கிருப்பதே காரணம்.

குமாரி எம். நாகம்மா, சுங்கை போக்கா தோட்டம், பேரா

கே, சார், நம் பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுக்கத் தயங்குகிறார்களே?

ப: பெற்றோர்கள் கொடுக்காவிட்டால் பெண்கள் தாங்களாகவே சுதந்திரத்தை எடுத்துக்கொள்ளும் நிலை வந்துகொண்டிருக்கிறது. ஆகவே பெற்றோர்கள் காலமறிந்து தங்கள் மரியாதையைக் காத்துக்கொள்ள வேண்டும்.

கே: புதிய ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ள நாம், எதை கவனத்தில் கொள்ளவேண்டும்?



ப: நமது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறதா என்பதை முதலில் சரிபார்த்துக்கொள்ளவேண்டும்.

பால்மரக் காட்டினிலே

அகிலன்

23. விடியும் வேளையின் தொடக்கம்

பாலனின் வீட்டுக்கு முன் நின்ற போலீஸ் லாரியைச் சுற்றிலும் தோட்டத் தொழிலாளர்களின் கூட்டம் சூழத் தொடங்கியது. உணர்ச்சி வசப்பட்டிருந்த இளம் தொழிலாளர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒவ்வொருவரும் வெளிப்படையாகவே "டிரஸ்ஸர்" மாதவனை விமர்சனம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். எது நடந்தாலும் அச்சத்தோடு அக்கம்பக்கம் பார்த்துக்கொண்டு வெளியில் தெரியாதபடி பேசிப் பழக்கப்பட்டவர்கள். அன்று வெளிப்படையாகவே தங்கள் குரலை எழுப்ப முற்பட்டிருந்தார்கள். எத்தனையோ ஆண்டுகளாக அங்கே நடைபெற்று வந்த தீமைகளுக்குக் குனிந்து கொடுத்துப் பழகியவர்கள், அன்று முதல் முறையாகச் சற்றே தலை நிமிர்ந்து ஆத்திரம் பொங்கும் விழிகளால் தங்களுக்கு முன் நிற்கும் பிரச்னையின் சின்னத்தைப் பார்ப்பதுபோல் போலீஸ் லாரியைப் பார்த்தார்கள்.

பாலன் அவர்களிடம் அமைதியாக இருக்கும்படி முறையிட்டு விட்டு, தன் வீட்டிலிருந்து முத்துவை லாரிக்கு அழைத்து வந்தான். தாயார் வேலம்மாளின் பிடியிலிருந்து முத்துவைப் பிரித்து வெளியில் அழைத்து வருவதுதான் அவனுக்குப் பெரும்பாடாக இருந்தது. தன் சகோதரனிடம் பாலன், "உண்மையா எது நடந்திச்சோ, அதைப் போலீஸ் ஸ்டேஷனிலே சொல்லு; உயிரே போனாலும் போகட்டும்; மாத்திச் சொல்லிடாதே!" என்றான். இதைக் கேட்ட முத்துவின் விழிகளில் குபீரென்று கண்ணீர் பொங்கியது. "நீ கவலைப்படாதே பாலா; தூக்குமேடைக்கு அனுப்பினாலும் நான் என்னைக் காப்பாத்திக்கறதுக்காகப் பொய் சொல்லமாட்டேன்" என்று தழுதழுத்த குரலில் விடையளித்தான் முத்து.

போலீஸ் லாரியில் வந்த கிராணி, "அந்தக் குட்டி செல்லம் எங்கே இருக்கா? அவளையும் கூட்டியாங்க! விசாரிச்சிட்டு அனுப்புவாங்க!" என்றான்.

அதுவரையில் பொறுமையாக இருந்த பாலன், "செல்லத்தை எதுக்கு அனுப்பணும்? முடியாது!" என்று கத்தினான்.

"நாங்க அனுப்பமாட்டோம்!" என்று பல குரல்கள் கூட்டத்துக்கிடையே இருந்து குமுறின.

"முடியாது! செல்லத்தை நாங்க ஸ்டேஷனுக்கு அனுப்ப முடியாது" என்று லாரியில் வந்திருந்த போலீஸ்காரர்களிடம் மலாய் மொழியில் கூறினான் பாலன்.

"நாங்க விசாரணை செய்திட்டு அனுப்பிடறோம்" என்று கூறினார் ஒரு போலீஸ்காரர்.

"இங்கேயே நீங்க விசாரணையை வச்சிடுங்க" என்றான் பாலன். "ஏற்கனவே அந்தப் பெண் நொந்து போயிருக்கு. ஸ்டேசனுக்கு அனுப்பிச்சா அது தற்கொலை செய்துக்கிட்டுச் செத்துப்போயிடும். வயசுப் பெண்ணை எங்களாலேயே ஸ்டேஷனுக்கு அனுப்ப முடியாது. நீங்க எங்களை என்ன செய்தாலும் செய்துக்குங்க!"

கூட்டத்திலிருந்து ஓர் இளைஞன் குமுறினான்:

"நீங்க நியாயம் செய்யறதா இருந்தா அந்த மாதவனைத்தான் ஜெயில்லே அடைக்கணும். அவனைத்தான் சுட்டுக்கொல்லணும். அவன் பொய்க் கேசு குடுத்திட்டா அதுக்காக முத்துவையும் செல்லத்தையுமா ஜெயில்லே அடைக்கப் போறீங்க?"

அந்த இளைஞன் எந்த உணர்ச்சியில் இருந்தானோ அந்த உணர்ச்சியில்தான் கூட்டமும் இருந்தது. கூட்டத்தின் மனப்போக்கை உணர்ந்துகொண்ட ஒரு வயதான போலீஸ்காரர் லாரிக்குள்ளிருந்து வெளியில் வந்தார். அவர் தலைமைக் காவலராகவோ அல்லது சப் இன்ஸ்பெக்டராகவோ இருக்கவேண்டும். மலாய்க்காரர் மலாய்மொழியில் பேசினார்.

"நான் ஒரு குடும்பத்துக்குத் தலைவன். எனக்கும் வயசுக்கு வந்த பொண் இருக்கு. என்னோட சொந்தப் பொண்ணைக் கவனிச்சுக்கறப்பலே நான் இதைக் கவனிச்சுக்கறேன். நான் என்னோட மேலதிகாரி சொன்னபடி நடக்கணும்; என்னோட கடமையைச் செய்யணும். அதுக்கு நீங்கள்ளாம் தயவு செய்து உதவி பண்ணுங்க. வேணும்னா அந்தப் பொண்ணுக்குத் துணையா யாரையாவது அதோட அனுப்பி வையுங்க!"

மலாய்ப் போலீஸ்காரர்கள் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் பழகும் இயல்புடையவர்கள். அதே சமயம கடமையில் மிகவும் கண்டிப்பானவர்கள். பாலனுக்கு அந்தப் போலீஸ்காரர் பேசியதில் இருந்த நியாயம் புரிந்தது.

"அப்படீன்னா செல்லத்தோட என் அம்மாவும் போயிட்டு வரட்டும். செல்லத்தைப் போய்க் கூட்டிக்கிட்டு வாங்க!"

கூட்டத்தில் இருந்தவர்களுக்குப் பாலனின் இந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. வயசு வந்த பெண்ணை அதிலும் ஒரு கயவனால் அவமானப்படுத்தப்பட்ட பெண்ணை அவன் கொடுத்த பொய்ப் புகாரின் பேரில் எப்படிக் காவல் நிலையத்துக்கு அனுப்புவது? இது என்ன நியாயம்?

பாலன் அவர்களிடம் நிலைமையை எடுத்துச் சொல்லி ஓர் இளைஞனையும் தன் தங்கையையும் செல்லத்தின் வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அதற்குள் தாயார் வேலம்மாளைச் செல்லத்துடன் புறப்படுவதற்குத் தயாராக இருக்கும்படி கூறினான்.

லாரியில் வந்த கிராணி, அதுவரையில் எதையோ பாலனிடம் சொல்ல மறந்திருந்தவன்போல், "ஆமா பாலா, இதை உங்கிட்டே குடுக்கச் சொல்லி ஆபீசிலே குடுத்தனுப்பிச்சாங்க; இப்பத்தான் பினாங்கிலிருந்து வந்திச்சு" என்று ஒரு கடிதத்தை எடுத்து நீட்டி அதைப் பெற்றுக்கொண்டதற்காக ஒரு தாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டான்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தான் பாலன். அவன் முகத்தில் ஈயாடவில்லை. ஒரு கணம் சுரீர் என்று நெஞ்சுக்குள் ஏதோ ஊசி பாய்ந்ததுபோல் வலி எடுத்தது. அந்தக் கடிதத்துக்குள் இருந்த செய்தி அங்கிருந்த மற்ற இளைஞர்களுக்கும் தெரிய வேண்டிய செய்திதான். ஆனால் அதை அவன் அப்போது வெளிப்படுத்த விரும்பவில்லை. பொறுத்திருந்து போலீஸ் லாரி அங்கிருந்து கிளம்பிய பிறகு மற்றவர்களிடம் சொல்ல நினைத்தான்.

செல்லம்பாள் வந்து சேர்ந்தாள். அவள் முகத்திலிருந்த பயம் இன்னும் மாறவில்லை. பரிதாபமாகப் பாலனைப் பார்த்தாள். கண்கள் குளங்களாக மாறியிருந்தன.

"செல்லம், நீ ஒண்ணுக்கும் கவலைப்பட வேண்டாம். நடந்த எல்லா விஷயத்தையும் போலீஸிலே சொல்லிடு. மாதவன் முன்னாலேயே உங்கிட்ட எப்படியெல்லாம் நடந்துக்கிட்டான்கிறதையும் சொல்லு. அம்மா உனக்குத் துணையாத்தான் வருது. நாங்க அத்தனை பேரும் உனக்குப் பின்னாலே இருக்கோம். நாளைக்கே நீ இங்கே திரும்பிடலாம். கணேசன் இப்போ வந்திடுவான். காலையிலே அவனை ஸ்டேஷனுக்கு அனுப்பி வைக்கிறேன். எதுக்கும் நீ கவலைப்படாதே!" என்று ஆறுதல் கூறிச் செல்லத்தை வேலம்மாளோடு அனுப்பிவைத்தான் பாலன்.

போலீஸ் லாரி அங்கிருந்து நகர்ந்தது. பிறகு வேகமாகச் செம்மண் புழுதியை வாரி இறைத்துக்

கொண்டு விரைந்தது. இராணியை அலுவலக வாசலில் இறக்கி விட்ட பின், தோட்டத்தை விட்டே வெளியேறி நெடுஞ்சாலையில் திரும்பி மறைந்தது.

லயத்தில் கூடியிருந்த கூட்டம் கலையத் தொடங்கியது. இருபது முப்பது இளைஞர்கள் மட்டிலும் பாலனைச் சூழ்ந்துகொண்டு நின்றார்கள். பாலன் மெதுவாக அவர்களிடம் தனக்கு வந்த கடிதத்தின் செய்தியைக் கூறினான்.


"இப்பத்தான் எனக்கு ஒரு சேதி கிடைச்சுது. என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டாங்க" என்று அமைதியோடு தகவலை வெளியிட்டான் பாலன்.

"என்ன?"

கடிதத்தை எடுத்து அங்கிருந்த இளைஞர்களில் ஒருவனிடம் நீட்டினான். கடிதம் அப்படியே பல கைகளுக்கு மாறியது. அதில் பாலன் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குப் பள்ளிக்கூடத்தை அனுமதியின்றிப் பயன்படுத்தியதாகவும் கட்டுப்பாட்டை மீறி விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டதாகவும் அதனால் வேலையிலிருந்து அவனை நீக்கியிருப்பதாகவும் எழுதியிருந்தார்கள்.

"பாலா, இதை நாங்க இப்படியே விடப்போறதில்லை; இது உன்னோட பிரச்னையில்லே, இதை நீ எங்க கிட்டே விட்டுடு" என்று குமுறினான் ஒருவன்.

பாலன் தன் கவலைக்கிடையே மெல்லச் சிரிக்க முயன்றான். அவர்களால் தனக்காக ஏதும் செய்ய முடியுமென்று பாலனுக்குத் தோன்றவில்லை. ஆனாலும் அந்த அளவுக்காவது தீமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் துணிவு அவர்களுக்குள் வளர்ந்திருப்பதை அவன் தனக்குள் வரவேற்றான்.



"நீங்க எனக்காக எதுவுமே செய்யவேண்டாம். ஆனால் இதை என்னோட சொந்த விஷயமா நினைக்காததுனாலேதான் நான் உங்களுக்கு இதைச் சொன்னேன். நீங்க இப்ப எனக்காகக் கோபப்பட்டீங்களே, உங்களோட இந்தக் கோபம் இப்போதைக்கு எனக்குப் போதும். வீணா எனக்காக மலையோட போய் மோதி உங்க தலையை உடைச்சுக்காதிங்க. என்னோட கூடப் பிறந்த முத்து ஒருத்தன் இப்ப ஜெயிலுக்குப் போறது போதும்."

அப்போது அங்கே ஒரு வாடகைக் கார் வந்து நின்றது. அதற்குள்ளிருந்து பரபரப்போடு குதித்தான் கணேசன். தோட்டத்துக்குள் நுழைந்தவுடன் அதன் முகப்பிலேயே அவன் எல்லாச் செய்திகளையும் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்திருந்தான். சிரம்பானிலிருந்து அவன் எஸ்டேட்டை நோக்கி விரைந்தபோது, அவனுக்கு எதிரில் வந்த போலீஸ் லாரிக்குள்தான் அவனுடைய செல்லமும் பாலனின் தாயாரும் இருந்திருக்கிறார்கள்.

கணேசன் இங்கு வந்தவுடன் அவனுக்கு மற்றோர் அதிர்ச்சி தரும் செய்தி காத்திருந்தது. பாலனின் தோட்டப்பள்ளி ஆசிரியர் வேலைக்குச் சீட்டுக் கிழிக்கப்பட்ட செய்தி அது. பாலன் தன்னுடைய நிலையைப் பொருட்படுத்தாமல் நண்பனுக்கு ஆலோசனை கூறினான்.

"கணேசா, நீ சிரம்பானுக்குத் திரும்பிப் போ. உடனே நீ செல்லத்தைப் பார்க்கணும்னு அனுமதி கிடைக்காது. நாளைக்குக் காலையிலே நீ பார்க்கலாம். செல்லத்தைப் பத்தி நீ கொஞ்சமும் கவலைப்படவேண்டாம். எங்கம்மாவும் துணைக்குப் போயிருக்கு."

கணேசன் ஒரு நிமிடம் மரம் போல் வாய் பேசாமல் மௌனமாக நின்றுவிட்டு, "இப்போ எனக்கு இங்கேதான் வேலை இருக்கு; காலையிலே போய்ச் செல்லத்தைப் பார்த்துக்கிறேன்" என்றான்.

"பொழுது இருட்டிப் போச்சு. நான் எங்கப்பாவுக்கும் தம்பி தங்கச்சிகளுக்கும் ஆறுதல் சொல்லணும். முத்துவும் போயிட்டான். என்னோட வேலையையும் பறிச்சிட்டாங்க. இப்ப, கொஞ்ச நேரம் நான் குடும்பத்தோட இருக்கேன்; காலையிலே நாம சந்திக்கலாம்" என்றான் பாலன்.

"சரி! பாலா, நீ போ!" என்று பாலனை அனுப்பி விட்டு, "வாங்க நாமெல்லாம் கொஞ்சம் மாரியம்மன் கோயில் பக்கம் போவோம். அங்கே உட்கார்ந்து பேசுவோம்" என்றான் கணேசன். தங்களுக்கு மத்தியில் கணேசனைக் கண்டவுடன் இளைஞர்களுக்கு மத்தியில் ஒரு புதிய தெம்பு பிறந்தது. பாலனுக்கிருந்த மன நிலையில் அவர்கள் அப்போது அவனுக்குச் சிரமம் கொடுக்க விரும்பவில்லை. கூட்டம் மாரியம்மன் கோயிலை நோக்கி நகர்ந்தது.

தனியே விடப்பட்ட பாலன் தன் வீட்டுக்குள் நுழைந்தான். அங்கே அவன் தங்கைகள் செல்லமும் கமலமும் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் அண்ணன் முத்துவைப் போலீஸ்காரர்கள் அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். மற்றோர் அண்ணன் பாலனுக்கு வேலை போய்விட்டது. சின்னத் தம்பியை அழைத்துக்கொண்டு தாயாரும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறாள். தகப்பனார் வீரப்பன் முழங்கால்களில் கைகளைக் கட்டிய

படி துயரமே உருவாய்த் தரையில் குந்தியிருந்தான். அவனுடைய பார்வை எங்கோ சூனியத்தை வெறித்து நோக்கியபடி இருந்தது. "இனி இந்தக் குடும்பம் என்னத்துக்கு ஆகும்? மூத்த பிள்ளை முருகன் குடும்பத்தையே கைகழுவிட்டான். முத்துவும் முரட்டுத்தனமாகக் காரியத்தைச் செய்திட்டு உள்ளே போயிட்டான். இனிமே அவன் திரும்பி வந்தால்தான் நிச்சயம். பாலனோட பொழைப்பிலேயும் மண்ணு விழுந்திடுச்சி, இனி இந்தக் குடும்பம் என்னத்துக்கு ஆகும்?" வீரப்பனின் நெஞ்சுக்குள் அலை அலையாக நினைவுகள் தலை தூக்கி மோதிக் கொண்டிருந்தன.

தன் தகப்பனருக்கு அருகில் உட்கார்ந்தபடி வீரப்பனைப் பார்த்து, "அப்பா!" என்று குரல் கொடுத்தான் பாலன். வீரப்பன் மௌனமாகத் தன் மகனைத் திரும்பிப் பார்த்தான்.

"நீங்க கொஞ்சங்கூடக் கவலைப்படாதிங்க அப்பா; முத்துவுக்குத் தண்டனை கிடைச்சாலும் அது அதிகமான தண்டனையா இருக்காது. நல்ல வக்கீல் வச்சு வாதாடுவோம். எப்படியும் அவனைச் சீக்கிரமா வெளியே கொண்டாறது என்னோட பொறுப்பு" என்றான் பாலன்.

"கேசு"க்குப் போறதுன்னு பணம் வேணுமே பாலா? உனக்கும் வேலை போயிடுச்சு, நாங்க சம்பாரிக்கிறது வீட்டுச் செலவுக்கே பத்தாது. வம்பு, வளக்கு, வக்கீலுன்னு நம்பளாலே தாங்கக்கூடிய சங்கதியா அது?"

வீரப்பனின் கூற்றிலிருந்த அப்பட்டமான உண்மைகள் பாலனின் இதயத்தைப் பற்றி ஓர் உலுக்கு உலுக்கின. "ஆமா, வயிற்றுச் சோத்துக்கே வழியில்லாதப்ப, வழக்குக்குச் செலவு செய்யப் பணத்துக்கு எங்கே போறது?"

"இந்த வேலையிலே நான் கடைசி வரையிலே இருக்கணும்னுதான் ஆசைப்பட்டேன்; அது முடியாமல் போயிடுச்சி" என்று சொல்லி நீண்ட பெருமூச்சு விட்டான் பாலன். "இதிலே இருந்தால் தோட்டத்துப் பிள்ளைங்களுக்கு ஏதாச்சும் செய்ய முடியும். குடும்பத்துக்கும் உதவியா இருக்கும்னு நினைச்சேன்... ஆனா?..."

"உனக்கு எதுக்கப்பா இந்த ஊர் வம்பு? கடைசியிலே நீதானே சிரமப்படறே? நம்ப குடும்பந்தானே திண்டாடப் போகுது?"

"எங்கேயாவது போய் நான் ஒரு வேலை தேடிக்கிட்டு நம்ப வீட்டுக்கு மாச மாசம் பணம் அனுப்பறேன்பா."

"உங்கண்ணன் முருகனும் இப்படித்தான் சொன்னான்."

"அப்பா!" என்று பதறினான் பாலன்; "சத்தியமாச் சொல்றேன்பா; நான் எங்கே இருந்தாலும் நம்ப வீட்டையும் மறந்திடமாட்டேன்; தோட்டத்திலே வாழறவங்களையும் மறந்திடமாட்டேன், முந்தியே நான் ஒரு முடிவுக்கு வந்திட்டேன். இனிமே இந்தச் சன்மத்திலே நான் இன்னொரு கல்யாணம் செய்துக்கப் போறதில்லே."

"பாலா!" என்று அதட்டினான், அவன் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்ட வீரப்பன்.

"இந்த முடிவை நான் இப்பத் திடீர்னு செய்திடலே. கண்ணம்மாவைக் கல்யாணம் செய்துகிட்டு ஒரு நாள் வாழ்க்கையை நான் அவோட வாழ்ந்தாச்சு. அந்த நினைவு ஒண்ணே போதும். தனியாப் பொண்டாட்டி பிள்ளை, குடும்பம்னு எனக்கு ஆயிட்டா பிறகு என்னாலே மத்தவங்களுக்காக உழைக்க முடியாதுன்னு தான் கண்ணம்மா அப்படித் தற்கொலை செய்துக்கிட்டிருக்கு அப்பா! நான் உங்களையும் மறந்திடமாட்டேன்; தோட்டக்காட்டிலே வாழ்றவங்களையும் மறந்திடமாட்டேன். கவலைப்படாதிங்கப்பா..."

தன்னுடைய மகன் பாலனைப் புரிந்து கொள்வது வீரப்பனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. பாலன் வேறு வேலை தேட வேண்டுமென்றால், குடும்பத்தை விட்டுப் பிரிந்து அவன் வெளியூர் செல்ல வேண்டும். முத்துவும் வீட்டில் இல்லாத நிலையில் பாலனும் வீட்டை விட்டுப் போவது வீரப்பனுக்குப் பெரும் கலக்கத்தைக் கொடுத்தது.

"பள்ளிக்கூட நேரத்துக்கப்பாலே நீ பாடம் நடத்தாமல் இருந்திருக்கணும். மத்தவங்களுக்காக உழைச்சதுக்கு என்ன பலன் கிடைச்சது பார்த்தியா?"

"அப்பா, நூறு வருஷமாக் குனிஞ்சு கொடுத்து, குனிஞ்சு கொடுத்துக்கிட்டுப் பட்டாச்சு. கொத்தடிமைக் கூலியா வாழ்க்கையை நடத்தியாச்சு. நம்ப சமுதாயத்தோட தன்னம்பிக்கையே இதனாலே பறி போயிடுச்சு. அடுத்த தலைமுறையாவது அடிமையா வாழக்கூடாதுன்னு நான் ஆசைப்படறேன். எல்லாரையும்போல நாமும் சுதந்தரமாகக் கைவீசி நடக்கக் கத்துக்கணும். அதுக்காக என்னைப் போலே பத்துப் பேர் துணியவேண்டிய காலம் வந்திருச்சு. இதிலே என் போராட்டம் தனிப் போராட்டமா இருந்தாலும் நான் கவலைப்படப் போறதில்லே."

தனக்குப் புரியாத மொழியில் தன் மகன் பேசுவதுபோல் உணர்ந்தான் வீரப்பன். ஆனாலும் தன்னுடைய மகனின் பேச்சில் ஒருவகைச் சத்திய வைராக்கியம் ஒலிப்பது போல் வீரப்பனுக்குத் தோன்றியது.

இந்தச் சமயத்தில் லயத்தை ஒட்டிய தெருவில் கூட்டங்கூட்டமாகச் சிலர் பேசிக்கொண்டு வருவது கேட்டது. எழுந்து வெளியில் சென்று எட்டிப்பார்த்தான் பாலன். அங்கே சிறு கூட்டமாக நாற்பது ஐம்பது தொழிலாளர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வீட்டின் முன்பும் நின்று ஏதோ சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

(தொடரும்)

பரவெளி ஆய்வில் சுமார் 740 துணைக்கோளங்கள் தற்போது பூமியைச்சுற்றி வருகின்றன. அவற்றுள் தொடர் நிலைத் துணைக்கோளமும், பருவ நிலைத் துணைக் கோளமும் அடங்கும். குறிப்பாக பரவெளி ஆய்வில் அங்கு என்ன நடக்கிறது என்பதும், சுற்றுச் சூழ்நிலையில் பூமியில் என்ன நடக்கப்போகிறது என்பதும் ஆராயப் படுகின்றன.



கரிபியன் தீவுகளில் இருக்கும் தென்னை மரங்களின் தேங்காய்கள் கோணல் வடிவமாகவே அதிகம் காணப்படுகின்றன. இதனால் கொப்பரைக்காக எடுக்கப்படும் தேங்காய்களை உரிப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றதாம். இதற்கு என்ன காரணம் என்று பிரிட்டிஷ் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து பார்த்தபோது ஒருவகைச் சின்னஞ்சிறு பூச்சிகளே என்று தெரிய வந்துள்ளது.

நமது நாட்டின் தேசிய மலரான செம்பருத்திப் பூவில் அதிகமாகத் தங்கச் சத்து உள்ளது. இச்சத்து இருதய நோயாளிகளுக்கு மிகவும் உகந்ததாகும். நெஞ்சு வலி, நெஞ்சு அடைப்பு முதலிய நோய்களுக்கு செம்பருத்திப் பூக்களில் ஐந்தைப் பறித்து இரண்டு கிளாஸ் நீர் விட்டுக் காய்ச்சினால் அது அரை கிளாஸ் அளவிற்குச் சுண்டும். சுண்டிய நீரைக் குடித்து வந்தால் மேற்கண்ட நோய்களைக் குணப்படுத்தலாம்.



உலகத்திலேயே மிகப் பெரிய, கனமான மணி ரஷியாவிலுள்ள மாஸ்கோவில் கிரெம்ளின் மாளிகையில் இருக்கின்றது.

தொகுப்பு:

செல்வராஜு. குமரன்,
கிள்ளான்.

நினைப்பகள்

கடந்த இதழில் தாங்கள் தைப்பூசத் திருவிழா வைப் பற்றி அரிய கருத்துக்களை வெளியிட்டிருந் ததைக் கண்ணுற்று மகிழ்ந்தேன்.

காவடி எடுக்கும்போது, சமயத்திற்குப் புறம்பான டப்பாப் பாட்டுக்களைப் பாடுவதை யும், தகரடப்பாக்களை அடித்துக் கொண்டு பேயாட்டம் ஆடுவதையும், பிறர்பார்த்துக் கேலி செய்கின்ற செயல்களையும் வன்மையாகக் கண்டித்துள்ளீர்கள்.

கோபுரம் போன்ற பெரிய காவடி எடுப் பதன் மூலம் தாம் பெரிய பக்தர் என நினைத் திருப்போரும், நீளமான அலகுக்காவடி எடுப் பதன் மூலம் ஆழமான பக்தியைக் காட்டுவதாகக் கருதி இருப்போரும், பிறர் பார்த்துத் தம்மைப் புகழ வேண்டும் என்பதற்காக நவீன முறையில் காவடியைச் செய்து வருவோரும் தங்களுடைய அர்த்தமுள்ள அறிவுரையைக் கேட்டு நடப்பார் கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சுங்கை கப்பட்டாணி எஸ். கண்ணன்

பயணங்கள்

"உறவுப்பயணம்" கட்டுரையைப் படிக்கும் போது நாமே ஒவ்வோர் இடத்திற்கும் சென்று வருவதுபோல் தோன்றுகிறது. படித்து முடித்த வுடன் "ஒரு கதையைப் படித்தோம்" என்ற எண்ணம் உள்ளத்தில் உதயமாகிறது.

சேுன் டுரியான் தோட்டம், பந்திங்
எஸ். அஞ்சலைதேவி

செய்திகள்

புதிய சமுதாயத்தில் தமிழகச் செய்திகளைப் பிரசுரிப்பது இல்லை. இது என்னைப்போன்ற தமிழக நிலவரப் பிரியர்களுக்குப் பெருத்த குறையே. வரும் இதழ்களில் தமிழகச் செய்தி களைச் சேர்ப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

தெலுக்கான்சன், ப. செல்வம்

கருத்துக்கள்

தைப்பூசச் சிறப்பிதழில் இடம்பெற்ற "பத்து மலை காவடிச் சிந்து" பல நல்ல கருத்துக்களைக் கொண்டுள்ளது.

புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்
எஸ். விஜய். விஜிதாஸ்

சிறுகதைகள்

ஆளூர் ஜலால் எழுதிய "வழக்கு" என்ற சிறு கதையும், ச. சுந்தராம்பாள் எழுதிய "தாயாக வாழ்கிருள்" என்ற கதையும் சுவையாக இருந் தன.

ஜெண்டராட்டா தோட்டம்,
தெலுக்கான்சன் சு. தனபால்

பதில்கள்

ஆசிரியர் முருகுவின் பதில்கள் யாவும் பிர மாதம். "இலக்கிய அரங்கம்" பகுதியில் டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களின் பதில்களும் தேன்போன்று இனிக்கின்றன.


புதிய சமுதாயம் நம் சமூகத்தினருக்கு வழி காட்டியாக இருக்கிறதென்று துணிந்து கூறலாம்.

பீடோர், பேரா ந. மனோகரன்

உண்மைகள்

"உண்மைகள்" தொடர்கதையின் முதல் அத்தியாயத்திலேயே சா. ஆ. அன்பானந்தன் தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

பத்து பகாட் ஆதி சரவணன்




மலேசியத் திராவிடர் கழகத்தின் தேசி யத் தலைவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் புதல்வி குணவதிக்கும் காலஞ்சென்ற இராமா னுஜம் அவர்களின் புதல்வன் பாலசந்திர னுக்கும் 5-2-78-இல் கிள்ளான் லட்சுமண மண்டபத்தில் கழகத்தின் தேசியத் துணைத் தலைவர் திரு இரா. மணிமாறன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

தொடர்புத் துறை அமைச்சர் டான்ஸ்ரீ வெ. மாணிக்கவாசகம், தொழிலாளர் ஆள் பலத் துறையின் துணையமைச்சர் மாண்புமிகு கு. பத்மநாபன், கூட்டரசுப் பிரதேச துணை அமைச்சர் மாண்புமிகு எஸ். சுப்பிரமணியம், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்பு மிகு வி. எல். காந்தன், டத்தோ என். எஸ். மணியம், மாண்புமிகு ஜி. வடிவேலு மற்றும் பல பிரமுகர்கள் உட்பட திருமணத்திற்கு 1,200க்கு மேற்பட்டோர் வந்திருந்தனர்.

திராவிட கழகத் தலைவி திருமதி ஈ. வே. ரா. மணியம்மை, திருவாரூர் தங்கராசு போன்ற தமிழகப் பிரமுகர்களிடமிருந்தும், இலங்கை யிலிருந்தும், மலேசியாவின் பல பாகங்களிலி ருந்தும் வாழ்த்துத் தந்திகள் வந்தன.

முன்னோட்டம்



வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

5.3.78 ஒரு தொடக்கம் ஒரு முடிவு எழுத்து: சுப்பிரமணியம் சக்கரவர்த்தி.

12.3.78 என்னைப்போல் ஒருவன் எழுத்து: எஸ். வைரக் கண்ணு.

ஞாயிறு தோறும் காலை 9 மணிக்குக் கலப்படம். 9.30 மணிக்கு இளைஞர் உலகம். 10 மணிக்கு நேயர் விருப்பம் பிற்பகல் 2 மணிக்குப் பூச்சரம். 3 மணிக்கு நாடகம் பிறக்கிறது.

சிறுகதை

(ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

5.3.78 மலர்வதெல்லாம் மணப்பதில்லை எழுத்து கே. ஆர். காளிதாசன், பினாங்கு.

12.3.78 பாசப்பிணைப்பு எழுத்து: வி. சாமி, பெட்டாலிங் ஜெயா.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

25-2-78 பெந்தோங் வி. பத்மாவதி எழுதிய மாறிப் போச்சு நெஞ்சம்.

4.3.78 தலைநகர் சந்திரபோஸ் எழுதிய முகூர்த்த நாள்.

11.3.78 தலைநகர் கிருஷ்ணம்மா எழுதிய என்ன முதலாளி சௌக்கியமா?

தொடர் நாடகம்

(திங்கட்கிழமை தோறும் இரவு 7–15க்கு ஒலிபரப்பாகிறது)

நீயில்லா வாழ்வு நிலவில்லா வானம் 2ஆம் பகுதி.
6.3.78 3ஆம் பகுதி.

நாடகம்

[சனிக்கிழமை தோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

25-2-78 நமக்குள் இருக்கட்டும். கம்பார் எஸ். வேலுமதி எழுதியது.



எஸ். வேலுமதி

4.3.78 ஆசைகள் நிறைவேறுமா? தலைநகர் முத்தரசன் எழுதியது.

11.3.78 சபதத்தின் விளைவு சிம்பாங் அம்பாட் கே. அஞ்சலை எழுதியது.

உள்ளம் கவர்ந்தவை

சனிக்கிழமை தோறும் பிற்பகல் மணி 3.31க்கு "உள்ளம் கவர்ந்தவை" (பரிசு நிகழ்ச்சி) ஒலிபேறுகிறது. நேயர்கள் ஒரு திரைப்பாடலைத் தேர்ந்தெடுத்து அப்பாடல் தங்களைக் கவர்ந்ததற்கான விளக்கத்தைப் புல்ஸ்கேப் தாளில் முக்கால் பக்கத்திற்குள் அடங்கும் வண்ணம் எழுதி ரங்காயான் மேரா பகுதிக்கு அனுப்பி வைக்கவேண்டும். சிறந்த எழுத்துப் படிவம் 10.00 வெள்ளி பரிசு பெறும். இந்நிகழ்ச்சியை வி. ஆறுமுகம் தயாரிக்கிறார்.

தொலைக்காட்சி

2.3.78 வியாழன் மாலை மணி 5.32க்கு இந்திப்படம் ஸ்ரீமான் சத்தியாவதி.

9.3.78 மாலை மணி 5.32க்கு தமிழ்ப்படம் அப்பா அம்மா

11.3.78 சனிக்கிழமை மாலை மணி 4—11க்கு இந்திப்படம் அமார் பிரேம்.

டி. வி. தொடர் நிகழ்ச்சிகள்

- திங்கட்கிழமை இரவு மணி 10.15க்கு மேரி டெபலர் மூர் ஷோ (நகைச்சுவைச் சித்திரம்)
- ஞாயிறு தோறும் இரவு 7.20க்கு கொம்பெட் அமெரிக்கர்களுக்கும் ஜெர்மனியர்களுக்குமிடையே நடந்த போர்க் காட்சிகள் நிறைந்த ஆங்கிலப் படம்.
- வெள்ளிக்கிழமைதோறும் இரவு மணி 7 15க்கு ஸ்பேஸ் 1999. எதிர்கால விஞ்ஞான அடிப்படையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஆங்கிலப்படம்.
- சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.26க்கு லோகன்ஸ் ரன்.

